ஏப்ரல். 18 - . ஏப்ரல் 24, 2010 April 18 - April 24, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



உயிர் வலிக்கும் கணங்கள்...!

## நல்லிணக்கமா? பழைய நிலைதானா?




மெல்ல இழுத்தல்!

## வடக்கு-கிழக்கின் தேர்தல் நிலவரம் கற்றுக்கொள்ளவேண்டிய விடயங்கள்

# மெல்ல இழத்தல்!

தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு அரசியலில் இது மிகவும் ஆபத்தான காலமாகும். சிறுபான்மையினரின் ஆதரவின்றி இந்த நாட்டில் ஆட்சித் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய முடியும் என்று கடந்த ஜனாதிபதித் தேர்தலில்



காண்பிக்கப்பட்டது. இப்போது, சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு - ஓர் அரசாங்கத்தையே அமைக்க முடியும் என்கின்றதொரு நிலை இந்தப் பொதுத் தேர்தல் மூலமாக உருவாகியுள்ளது. அதாவது, வெற்றிலைச் சின்னத்தில் தெரிவாகியுள்ள சிறுபான்மையின நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் - எதிர்க்கட்சிக்குத் தாவி விட்டாலும் கூட, ஆளுந்தரப்பின் பெரும்பான்மைக்கு ஒன்றும் ஆகி விடாது.

ஆக, இந்த நாட்டின் ஆட்சியை தீர்மானிப்பதற்கு இனி சிறுபான்மையினரின் தயவு, தாட்சண்யம் போன்ற இன்னபிற விடயங்கள் எதுவுமே தேவைப்படாது என்கின்ற இந்த நிலைவரமானது, தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு மிக மிக ஆபத்தானதாகும்.

உதாரணமாக, சிறுபான்மையினருக்குப் பாதிப்பை உண்டு பண்ணுகின்ற சட்டங்கள் ஏதாவது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது கூட, அதை சிறுபான்மை உறுப்பினர்களால் தடுத்து நிறுத்த முடியாது போகும். அதாவது, ஆளுந்தரப்பிலுள்ள சிறுபான்மையின நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தாலும் - அரச தரப்புச் சிங்கள உறுப்பினர்கள் நினைத்தால், அவை நிறைவேறும்.

பொதுவாக சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இம்முறை குறைவடைந்துள்ளது. குறிப்பாக, ஆளுந்தரப்பு சார்ந்த சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை - எக்கச்சக்கத்துக்கு விழுந்து போயுள்ளது.

ஆனால், கடந்த நாடாளுமன்றங்களில் இந்த ஆபத்து பெரிதாக இருக்கவில்லை. ஆளுந்தரப்பில் கணிசமான முஸ்லிம், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களின் ஆதரவின்றி ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாததொரு நிலைவரமும் இருந்தது. ஆனால், இந்தப் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புச் சார்பாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிறுபான்மையினர்களின் எண்ணிக்கை மிக மோசமாக வீழ்ச்சி கண்டுள்ளது.

எனவே, இந்த நிலைமை உருவாகக் காரணம் என்ன என்பது குறித்தும், இதனால் சிறுபான்மை சமூகங்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் பற்றியும் நாம் மிக ஆழமாக ஆராய வேண்டியுள்ளது. அதேவேளை, இந்நிலையால் ஏற்படக்கூடிய ஆபத்துகளிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்ளலாம் என்பது குறித்தும் சிறுபான்மை சமூகங்கள் மிக அவசரமாக சிந்திக்க வேண்டியிருக்கிறது.

சிறுபான்மை சமூகங்களுக்குள் தோன்றியுள்ள அரசியல் தலைமைத்துவப் போட்டியும், கட்சி அரசியல் முரண்பாடுகளுமே மேற்படி நிலை உருவாகுவதற்கு மிக அடிப்படையான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. இந்த நிலைமைகளை சிங்களப் பேரினவாதம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

**மப்றூக்**

அதேவேளை, சிறுபான்மை சமூகங்களுக்குள் இந்த அரசியல் பிளவுகளையும், தலைமைத்துவச் சண்டைகளையும் மிக நுணுக்கமாக உருவாக்கிவிடுவதே சிங்களப் பேரினவாதம்தான் என்கிறதொரு குற்றச்சாட்டும் இருக்கிறது. அதையும் மறுப்பதற்கில்லை!

அப்படியென்றால், அடுத்த விரல்களின் அசைவுகளுக்கேற்ப சிறுபான்மைத் தலைமைகள் ஆடுகின்றனவென்றால், அவைகளின் சுய புத்தி எங்கே போயிற்று? அந்தத் தலைமைகளெல்லாம் தமது தலைகளைக் கழற்றி எங்காவது அடகுக் கடைகளில் வைத்து விட்டா அலைகின்றன என்று பதிலுக்கு கேட்போரிடம் - சொல்வதற்கு நம்மிடம் விடைகள் இல்லை!

கடந்த நாடாளுமன்றத்தில் 25 முஸ்லிம் உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால், இம்முறை 14 பேர் மட்டுமே தெரிவாகியுள்ளனர். தேசியப் பட்டியல் மூலமாக மேலும் 05 முஸ்லிம் உறுப்பினர்கள் வர வாய்ப்புள்ளது. அப்படிப் பார்த்தாலும் 19 முஸ்லிம் உறுப்பினர்களே இம்முறை நாடாளுமன்றத்தில் இருப்பார்கள்.

(கண்டி மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தெரிவாகலாம் என்று அனுமானிக்கப்படும் முஸ்லிம் உறுப்பினர்களையும் சேர்த்தே இந்தக் கணக்குப் போடப்பட்டுள்ளது)

அதுபோலவே, கடந்த அரசாங்கத்தில் 14 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். அத்தனை பேரும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள். ஆனால், இம்முறை ஆளுந்தரப்பில் 05 முஸ்லிம்கள் மட்டுமே தெரிவாகியுள்ளனர். சிலவேளை, தேசியப் பட்டியல் மூலமாக மேலும் 03 முஸ்லிம்கள் ஆளுந்தரப்புக்குக் கிடைக்கலாம். அப்படிப் பார்த்தாலும், 08 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் இம்முறை ஆளுந்தரப்பில் இருப்பார்கள்.

இவைபோலவே, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளும் இந்தத் தேர்தலில் - கடந்த முறையை விடவும் குறைவான உறுப்பினர்களைத்தான் பெற்றுள்ளன. இம்முறை இடம்பெற்ற தேர்தலில் ஐ.தே.முன்னணியின் யானைச் சின்னத்தில் மு.காங்கிரஸ் போட்டியிட்டிருந்தது.

இந்த இழப்புகளுக்கெல்லாம் என்னதான் காரணம்?

குரங்கு பிரித்த அப்பம் போல், பல கட்சிகளுக்கும், சுயேச்சைகளுக்குமென சிறுபான்மையினரின் வாக்குகள் சிதறிப் போனமையே மேற்படி இழப்புகளுக்கான முதற் காரணமாகும். அதனால்தான், சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.



உதாரணமாக, இம்முறை அம்பாறை மாவட்டத்தில் 03 முஸ்லிம் உறுப்பினர்களே தெரிவாகியுள்ளார்கள். ஆனால், கடந்த முறை 04 நாடாளுமன்ற உறுப்பினர்களை முஸ்லிம்கள் பெற்றிருந்தார்கள். இத்தனைக்கும் இந்த மாவட்டத்தில் முஸ்லிம்கள்தான் பெரும்பான்மையினர்.

நடந்து முடிந்த தேர்தலின் போது, அம்பாறை மாவட்டத்தில் - ஐ.தே.முன்னணி கிட்டத்தட்ட 91 ஆயிரம் வாக்குகளைப் பெற்றது. அதற்காகக் கிடைத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 ஆகும். இரண்டும் முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள். இதில் கிட்டத்தட்ட 60 ஆயிரம் வாக்குகள் முஸ்லிம்களுடையவை!

அதுபோலவே, வெற்றிலைக் கூட்டணி 01 லட்சத்து 32 ஆயிரம் வாக்குகளைப் பெற்று 04 உறுப்பினர்களை வென்றது. இதில் அதாஉல்லா மட்டுமே முஸ்லிம் உறுப்பினர். ஆனால், வெற்றிலைக் கூட்டணிக்கு கிடைத்த முஸ்லிம் வாக்குகள் கிட்டத்தட்ட 55 ஆயிரமாகும்.

ஒருவேளை, முஸ்லிம்கள் அனைவரும் ஒரே அணியில் இம்முறை களமிறங்கியிருந்தால், நான்கு உறுப்பினர்களை மிக இலகுவாக பெற்றெடுத்திருக்கலாம். ஆனால், முஸ்லிம்களுக்குக் கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவ மொன்று இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களைச் சென்றடைந் திருக்கின்றது.

(விருப்பு வாக்குகளைப் பெறுவதற்காக, வேட்பாளர்களிடையே இடம் பெற்ற வெட்டுக் குத்துகளும், குழிபறிப்புகளும் - மேற்படி முஸ்லிம் பிரதி நிதித்துவம் இழக்கப்பட்டமைக்கான ஏனைய காரணங்களாகச் சொல்லப்படுகின்றன)

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவமும் இம்முறை தப்பிப் பிழைத்திருக்கின்றது. 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில்; அம்பாறை மாவட்டத்துக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் தெரிவாகியிருந்தார். அதன்போது அந்தக் கட்சி பெற்ற வாக்குகள் 55 ஆயிரத்து 533 ஆகும். ஆனால், இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு 26 ஆயிரத்து 895 வாக்குகளே கிடைத்தன.

என்றுமில்லாவாறு அம்பாறை மாவட்டத்தில் வெற்றிலைச் சின்னத்துக்கு தமிழர் தரப்பிலிருந்து 10 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் இம்முறை கிடைத்துள்ளன என்று கூறப்படுகிறது.

மேற்படி கணக்குகளை வைத்துப் பார்க்கும் போது, மு.காங்கிரஸ் மற்றும் த.தே.கூட்டமைப்பு ஆகியவைகளின் வாக்கு வங்கிகளிலும் சரிவுகள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதை வேறோர் கோணத்தில் சொன்னால் தமிழ் - முஸ்லிம் வாக்காளர்களில் கணிசமானதொரு தொகையினர் ஆளும் பெருந்தேசியக் கட்சியின் பக்கமாகச் சாயத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலைமை தொடர்ந்தால், இருப்பதையும் சிறுபான்மையினங்கள் இழந்து போகும் நிலையொன்று உருவாகலாம்.


அவ்வாறானதொரு நிலை ஏற்படுவதென்பது மிகவும் ஆபத்தானது. நவீன ஆயுதங்களுடன் சண்டையிட வரும் எதிரிகளை, மிளகாய்த் தூளை வைத்துக் கொண்டு சந்திக்கும் ஒருவரைப் போல் - அப்போது சிறுபான்மைச் சமூகங்கள் நின்று தவிக்க நேரிடும்.

எனவே, சிறுபான்மையினங்கள் தமக்குள் நிலவும் அரசியலை மிக அவசரமாக மீள் பரிசீலனைக்குட்படுத்த வேண்டிய தேவையுள்ளது. ஆனால், அதுபற்றி யோசிப்பதற்கே பல, தமிழ் முஸ்லிம் தலைவர்கள் தயாராக இல்லை என்பதே இங்குள்ள கசப்பான செய்தியாகும்.

***குறிப்பு: இந்தக் கட்டுரையின் பேசுபொருளை மறுத்துப் பேச எவராயினும் முற்படுவார்களாயின், அவர்களிடம் ஒரேயொரு கேள்வி***

***ஆடுகளுக்கு காவலாக ஓநாய்களை அமர்த்த முடியும் என்கிறீர்களா?***

# வடக்கு கிழக்கின் தேர்தல் நிலைவரம்



## கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள்

**-அருள் மனோகரன்**

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்றத்



தேர்தலின் முடிவுகள் அரசாங்கத்தின் போக்கை இலங்கை மக்கள் பெரும்பாலும் ஆதரித்திருப்பதாகவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலைமை பல கேள்விகளை எழுப்பியும் இருகிறது. அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு பெரும் அதிருப்தி உண்டென்று சொல்லப்பட்டது. அந்த அதிருப்திக்கான காரணங்களும் சொல்லப்பட்டன.

இந்த அரசாங்கத்தின் போக்கை தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது என்ற அடிப்படையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மாற்றம் ஒன்று அவசியமானது என்று தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகள் பலவும் இணைந்து ஓர் எதிரணி வேட்பாளரை நிறுத்தியுமிருந்தன. அந்த வேட்பாளராகிய சரத் பொன்சேகா வெற்றி பெறுவார் என்று பலரால் எதிர்பார்க்கவும் பட்டது.

ஆனால், இதை எல்லாம் கடந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். இப்போது அவருடைய அரசாங்கம் ஏறக்குறைய அதே அளவுக்கான வெற்றியைப் பெற்றிருக்கிறது. இதுதான் இப்போது எல்லோரிடமும் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் மீதும் அதன் போக்கின் மீதும் ஊடகங்கள் பலவும் குற்றச்சாட்டுகளையும் அதிருப்திகளையும் கொண்டுள்ளன. எதிர்க் கட்சிகளும் அவ்வாறே



கடுமையான அதிருப்தியோடிருக்கின்றன. குறிப்பாக சிறுபான்மைத் தேசிய இனக்கட்சிகள் பல இந்த அதிருப்தியை அதிகமாகக் கொண்டுள்ளன.


இதைவிட மேற்குலகமும் அரசாங்கத்தின் கடந்த கால, நிகழ்கால போக்குகள், நடவடிக்கைகள் தொடர்பாக அதிருப்தியோடுள்ளது. வெளிப்படையாகவே இந்த அதிருப்தியை அவை வெளியிட்டும் வருகின்றன.

இந்த நிலையில் தேர்தல் முடிவுகள் வேறு விதமான செய்திகளைச் சொல்லியிருப்பது ஏன்? அது எப்படி முடிந்தது? அப்படியானால் மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

ஏனெனில் அரசாங்கத்தின் போக்கால் ஏற்படும் பாதிப்புகளை மக்கள்தான் நேரடியாக அனுபவிக்கிறார்கள். ஆகையால் அவர்கள் தங்களுக்கு எதிராக இயங்கும் ஓர் அரசாங்கத்தை, ஒரு தரப்பை எப்படி ஏற்றுக் கொள்வார்கள்?

உண்மையில் இதுதான் புரியாத புதிராக இருக்கிறது. இந்த அபித்தம்தான் எப்போதும் ஆட்சியாளருக்கு, அதிகார வர்க்கத்தினருக்கு வாய்ப்பாகிறது.

இவ்வளவுக்கும் இலங்கைத் தீவின் எந்த மையப் பிரச்சினைக்கும் பொருத்தமான தீர்வு யோசனைகள் எதனையும் மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தேர்தலின் போது முன்வைக்கவில்லை. அப்படியிருந்தும் அவரும் அவருடைய அரசாங்கமும் வெற்றிபெற்றிருப்பது எப்படி? அதுவும் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் தவறுகளுக்கும் குறைகளுக்கும் மக்கள் தேர்தலின் போதுதான் தண்டனை அளிக்கும் ஒரு வாய்ப்பும் நிலையும் இருக்கும் போது



ஏற்பட்டிருக்கும் வெற்றி எப்படி அமைந்தது?

ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்து அந்தக் குற்றச்சாட்டுகள் பெருமளவுக்கும் சுமத்தப்படவில்லை.

ஆகையால் இது குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனெனில் மக்களின் மனநிலை என்ன என்பதை அறிவதே அரசியலை முன்னெடுப்போரின் முக்கியமான பணியாகும். அதையே ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இல்லை என்றால் மக்களுக்கும் அவர்களைப் பற்றிச் சிந்திப்போருக்கும் இடையில் பாரிய இடைவெளிகள் ஏற்படும்.

மஹிந்த ராஜபக்ஷ இப்படி சிக்ஸருக்கு மேல் சிக்ஸர் அடிப்பதற்குக் காரணம் ரணில் விக்கிரமசிங்கவின் பலவீனம் தான் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. ரணிலின் பலவீனங்களை மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய பலமாகக் கொள்கிறார்.

ரணிலுக்கு சந்திரிகா காலத்திலிருந்து நல்ல வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவர் அவற்றைப் பயன்படுத்தத் தவறிவிட்டார். அப்படி அவர் தவறுவிடும் போதெல்லாம் அவருடைய போட்டியாளர்கள் இலகுவாகவே வெற்றிபெற்று விடுகிறார்கள். அது சந்திரிகாவாக இருந்தாலும் சரி, மஹிந்த ராஜபக்ஷவாக இருந்தாலும் சரி, அல்லது நீங்களாகவோ நானாகவோ இருந்தாலும் சரி. எதிரணிக்கு வெற்றிவாய்ப்புகளை வழங்கும் ஓர் எதிர்க்கட்சித்தலைவர் ரணில்.

உண்மையில் மாற்றமொன்றை விரும்பியவர்களும் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். காரணம், மாற்றம் வேண்டும் என்ற கருத்துருவாக்கத்தை முன்வைத்த ஊடகங்களும் ரணில் உட்பட்ட எதிர்க் கட்சிகளின் எந்தத் தலைவர்களும் அதை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போகவில்லை. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், அடுத்து வந்த ஒரு மாதத்துக்குள்ளேயே அவர்கள் சிதறிப் போனார்கள். அவர்களுடைய 'மாற்றம்' என்ற கோரிக்கைக்கு ஆதரவளித்தவர்கள் நடுத்தெருவில் கைவிடப்பட்டார்கள்.

தொடர்ந்தும் அந்த எண்ணக்கருவோடும் ஒரு பொருத்தமான செயற்திட்டத்தோடும் எதிர்த்தரப்பினர் நின்றிருந்தால் மஹிந்த ராஜபக்ஷ இப்படி மாபெரும் வெற்றிவாய்ப்பைப் பெற்றிருக்க முடியாது. மீண்டும் ஓர் அதிகாரம் நிறைந்த ஆட்சி உருவாகுவதற்கு வாய்ப்பிருந்திருக்காது.

எதிர்க்கட்சிகளின் மீதான நம்பிக்கை இழப்பு சிங்கள மக்களை மிக மோசமாகப் பாதித்தது. அதனால் அவர்கள் அவற்றுக்குத் தண்டனை அளிக்கும் விதமாக தங்களின் வாழ்க்கையைத் தியாகம் செய்து இந்தத் தீர்ப்பை அளித்திருக்கிறார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு மாற்றான ஒரு தலைவரை சிங்கள மக்கள் கண்டு பிடிக்கும் வரை அவருக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகம் உண்டு என்று ஒரு நண்பர் சொன்னது இப்பொழுது நிரூபணமாகியிருக்கிறது.

ஆகவே மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி தான் கேள்விக்கிடமில்லாமல் தொடரப் போகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)


PADMASHREE
GROUP OF INSTITUTIONS
Bangalore offers



MPH
Masters in Public Health
Duration: 2 years
Eligibility: MBBS, BDS, BHMS, BAMS, BUMS, Physiotherapy, Medical Lab Technology, Nursing, Pharmacy, Occupational Therapy and other Allied Health Science Graduates.

BHA
Bachelors in Hospital Administration
Duration: 3 years
Eligibility: 10+2 / P.U.C. / H.S.C. with any subject combination
*Approval from GOK & RGUHS awaited

SPOT ADMISSION 19th & 20th APRIL JAFFNA

Admission Open | Only Few Seats Available | Join Today for a Secure Future

MBA
Recognised by AICTE & Affiliated to Bangalore University
Salient features of PGI: Sprawling 30 acres Wi Fi campus. Qualified and experienced faculty. Regular industry & academia interaction programs. Separate hostels for men and women

RGUHS
Bachelors in Physiotherapy
Masters in Physiotherapy
B.Sc. Medical Lab Technology
M.Sc. Medical Lab Technology
B.Sc. Nursing
P.C.B.Sc. Nursing
M.Sc. Nursing
Masters in Hospital Administration
Diploma
General Nursing and Midwifery*
* Recognised by Govt of Karnataka

BU
B.Sc. Biotechnology
B.Sc. Biochemistry
B.Sc. Genetics
M.Sc. Biotechnology
M.Sc. Microbiology
M.Sc. Biochemistry
M.Sc. Organic Chemistry
Bachelors in Computer Application
Bachelors in Business Management
Bachelors in Commerce
Masters in Business Administration
Bachelors in Education



CONTACT:
0777 185425
077 3705902
EDASIA
Higher Education Consultants
For admission & information please contact:
Prof. Rajesh Shenoy - Director (PGI - Bangalore)
65, Manning Place, Colombo 06.
Tel/Fax: 2714212 E-mail: salralmran@gmail.com
Web: www.padmashree.org

10 Different Colleges 10 Different Countries 30 Different Courses Over 2000 Students

# சுடர் ஒளி

ஏப். 18 - ஏப். 24, 2010

85, ஜெயந்தவல் விமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com


## வாக்குறுதி நிறைவேறுமா?

இலங்கையின் ஏழாவது நாடாளு மன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் இம்மாதம் 22ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட இருக்கிறது.

அதற்கு முதல்நாள் 21ஆம் திகதி புதிய அமைச்சரவை பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும்.

இந்தத் தேர்தலில் 158 தொகுதி களுக்கான முடிவுகள் மட்டுமே தற் பொழுது வெளியாகியுள்ளன. நாவலப் பிட்டியிலும் திருகோண மலையிலும் வாக்களிப்பு குழம்பிய பகுதிகளில் 20 ஆம் திகதி மீண்டும் வாக்களிப்பு நடை பெற இருக்கிறது.

ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு தேர்தல் முடிவுகள் எதிர்பாராத ஒரு பெரும் வெற்றி என்றே கூறவேண்டும்.

ஜனவரி 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொது வேட்பாளர் சரத் பொன்சேகா இவ்வ ளவு மோசமான தோல்வியை அடை வார் என்று எவருமே எதிர்பார்க்க வில்லை. அதே போன்று கடந்த 8 ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலிலும் எதிர்பாராத விதமாக எதிர்கட்சிகள் மிகவும் மோசமான முறையில் தோல்வி கண்டுள்ளன.

2005 டிசம்பர் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாத நிலை யில் இருந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 2010 தேர்தலில் அமோக வெற்றியீட்டி இருப்பதும், நாடாளுமன்றத்தில் மூன் றில் இரண்டு பங்கு பெரும்பான் மையைப் பெறுவதற்கு தற்போதே வியூகம் அமைக்கப்பட்டு வருவதும் எதிர்கால அரசியல் குறித்து பல்வேறு ஊகங்களையும் சந்தேகங் களையும் ஏற்படுத்தி வருகின்றன.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்த லில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மூன்றில் இரண்டு பெரும்பாண்மை பெற்றிருந் தார். இதன் மூலம் 1978 ஆம் ஆண்டு புதிய அரசமைப்பை உருவாக்கினார். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதி பதி முறையே இதில் பிரதானமாகும். இந்த மூன்றில் இரண்டு பெரும்பான் மையைப் பயன்படுத்தி இனப்பிரச்சி னைக்குத் தீர்வுகாண ஜே.ஆர். அப் போது நினைக்கவில்லை. தமிழ் மக்க ளின் உரிமைக் குரலை நசுக்கவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி பயன்படுத்தப்பட்டது. இந்த நிறைவேற்று அதிகாரம் இருந்திரா விடில் விடுதலைப்புலிகளை தம்மால் தோற்கடித்திருக்கவே முடியாது என்று சில மாதங்களுக்கு முன்னர் - விடுத லைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு - ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்து இருந்தார். ஆகவே நாடாளுமன்றத்தில் பெற்றுக் கொள்ள முயற்சிக்கப்படும் இந்த மூன்றில் இரண்டு பெரும் பான்மை நிச்சயமாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு பயன்பட போவதில்லை. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் குரலை அடக்கவே பயன்படுத்தப் படப் போகிறது. இந்தப் பெரும்பான் மையை வைத்து இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணுமானால் நாட் டின் வரலாற்றில் அது பொன் எழுத்துக் களால் பொறிக்கப்பட்ட அத்தியாய மாக நிச்சயமாக இருக்கும்.

பொதுத் தேர்தலில் தெரிவாகும் தமிழ் எம்.பிக்களை அழைத்து இனப் பிரச்சினை குறித்து பேசப் போவதாக ஜனாதிபதித் தேர்தல் பிரசார நாட்க ளில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். தற்பொழுது தேர்தல் முடிவடைந்து உறுப்பினர்களும் தெரிவாகிவிட்டனர். ஜனாதிபதி தனது வாக்குறுதியை நிறைவேற்றுவாரா?

# இந்தியாவின் இதயம் ரணகளமாகி வருகிறது!

இந்தியாவின் வட மாநிலங்கள் அனைத்துமே மாவோயிஸ்ட்டுகளால் வறுத்தெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளாக மாவோயிஸ்ட்டுகளுக்கும் வட மாநில அரசுகளுக்குமான உள்நாட்டு யுத்தம் தொடர்கிறது. இப்போது



கோட்டையாக இருக்கின்றன. புரியும்படி சொன்னால் இலங்கையின் தமிழீழப் பகுதியில் சுமார் 16 ஆயிரம் சதுர கி.மீ. பகுதியை தனது ஆயுத பலத்தால் கைப்பற்றிவைத்திருந்தார்கள் விடுதலைப்புலிகள். இந்தியாவில் மாவோயிஸ்ட்டுகளின் கட்டுப்பாட்டில் ஏறக்குறைய ஏழு மாநிலங்கள் இருக்கின்றன. இவற்றில் உள்ள 150 மாவட்டங்கள் பொலிஸார் உள்ளே

ஆதரவான ஆட்களுக்கு பயிற்சி கொடுத்து, தனிப் படைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் மிக முக்கியமானது சல்வா ஜுடும் பிரிவு. இவர்கள் பொலீஸார் பார்க்க வேண்டிய அனைத்து வேலைகளையும் பார்க்கிறார்கள். இந்த சல்வா ஜுடும் பிரிவு ஏதாவது ஓர் ஊருக்குள் வந்து அங்கு உள்ள மக்களைக் கொல்லும். அல்லது விரட்டும். உடனே, ஊரைக் கொளுத்திவிடுவார்கள். இப்படி இந்தியப் படைபலம் மொத்தமாக இந்த மாநிலங் களில் குவிக்கப்பட்டுள்ளது.

இதைப் பார்த்து மாவோயிஸ்ட்டுகள் பயப்படவில்லை. 2004ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் நாள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) உதயமானது. இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட், மக்கள் யுத்தம், இந்திய மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் மையம் ஆகியவை இணைந்து உருவானது இந்த அமைப்பு. கடந்த 40 ஆண்டுகளாக



நக்சலைட்டுகள் இருக்கிறார்கள். நக்சல்பாரி எழுச்சி என்று அவர்களால் வர்ணிக்கப்படும் நிகழ்வின்போது கிடைத்த பெயர் காலப்போக்கில் குறைந்து, முற்றிலுமாக மறையும் காலத்தில்தான் மாவோயிஸ்ட் கிளர்ச்சி ஆரம்பித்தது. நந்திகிராம், சிங்கூர், லால்கர் ஆகிய இடங்களில் பெரும் மோதலாக அவை வெடித்தன. இவை பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் மட்டும் வெடிப்பதற்கு என்ன காரணம்?

''பழங்குடியினரின் வன வளங்களைத் தனியாருக்குத் தாரைவார்க்கும் ஒப்பந்தங்களுக்குத்

### இன்னும் வீரியமாக!

சத்தீஸ்கர் மாநிலம், மாவோயிஸ்ட்டு கள் செல்வாக்குள்ள பகுதி. அதில் மிக முக்கியமானது தாந்தேவாடா மாவட்டம். இது முழுக்கக் காடுகளால் சூழப்பட்ட நிலம். அங்கு மாவோயிஸ்ட்டுகளைத் தேடி இந்திய மத்திய ரிசர்வ் பொலீஸ்காரர்கள் முகாமிட்டனர். தேடுதல் வேட்டையில் மும்முரமாக இருந்தபோது, மாவோயிஸ்ட்டுகளால் சுற்றிவளைக்கப்பட்டார்கள். 76 பொலீஸார் சம்பவ இடத்தில் சாய்க்கப்பட்டார்கள். சமீபத்தில் ரத்தத்தை உறையவைத்திருக்கிறது இந்தச் செய்தி!

மேற்கு வங்காளம், சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒரிஸ்ஸா, மகாராஷ்ரா, ஆந்திரா, பீகார் ஆகிய ஏழு மாநிலங் களும் மாவோயிஸ்ட்டுகளின்



நுழைய முடியாத இரும்புக் கோட்டையாக இருக்கின்றன. அதாவது, சுமார் 60 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு மாவோயிஸ்ட்டுகள் வசம் உள்ளது என்று தகவல்கள் கூறுகின்றன. இந்த எல்லைக்குள் பொலீஸ் நடமாட்டம் என்பதே முழுமையாகத் தடை செய்யப்பட்டு உள்ளது. இந்த இடங்களை முற்றிலுமாக மாவோயிஸ்ட்டு களிடம் இருந்து கைப்பற்று வதற்காகத் தான் 'பசுமை வேட்டை' என்ற பெயரால் பெரும் போரை இந்திய மத்திய அரசு திட்டமிட்டது. ஆறு மாநிலங்களின் பொலீஸார், மாநில சிறப்பு பொலீஸ் படைகள், மத்திய அரசின் சி.ஆர்.பி.எப். படை, பி.எஸ்.எப் படை, துணை ராணுவப்படைகள், ராணுவத்தின் மிக முக்கிய அமைப்பான நாகா பட்டாலியன் என 50,000 பேர் மாநில எல்லைகளின் பல்வேறு பாகங்களில் ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டு உள்ளார்கள். இந்த வேட்டைக்காகவே வேட்டை நாய்கள், கருநாகங்கள், தேள்கள் ஆகிய மரபுச் சின்னங்களின் பெயரைத் தாங்கிய சிறப்புப் படைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தவிர, பழங்குடியினரில் பொலீஸுக்கு

( 21 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கின் தேர்தல் நிலைவரம்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

அதை யார் விரும்பினாலும் விரும்பாது விட்டாலும் இதுதான் யதார்த் தம். இந்த ஆட்சியில் ஏற்படப் போகின்ற அத்தனை விளைவுகளுக்கும் ரணிலும் ஏனைய எதிர்க்கட்சிகளுமே பொறுப்பு.

ஒரு நாட்டின் எதிர்க்கட்சிகளுக்கே அரசாங்கத்தையும் விடப் பொறுப்பு பல சந்தர்ப்பங்களிலும் உண்டு என்று சொல்லப்படுவதுண்டு. அதை இந்தக் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொண்டு தம்மைத் திருத்தி, ஒழுங்கமைத்துச் செயற்படவும் வேண்டும்.

இதேவேளை இந்தத் தேர்தலில் தாம் பெரு வெற்றி பெற்றிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சொல்லிப் பெருமைப்படுகின்றன. அதிலும் தாமே தமிழ், முஸ்லிம் சமூகங்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற கதை வேறு சொல்லப்படுகிறது, இந்தக் கட்சிகளின் பிரமுகர்கள் சிலரால். இதைவிட கவலைக்குரிய விசயம் இப்போது வேறில்லை. ஏனெனில் த.தே.கூட்டமைப்பு தன்னுடைய எட்டு உறுப்பினர்களின் இடத்தை இழந்திருக்கிறது. அதைவிட அரசாங்கத்தின் சின்னத்தில் போட்டியிட்ட டக்ளஸ் தேவானந்தா பெற்ற அதிகூடிய விருப்பு வாக்குகளை எந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராலும் பெற முடியவில்லை. அதுவும் யாழ்ப்பாணத்தில். அதேவேளை டக்ளஸின் கட்சி மூன்று உறுப்பினர் களையும் பெற்றிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மாநகரசபையை யும் த.தே.கூட்டமைப்பு இழந்திருக் கிறது. ஜனாதிபதித் தேர்தலின் போது, அது ஆதரித்த ஜனாதிபதி வேட்பாளர் வெற்றி பெறவும் இல்லை. இப்போது கூட்டமைப்புக்கு ஐந்து உறுப்பினர்களும் பிற கட்சிகளுக்கு நான்கு உறுப்பினர்களும் என்ற நிலைமைதான் வடக்கில் இருக்கிறது. இதை எப்படி வெற்றி என்று மெய்யான அர்த்தத்தில் சொல்ல முடியும்? இதை வைத்துக் கொண்டு எப்படி ஏகப்பிரதி நிதிகள் தாம் என்று வாதிட இயலும்?

கிழக்கிலும் ஏறக்குறைய வீழ்ச்சி நிலைதான். முஸ்லிம் காங்கிரஸும் தனித்து அங்கே நிற்கக் கூடியதாக இருக்கவில்லை. பலவீனமான நிலையிலிருக்கும் எதிர்க்கட்சியுடன் கூட்டு வைத்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் எதிர்காலம் இந்தக் கூட்டினால் கேள்விக்குள்ளாகும் நிலையே காணப்படுகிறது.

கிழக்கு முஸ்லிம் மக்களின் தேவை, மன நிலை ஆகியவற்றை நோக்கும் போது பலவீனமான எதிர்க்கட்சியுடன் நிற்கும் பாரம்பரியத்தை தமது அரசியல் தலைமை கொண்டிருப்பதை அவர்கள் தொடர்ந்தும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதே யதார்த்தம்.

வடக்கு கிழக்கில் இந்த அளவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இடங்களைப் பெற்றிருப்பது அவற்றின் அரசியல், அவற்றின் செயற்பாடு ஆகியவற்றின் மீதான ஈடுபாட்டின் காரணமாக என்று சொல்ல முடியாது. அரசாங்கத்தின் மீதான அதிருப்தி, தங்கள் கடந்த கால வாழ்க்கையின் பாதிப்புகளைப் பற்றிய நினைவுகளின் விளைவு போன்ற காரணங்களே இந்தத் தரப்புகளுக்கான வெற்றி வாய்ப்பை அளித்தன.

இந்த இடத்தில் சுரேஷ் பிரேமச்சந் திரன் கொஞ்சம் யதார்த்தமாகச் சிந்தித்திருக்கிறார். அவருக்கு உண்மை நிலைமை விளங்குகிறது. அதனால் தான் மக்களுடன் இணைந்திருக்க வேண்டும் என்ற சிந்தனை கூட்டமைப் புக்கு வந்திருக்கிறது. அதன் விளை வாகவே அது அதற்குரிய வேலைத் திட்டத்தை வகுத்துக்கொள்வதற்காக யாழ்ப்பாணத்தில் இந்த வாரம் கூடி ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

இது வரவேற்கவேண்டிய விசயம். ஆனால், இதை விளங்கிக் கொள்ளாமல், ஒருவருக்கு ஒருவர் முரண்பட்ட விதமாக கற்பனை ரீதியாக கருத்துச் சொல்லும் நிலை வருந்தத்தக்கது. அது மட்டுமல்ல, அது மீண்டும் பாரிய தோல்விக்கே கொண்டு போகும்.

வடக்கு கிழக்கில் மக்கள் ஒரு செய்தியை சொல்லியிருக்கிறார்கள். அதாவது தமக்கு யாரும் எதுவும் சொல்லத்தேவையில்லை. தமக்குத் தெரியும் யார் யார் எப்படி எப்படி நடந்து கொள்கிறார்கள்?' யாரிடம் என்ன தகுதிகள் உண்டு? எவரெவரை எந்தெந்த அளவில் வைத்துக் கொள்வது? என்ற விசயங்களை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அந்த வகையில்தான் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அதன்படியே வெற்றிகளும் அமைந்திருக்கின்றன.

இதை அரசியல் தலைமைகள் புரிந்து கொள்வது சிறப்பு. ஏனெனில் அப்படியென்றால்தான் அடுத்த தடவையாவது இவை சரியான மையத்துக்கு வர முடியும். மக்களுக்கும் பொருத்தமான சேவைகளை செய்ய முடியும்.

# நல்லிணக்கமா? பழைய நிலைதானா?

## வடக்கு - கிழக்கில் தேசியக் கட்சிகள் காலூன்ற வைத்த தேர்தல்

யாழவன்

இலங்கையில் ஏழாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் ஆரவாரம் அடங்கிவிட்டது; முடிவுக்கு வந்துவிட்டது.

தமிழ்த் தேசியத்தைப் புதைகுழி தோண்டிப் புதைக்கப் புறப்பட்ட நம்மவர்களுக்கும் தெற்குச் சக்திகளுக்கும் நல்ல பாடம் தேர்தல் மூலம் புகட்டப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடமாக நடந்த ஆயுத வழியிலான உரிமைப் போராட்டத்தை ஒடுக்கிவிட்டோம் என்று மார்தட்டிய சக்திகளுக்கு ஜனநாயக வழியில் தமிழ் மக்கள் நல்ல செய்தியை விடுத்திருக்கிறார்கள்.

போர் முடிவுக்கு வந்தாலும் இன்னமும் தமிழ்த் தேசியத்துக்கான உரிமைப்போராட்டம் தொடரத்தான் போகிறது என்ற செய்தியைத் தமிழ் மக்கள் தெற்குத் தலைமைகளுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் தமிழ்மக்கள் தமது உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். 30 வருடங்களாகச் சாத்வீக வழியில் தமிழ்த்



தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம், பின்னர் ஆயுதவழியில் இளம் தலைமையினரால் முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டமாக வர்ணித்து, பல்வேறு நாடுகளின் ஆயுத, உளவு உதவிகளைப் பெற்று பெரிய அளவில் யுத்தம் ஒன்றைத் திணித்து வன்னி மாவட்டத்தைச் சிதைத்து, பெரும் எண்ணிக்கையானவர்களின் உயிர்களைக் காவு கொண்டு விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதாக அரசு பெருமிதப்படுகிறது.

யுத்தத்துக்கு அடிப்படையான விடயம் என்ன என்பதைக் கண்டறிந்து தீர்வு ஒன்றைக் காண சிங்களத் தலைமைகள் தவறிவிட்டமையே நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியாமைக்கும் யுத்தம் ஒன்று தோன்றவும் காரணமாகும்.

முப்பது வருடங்களாகத் தமிழ்த் தலைவர்கள் போராட்டம் நடத்தி 83 இல் அந்தப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறி மீண்டும் இப்போது தமிழர் தலைவர்களால் அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைமையை அழிந்தது போன்று, தமிழ் அரசியல் தலைமையையும் அழிக்கும் செயற்பாடே நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அரங்கேற்றப்பட்டது.

தமிழ்த் தலைமை ஒன்று இருக்கக் கூடாது. ஆளும் - சிங்கள - தரப்பே இந்த நாட்டில் இருக்க வேண்டும். அந்தத் தரப்பே தமிழ் மக்களின் தேவைகளை, தீர்வுகளை நிறைவேற்ற வேண்டும். பேரம் பேசும் சக்தியாகத் தமிழர் தரப்பு இருக்கக் கூடாது என்ற சிந்தனையின் வெளிப்பாடாகவே வடக்கு, கிழக்குத் தேர்தல் நடத்தப்பட்டது.

தெற்குத் தலைமைகளின் அந்தச் செயற்பாட்டுக்குத் தமிழ் மக்கள் நல்ல பதிலடியைக் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து ஏகோபித்த தலைமையாக நாடாளுமன்றம் அனுப்பக்கூடாது என்ற நோக்கில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்காகப் பெரும் நிதி கைமாறல் செய்யப்பட்டு, சுயேச்சைக் குழுக்கள் களம் இறக்கப்பட்டன. அரசின் கரத்தைப் பலப்படுத்தும் நோக்கில் அந்தக் குழுக்களும் செயற்பட்டன. பிரசாரங்கள் செய்தன. ஆனால் அவர்களைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை. அத்தகைய சக்திகளை மக்கள் முற்றாக நிராகரித்தே விட்டார்கள்.

அரசுக்காகக் களம் இறங்கியவர்கள் சிறு எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றனர்.

இதற்குப் புறம்பாக - மேலும் சில தமிழ்க்கட்சிகளும் அரசின் அனுசரணையுடன் களம் இறங்கியிருந்தன. வெளிநாடுகளில் சுற்றுலா மேற்கொண்டுவிட்டு அரசின் ஆசியுடன் இலங்கை திரும்பி, அரசின் சதித்திட்டத்தை ஏற்று யாழ்ப்பாணத்துக்குக் காவடி எடுத்து தேர்தலில் போட்டியிட்டனர். இவர்களுக்கும் தமிழ் மக்கள் நல்ல பாடத்தைப் புகட்டியிருக்கிறார்கள்.

சுயேச்சைகள், தமிழ்க் கட்சிப் பிரமுகர்கள் எனக் களம் இறங்கியவர்களை எல்லாம் புறந்தள்ளிவிட்டு வடக்கு - கிழக்கில் உள்ள 31 ஆசனங்களில் 14 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கி, நல்ல தீர்ப்பை மக்கள் வழங்கியுள்ளனர்.

பேரம் பேசும் சக்தியாக ஏகோபித்த அளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் நாடாளுமன்றம் அனுப்பியுள்ளனர்.

இந்தச் சுயேச்சைக்குழுக்கள், தமிழ்க் கட்சிகள் களம் இறங்கி வாக்குகளைக் கூறுபோட்டமை, தேசியக் கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி போன்றவை காலூன்ற வாய்ப்பாக அமைந்துவிட்டது.

கடந்த 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் 22 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் நாடாளுமன்றம் சென்றனர். இம்முறை 14 பேரே நாடாளுமன்றம் செல்ல முடிந்தது. எட்டு ஆசனங்களைத் தேசியக் கட்சிகள் தம் வசப்படுத்தியுள்ளன.

தனிப்பட்ட குரோதங்கள் காரணமாகத் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களிடையே எழுந்த முரண்பாடுகள் ஒட்டுமொத்த தமிழினத்தையே பாதித்துள்ளன. எட்டு ஆசனங்கள் தேசியக் கட்சிகள் வசம் செல்ல இந்தச் சக்திகள் துணை போய் இருக்கின்றன.

பிளவுகளை ஏற்படுத்தாமல் ஒட்டுமொத்தமாகத் தமிழ்க் கட்சிகள் ஓரணியில் நின்றிருந்தால் தேசியக் கட்சிகளின் வாலை ஒட்ட நறுக்கியிருக்க முடியும்.

தேர்தல் முடிந்துவிட்டது. அடுத்து என்ன என்பதே சகலரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் தீர்வு ஒன்று முன்வைக்கப்படுமா?

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த லட்சக்கணக்கான மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி இயல்பு வாழ்க்கை வாழ வாய்ப்புக் கிட்டுமா?

அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப் படுவார்களா?

கடந்த 30 வருடமாகச் சிதைக்கப்பட்ட தமிழர் பிரதேசம் மீண்டும் கட்டியெழுப்பப் படுமா?

இந்தக் கேள்விகளுக்கான பதிலையே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றார்கள்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, பேரம் பேசும் சக்தியாக வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அரசு அழைப்பு விடுத்துள்ளது.

தேர்தல் முடிந்த கையோடு நடந்த செய்தியாளர் மாநாட்டில் அரசின் சிரேஷ்ட அமைச்சர் மைத்திரிபாலசிறிசேன இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

இந்த நாட்டின் எதிர் காலச் சந்ததியினருக்காக நாட்டைக் கட்டி எழுப்புவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் உட்பட எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் இணைய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இதற்குப் பதில் அளித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

பேச்சுக்கு வருமாறு அரசிடமிருந்து எழுத்து மூலமான அழைப்பு வந்தால், நாடாளுமன்றக்குழு கூடி பொறுப்புணர்ச்சியுடன் முடிவு எடுக்கப்படும் என்று சம்பந்தன் கூறியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தெற்குத் தலைமைகள் பயன்படுத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி, அவர்களை இனப்பிரச்சினை விடயத்தில் உள்வாங்கிச் செயற்பட முன்வருமானால் நாட்டை முன்னேற்ற வாய்ப்புக்கிட்டும்.

இலங்கையில் நடைபெற்று முடிந்த தேர்தலின் பெறுபேறுகள் - முடிவுகள் - அந்த நாட்டில் அதிகாரப்பகிர்வு - தேசிய நல்லிணக்கம் ஆகிய இரண்டையும் உருவாக்குவதற்கு அரசாங்கத்துக்கு அரிய சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது என்று அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்தவும் வளர்ச்சிப் பாதையில் முன்நோக்கிச் செல்லவும் உதவவேண்டும் என்று அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் றொபேட் ஓ.பிளேக் கூறியுள்ளார்.

இந்நிலையில் - நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள



அதிகளவு ஆதரவைப் பலமாகக் கொண்டு தேசிய நல்லிணக்கத்தை - அதற்கான இலக்கை - எய்தும் பொருட்டு மிக வேகத்துடன் செயலாற்றுவேன் என்று தேர்தல் முடிவுகள் வெளியானகையோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

உண்மையில் தேசிய நல்லிணக்கத்தை அவர் எட்டுவாராக இருந்தால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தி நிரந்தர தீர்வைக் கண்டு, தமிழ் மக்களின் மனங்களை வென்று, அவர்களை அரவணைத்துச் செல்வாரேயானால் நிச்சயம் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லும்.

அதைவிடுத்து கடந்த கால சிங்களத் தலைவர்கள் போன்று ஆட்சியை இழுத்துச் செல்ல இன்றைய சூழலைப் பயன்படுத்த முனைவாரேயானால் - நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சி என்பன எல்லாம் கானல் நீராகித்தான் போகும்.

இருந்த இடத்திலேயே நாடு இருக்கும். இதுவே யதார்த்த நிலையாகும்.

*****



# வன்னி அவலம் எப்போது முடியும்?

வன்னிப் போர் முடிந்து ஓராண்டு ஆகிறது. ஆனால், வன்னி மக்களின் துயரம் நீங்கவே இல்லை. வன்னியிலிருந்த மக்கள் இன்னும் அகதிகளாகவே இருக்கிறார்கள். 80 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் அகதி முகாம்களில். ஒரு இலட்சத்து 30 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் மீள்குடியமர்த்தப் பட்டு சொந்த ஊர்களில். ஏனையோர் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற வெளி மாவட்டங்களில்.

எல்லோரிடமும் இடம் பெயர்ந்தோருக்கான அட்டைகள் உண்டு. யார் எங்கே இருந்தாலும் எல்லோரும் இன்னும் துயரங்களோடும் பிரச்சினைகளோடும்தான் இருக்கிறார்கள்.

முகாம்களில் இருக்கும் 80 ஆயிரம் பேரும் எப்போது மீண்டும் தங்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்படுவோம் என்று தெரியாத நிலையில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். முகாம் வாழ்க்கை என்ற அந்த புதிய நரகத்தில் இருந்து தாங்கள் எப்போது விடுபடுவோம் என்பதே அவர்களுடைய எதிர்பார்ப்பு.

மிகவிரைவில் உங்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்படுவீர்கள் என்று அங்கே அதிகாரிகள் அவர்களுக்கு சொல்கிறார்கள். முகாம்களுக்குச் செல்லும்



அமைச்சர்களும் அப்படித்தான் சொல்கி றார்கள். சொந்த ஊர்களுக்கு ஏற்றி அனுப்பப்படுவதற்கான முன்னேற்பாடாக அவர்களின் கையில் ரோக்கன் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால், தேர்தல் கால வாக்குறுதிகள், தேர்தல் முடிந்த பின்னும் இன்னும் நிறைவேறவில்லை. முகாம் வாழ்க்கைக்கு இப்போது முதலாண்டு பூர்த்தியாகப் போகின்றது. இந்த விழாவுக்கு எந்த அமைச்சர் வருவார் என்று முகாமில் பகிடியாகக் கதைக்கின்றனர் சனங்கள்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு மட்டும் ஏதோ சுதந்திரம், சுபீட்சம், நல்வாழ்வு, மகிழ்ச்சி, நிறைவு எல்லாம் கிடைத்துவிட்டது என்று எண்ணாதீர்கள். சொந்த ஊர்களில் அவர்கள் அகதிகளாகவே விடப்பட்டிருக்கிறார்கள்.

மீள்குடியேற்றம் என்பது அகதி வாழ்க்கையின் இன்னொரு வடிவமே. வீடில்லாமல், குடிநீர் இல்லாமல், மலசலகூடமில்லாமல், செய்வதற்கு தொழிலில்லாமல், கையில் காசில்லாமல், வருமானமில்லாமல் எப்படி வாழ்வது. ஆனால், அப்படித்தான் வாழ வேண்டும் என்று மீள்குடியேற்ற மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

ஜேசவ் தயாளன்

முகாம்களில் இருந்து ஏற்றிவரப்பட்டு பாடசாலைகளில் வைத்து பதிவுகளைச் செய்து, அடையாளத்திற்காகப் புகைப்படங்களையும் எடுத்துவிட்டு இந்த மக்கள் அவர்களுடைய வீடுகளில் இறக்கிவிடப்பட்டுள்ளார்கள். வீட்டிற்கு வந்தவர்கள் மரங்களில் கீழேயே இருக்கிறார்கள்.

குடும்பம் ஒன்று வீட்டை அமைப்பதற்காக 12 கூரைத் தகரங்களை கொடுக்கிறார்கள் அரசாங்க அதிகாரிகள். இந்தப் பன்னிரண்டு கூரைத்தகரங்களையும் வைத்துக் கொண்டு என்ன செய்யலாம்? சொல்லுங்கள்.

அதனால், சிறிய சிறிய குடிசைகளைப் போட்டுக்கொண்டு ஒவ்வொரு குடும்பங்களும் இருக்கின்றன. இந்தக் குடிசைகள் மழைக்கும் பாதுகாப்பில்லை. வெய்யிலுக்கும் தோதில்லை. ஆனால், இவர்களுக்கு வேறு வழியுமில்லை.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட எந்தப் பகுதிக்கும் அரசாங்கத்தின் தலைமை அமைச்சர்கள் யாரும் வந்தது கிடையாது. இரண்டு தடவைகள் மட்டும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வந்து சென்றார். ஆனால், சில உதவிகள் செய்யப்பட்டதைத் தவிர அடிப்படையான, தேவையான, முக்கியமான மாற்றங்கள் ஏற்படவில்லை.

உண்மையில், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் சகல அமைச்சர்களும் நிச்சயமாக நின்றிருக்க வேண் டும். அப்படி அவர்கள் இந்தப் பகுதிகளுக்கு வருகை தந்தால் தான் இந்த மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும் இனங் காண முடியும். ஆனால், படையினரின் பொறுப்பிலேயே மக்கள் கையளிக்கப்பட்டிருக் கிறார்கள். ஏதோ சாட்டுக்காக அங்கே அரசாங்க அதிகாரிகள் செயற்படுகிறார்கள்.

இந்த அதிகாரிகளால் எந்தப் பொருத்தமான முடிவுகளும் எடுக்கப்படுவதில்லை. கடைகளைத் திறப்பது, விவசாயச் செய்கையை மேற்கொள்வது, அதற்கான இடங்களுக்குச் செல்வது, கால் நடைகளை மீண்டும் பிடிப்பது, கைவிடப்பட்ட சொத்துக்களை மீளச் சென்று பார்ப்பதும், எடுப்பதும் என்று எதற்கும் அரசாங்க அதிகாரிகளால் முடிவெடுக்க முடியாது. எல்லாவற்றுக்கும் படையினரின் அனுமதியே தேவை. படையினரோ தங்களின் நோக்கம், பாதுகாப்பு என்பவற்றைக் கவனப் படுத்திக் கொண்டே அனுமதிகளை வழங்குகிறார்கள.

மீளக் குடியமர்ந்திருக்கிற பெரும்பாலான குடும்பங்களில் பிரிவு ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பல குடும்பங்களில் உயிரிழப்புக்கள் நிகழ்ந்திருக்கின்றன. தாய், தந்தை இல்லாத பிள்ளைகளாக பலர் இருக்கிறார்கள். கணவனை இழந்த பெண்கள் நிறையப் பேர் உண்டு. அதிலும் இளவயது விதவைகளே அதிகம்.

கை, கால் என உடல் உறுப்புக்களை இழந்தவர்களின் தொகை பெரிது. பலருக்கு இரண்டு கைகளுமே இல்லை. வேறு பலருக்கு இரண்டு கால்களுமே இல்லை. சிலருக்கு இரண்டு கால்களும் ஒரு கையும் இல்லை. இவர்கள் தங்களு டைய நாளாந்தக் கடமைகளை நிறை வேற்று வதற்கே எந்த வசதிகளும் அங்கே இல்லை.

மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைகளை கவனப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எந்தத் தரப்பும் எடுத்ததாக தெரியவில்லை. ஊடகங்கள் கூட தேர்தல்களுக்காக எடுத்துக்கொண்ட கரிசனையை மீள் குடியேற்றத்தைப் பொறுத்து எடுக்கவில்லை. அரசியல் கட்சிகளும் தேர்தலில் போட்டியிடுவதற்கு எடுத்துக் கொண்ட அக்கறை அளவிற்கு மீள்குடியேற்ற மக்களின் நலனில் அக்கறைப் படவில்லை.

இதெல்லாம் அரசாங்கத்திற்கு வாய்ப்பை அளித்துள்ளது. அரசாங்கமோ வன்னி மக்களின் பிரச்சினைகளையும் அவர்களுடைய துயரங்களையும் இரகசியமாகவே வைத்திருக்கப் பார்க்கிறது. அதற்கு உடந்தையாகவே தமிழ் ஊடகங்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் தெரிந்தோ, தெரியாமலோ செயற்படுவதாகத் தோன்றுகிறது.

எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையிலேயே அல்லது கவனிக்கப்படாத நிலையிலேயே வன்னி மக்கள் இன்று இருக்கிறார்கள். போர் முடிந்த போது வன்னி மக்களுடைய துயரத்தைப் பற்றி ஓர் அலையைப் போல தமிழ் தரப்பு ஆர்ப்பரித்தது. தமிழ் ஊடகங்களும் புலம்பெயர் மக்களும் வன்னி மக்களுக்காக குரல் கொடுத்திருந்தனர்.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல இவற்றின் கவனமெல்லாம் அரசாங்கம் வைத்த தேர்தல் பொறிகளின் மீதே குவிந்தது. தேர்தல் ஒரு பெரிய திரையாக மாறி வன்னி மக்களின் பாதிப்புகளையும் துயரங்களையும் பிரச்சினைகளையும் மறைத்துவிட்டது.

இப்போது வன்னியில் மீள்குடியேறிய கிராமங்களில் சனங்கள் தண்ணீர், தொழில், வருமானம், கல்வி, மருத்துவம் என்று எல்லாவற்றிற்கும் கஷ்டப்படுகிறார்கள் என்றால் அதை புதினமாகவே பார்க்கிறார்கள். ஆனால், கிராஞ்சி என்ற இடத்திலும் ஜெயபுரத்திலும் மருத்துவர்கள் இல்லாமல் அந்த மக்கள் பெரும் அவதிப்படுகின்றார்கள் என்பது எவருக்குத் தெரியும்?

வன்னேரிக்குளத்தில் ஐயனார்புரம் பாடசாலையில் இன்னும் 15 குடும்பங்கள் வரையில் தங்கள் சொந்த வீடுகளுக்குச் செல்லமுடியாமல் வாரக் கணக்கில் தங்கியிருக்கின்றனர். 100, 200 மீற்றர் தொலைவில் இருக்கும் அவர்களின் வீடுகளுக்கு செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

காரணம் அவர்களுடைய வளவுகளில் மிதிவெடி அபாயம் நீக்கவில்லை.

அதனால், அங்குள்ள பாடசாலையில் தங்குகிறார்கள், இப்போது அவர்கள் வீட்டுக்குச் செல்ல முடியாது. பாடசாலையும் இயங்கவில்லை. ஆனை விழுந்தான் என்ற இடத்தில் இருக்கின்ற மக்களின் நிலை மிக மோசமானது. இவர்களுக்கு குடிநீர் தொடக்கம் எல்லாமே பிரச்சினைதான். இதைப் போலவே மணியங்குளம் என்ற இடத்திலுள்ள மக்களும் தண்ணீர் தொடக்கம் எல்லாவற்றுக்காகவும் கஷ்டப்படுகிறார்கள்.

பொதுவாக காய்ந்து, ஒட்டி உலர்ந்த தோற்றத்திலேயே மனிதர்கள் நடமாடித் திரிகிறார்கள். ஏன் மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பினோம்? என்று சொல்கிறார்கள் பலர். ஆனால், இலங்கைத் தீவில் இப்படி ஒரு மக்கள் கூட்டம் போர் முடிந்த பின்னரும் இருக்கின்றது என்பது பொதுவாகப் பலருக்கும் தெரியாது.

உண்மையில் மீள்குடியேறிய மக்களுக்காக தனியான, விசேட செயலணி உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் அரசாங்கத்திற்கு முக்கிய பொறுப்புண்டு. ஊடகங்கள்கூட தங்களுடைய கவனத்தை இந்தப் பிரச்சினைக்காகச் செலுத்தவேண்டும். புலம்பெயர் மக்கள் எந்த வழியிலாவது இந்த மக்களுக்காக உதவ முன்வரவேண்டும். ஆனால், அந்த உதவிகள் தவறான திசையில் செல்லக்கூடாது.

இப்போது மீள்குடியேறியவர்களுக்காக ஆங்காங்கே சில அமைப்புகளும் நிறுவனங்களும் செயற்பட ஆரம்பித்துள்ளன என்று தெரிகிறது. ஆனால், மீள்குடியேற்ற மக்களின் மீள்கட்டுமானம், புரனமைப்பு போன்றவற்றில் பெருமளவு ஊழல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டென்றும் நிலைமைகளை அவதானிக்கும் சிலர் எச்சரிக்கிறார்கள்.

எப்படியோ வன்னி மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டும், பாதிக்கப்பட்டும் வருகின்றார்கள் என்பது மட்டும் உண்மை. தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்துக்காக அதிகம் அதிகம் விலைகொடுத்த



மக்கள் இவர்கள்.

ஆனால், இவர்கள்தான் தொடர்ந்தும் துயரச் சிலுவைகளைச் சுமக்க வேண்டி இருக்கிறது. இவர்களைச் சுற்றியே எப்போதும் வலைகள் பின்னப்பட்டுள்ளன. கடந்த இரண்டு தசாப்தங்களாக வன்னியே எல்லாவற்றுக்கும் தீனியாகி வருகின்றது. இந்த அவலத்தின் முடிவுப் புள்ளி எப்போது என்பதே இப்போதுள்ள கேள்வி?

# ஜெயலலிதாவை மேலும் குழப்பிய இடைத் தேர்தல் முடிவுகள்

ஜெயலலிதாவுக்கு தமிழக அரசியலில் எந்த முடிச்சை முதலில் அவிழ்ப்பது என்று புரியாதபடி சிக்கல்கள் அடுத்தடுத்து அரங்கேறி வருகின்றன. பென்னாகரம் இடைத் தேர்தல் முடிவு வடக்குத் தமிழகத்தில்



சில தொகுதிகளில் தி.மு.கவுக்கு பின்னடைவை ஏற்படுதி இருப்பதால், பாட்டாளிமக்கள் கட்சிஸ்யச் சார்ந்தே இருக்க வேண்டும் என்ற உண்மையை ஜெயலலிதாவுக்கு உணர்த்தியுள்ளது.

வரை ஆச்சரியத்துடன் கலைஞர் பார்வையிட்டாராம். அந்தளவுக்கு தமிழகத்தில் இளைஞர் காங்கிரஸுக்கு ஆட்சேர்க்கும் படலம் விறுவிறுப்பாக நடக்கிறது. இதைப் பார்த்து தி.மு.க வட்டாரம் முழிபிதுங்கினாலும், ஜெயலலிதா உள்ளூர மகிழ்ச்சியில் உள்ளார். "காங்கிரஸ் பலமடையட்டும்; அவர்கள் தோளில் சவாரி செய்து ஆட்சியைப் பிடிக்கிறேன் பார்" என்பதே அவர் மனதில் உள்ள எண்ணமாகும். மாநிலத்திலும் ஆட்சியில் இன்றி மத்தியிலும் ஆட்சியில் இன்றி அ.தி.மு.க கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகப் பின்னடைவு கண்டு வருகின்றது. காங்கிரஸாவது மத்தியில் ஆள்கிறது. எனவே, அவர்கள் செல்வாக்கில் தமிழகத்தில் தேர்தலை வெல்ல காங்கிரஸுடனான கூட்டணி ஜெயலலிதாவுக்கு இன்றியமையாததாகி விட்டது. தி.மு.கவின் 17 எம்.பிக்களுக்கு பதிலாக தனது 8 எம்.பிக்களைத் தருவதாக காங்கிரஸுக்கு ஜெயலலிதா ஆசை காட்டலாம். ஆனால், மண்குதிரையை நம்பி நட்டாற்றில் இறங்கியதாக இது முடியும் என்பது சோனியாவுக்கு தெரியாததல்ல. பிரதமர் வாஜ்பாய் முன்பு ஜெயலலிதாவிடம் பட்ட

தி.மு.க உச்சம் தாண்டி உச்சத்துக்கு செல்லும் நிலையிலுள்ளது. ஆனால், ஜெயலலிதாவின் விரக்திக்கு மத்தியிலும் நம்பிக்கை ஒளிக்கீற்றுகளாக ராகுலும் அழகிரியும் விளங்குகின்றனர். இடையில் கலைஞர் மறைந்தாலும், அவருக்கு வாய்ப்பாகும். இந்த மூன்றும் கைகொடாவிடில் அவர் கதி அதோ கதிதான். அழகிரி சென்ற வாரம் தி.மு.க வட்டாரத்தின் வயிற்றில் புளியை கரைத்துவிட்டார். "தி.மு.க தலைமைக்குப் போட்டி வந்தால் நான் போட்டியிடுவேன்" என அழகிரி விட்ட அறிக்கை ஸ்டாலின் முகாமை ஒரு கலக்கு கலக்கி விட்டது. அதாவது தேர்தல் இன்றி தி.மு.க தலைமை ஸ்டாலினிடம் போகப் போகிறது என்பதும், அவ்வாறின்றி தேர்தல் நடந்தால்தான் தனக்கு வாய்ப்புண்டு என்பதும் அழகிரியால் பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அழகிரி பேச்சால் உசுப்படைந்த அவரது ஆதரவாளர் பட்டாளம் "அழகிரி பேரவை" எனப் புதிதாக ஒரு அமைப்புத் தொடங்கியது. சுதாரித்துக் கொண்டு தவறை உணர்ந்த அழகிரி, அவர்களை அதட்டி வைத்துள்ளார். இப்போதைக்குப் பூசல் அடங்கினாலும் ஸ்டாலின் வட்டாரம் இதுகுறித்து உஷாராகவே உள்ளது.

வடக்கிலும் தெற்கிலும் தி.மு.க பலமாகிவிட்டது. கொங்குமண்டலத்தில் (கோயமுத்தூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி, சேலம், திண்டுக்கல் மாவட்டங்கள்) அ.தி.மு.க இன்னும் பலமாகவே உள்ளது. கடந்த



லோக்சபா தேர்தலில் அ.தி.மு.க அணி இங்குள்ள பெரும்பாலான தொகுதிகளை வென்றது. வடக்கு ஸ்டாலினுக்கும் தெற்கு அழகிரிக்கும் என்று முடிவானால் கொங்குமண்டலத்தை கனிமொழிக்கு வழங்கலாம். கோவையில் தமிழ்

ஜெயலலிதா முழுப்பலத்துடன் உள்ளபோது வேண்டுமானால் பா.ம.கவை உதறி விட்டு தனித்தே தி.மு.கவை எதிர்கொள்ள முடியும். ஆனால், தான் முழுப்பலத்துடன் இல்லை என்பது அவருக்கே சற்று உறைக்கத் தொடங்கி விட்டது. தொடர்ந்து மூன்று



நாடாளுமன்றத் தேர்தல்களில் தி.மு.க அவரை முந்திவிட்டது. 1999, 2004, 2009 ஆகியவையே இவை. மூன்று தடவைகளும் தி.மு.கவுக்கு வலுவான கூட்டணி அமைந்ததால் வந்த வெற்றி தான். ஆணவம் நிரம்பியவர் என்றாலும் ஜெயலலிதாவுக்கு இது இப்போது விளங்கியே உள்ளது. இல்லாவிடின் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்க ஜெயலலிதா முழுமூச்சுடன் முயன்றிருக்கமாட்டார். ஜெயலலிதாவின் கடைசித்துரும்பு ராகுல்காந்தி தான் என்பது தெளிவாகத்

**எஸ்.சுரேந்திரஜித்**

தெரியத் தொடங்கியுள்ளது. சோனியா காந்தி என்னதான் கலைஞரை ஒரு சாணக்கியராக மதித்தாலும், ராகுல் காந்தி அதை ஏற்கத் தயாரில்லை. தமிழகத்தில் இளைஞர் காங்கிரஸை, பலப்படுத்தும் முயற்சிகளில் ரா்குல் காந்தியின் உக்கிரத்தைக் கண்டு கலைஞரே மலைத்துப் போயுள்ளார். ஒரு முறை சேப்பாக்கம் அருகே காரை நிறுத்திவிட்டு, இளைஞர் காங்கிரஸ் தேர்தலின் போது அப்பகுதியில் நடக்கும் விறுவிறுப்பை 10 நிமிடம்

அவஸ்தை கொஞ்சநஞ்சமன்று. அதுபோல் நடக்க மாட்டார் என்று உத்தரவாதமளிப்பதே இன்று ஜெயலலிதா செய்யக்கூடிய உச்சம். அதையும் எப்படி நம்புவது என்பது அடுத்த கேள்வி. முன்பு முதல்வராக தெரிவான இருதடவைகளிலும் (1991, 2001) காங்கிரஸுடன் வலுவான கூட்டணி இருந்ததால் தான் ஜெயலலிதா வென்றார்.

இது இவ்வாறிருக்க, அடுத்த சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா தோற்றதும் அ.தி.மு.கவை உடைத்து துவம்சம் செய்வது என தி.மு.க, காங்கிரஸ் இரண்டுமே கங்கணம் கட்டிக் கொண்டு உள்ளன. அ.தி.மு.க அவ்வாறு அழிந்ததும் தமிழகத்தில் தி.மு.கவுக்கு அடுத்து இரண்டாவது ஸ்தானத்தைப் பிடிப்பதுதான் ராகுலின் திட்டம் என்கின்றனர் நோக்கர்கள். ராகுலின் முதுகில் ஏறி ஆட்சியைப் பிடிக்க ஜெயலலிதா காத்திருக்க ஜெயலலிதாவையே கவிழ்த்துவிட அவர் திட்டம் தீட்டுவது தான் வியப்பிலும் வியப்பாகும். தந்தை விட்ட தவறை தனையன் விடக்கூடாது என்று தமிழக காங்கிரஸினர் கூறுகின்றனர். 1987 இல் அ.தி.மு.க உடைந்த போது அதை அப்படியே அழித்துத் தொலைத்துவிட்டு, தமிழகத்தில் காங்கிரஸை 2ஆவது ஸ்தானத்துக்கு கொண்டுவந்திருக்க ராஜீவுக்கு இயலுமாயிருந்தது. அவரது அரசியல் முதிர்ச்சியின்மை அதைச் சாதிக்க தவறியது. இன்று அரசியலில் அவரை விட பலமடங்கு முதிர்ச்சியைக் காட்டும் சோனியா காந்தி, இதைச் சாதிப்பார் என்பது காங்கிரஸாரின் நம்பிக்கையாகும். அ.தி.மு.க அழிவின் விளிம்பில் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. அழிப்பதற்கு காங்கிரஸுக்கு இதுவே சந்தர்ப்பமாகும். ஆனால், அ.தி.மு.க தலைவியோ அந்த காங்கிரஸ் துரும்பை பிடித்துக் கொண்டு கரைசேரத் துடிப்பதுதான் வேடிக்கையாகும்.

காங்கிரஸுடன் கூட்டணியா பா.ம.கவுடன் கூட்டணியா எனக் கேட்டால் அ.தி.மு.கவைப் பொறுத்தவரை, இரண்டு கட்சிகளின் கூட்டணிகளும் சேர்ந்தால் கூட தி.மு.கவை ஒழிக்க முடியாது என்ற நிலை வந்து கொண்டிருக்கிறது.


கலைஞரும் கவலையடைந்திருக்கக் கூடும். எனினும் இவ்வளவு வருடங்களில் கருணாநிதி ஒரு மாபெரும் அரசியல் சாணக்கியராக உருவெடுத்திருப்பதை மட்டும் யாரும் மறுத்துவிட மாட்டார்கள். கலைஞரின் அரசியல் வாழ்வு என்பது தவறுகளின் திரட்டு என்று முன்பு கூறப்பட்டு வந்தது. இன்று அது மாறிவிட்டது. அவரைப் புடமிட்டவர்களில் பிரதானமானவர் ஜெயலலிதாவே. மற்றொருவர் ராஜீவ் காந்தி. கலைஞரின் அரசியல் சாணக்கியத்தில் உச்சபலனை அவரது மைந்தர்கள் பெற்றாலும், அதில் மற்றொரு பிரதான பங்காளி சோனியா காந்தி ஆவார். இத்தகைய சாணக்கியம் தற்போதைய சண்டையில் என்ன வடிவத்தை எடுக்கும் என்பது சுவாரஸ்யமாக எதிர்பார்க்கப்படும் விடயமாகும். ஸ்டாலின் - அழகிரி குடுமிபிடியில் தமிழகம் துண்டாடப்படும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டாலும், அது எப்போது என்பதுதான் கேள்வி. தமிழகத்தைத் துண்டாடும் முடிவை எடுக்க முன் கொங்குமண்டலத்தில் தி.மு.கவைப் பலப்படுத்த வேண்டிய அவசரத் தேவை உள்ளது. தமிழகத்தின்

மாநாடு நடத்துவதும் இந்த நோக்கத்திலேயே என்று கருதப்படுகிறது. கருணாநிதி அதிகம் பேசுவதைக் கூட இப்போது குறைத்துக் கொண்டுவிட்டார். சிந்தனை உச்சத்தில் நடந்துவருவதால் வாய்திறப்பது



குறைந்துவிட்டது போலும். சகோதரர் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் திட்டம் கலைஞர் மூளைக்குள் தயாராகி வருகிறது என்பது மட்டும் நிச்சயம்.

* * *





# உயிர் வலிக்கும் கணங்கள்...!

வன்னியில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனும் தன் கைகளில் சிக்கிய அரைகுறை உடமைகளை எடுத்துக் கொண்டு நாளுக்கு நாள் இடம்விட்டு இடம்தாவிக் கொண்டிருந்த கொடூரமான காலமது. மக்கள் வெள்ளம் இடம்மாறும் போது விசுவமடு தொடக்கம் சுதந்திரபுரம் வரை வீதிகள் தோறும் மனித உடல்கள் உயிரற்று உறங்கிக் கொண்டிருந்தன. சில உடல்களில் அரை நிலையில் கிடந்த உயிர்கள் ஏதோ சொல்லத்துடித்தும் சொல்ல முடியாமல் முனங்கிக் கொண்டிருந்தன. யாரை யார் காப்பாற்றுவது? யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? வீட்டில் இருந்து வெளியில் செல்வோர் திரும்பி வீடு வந்தால்தான் அந்த உயிருக்கு உத்தரவாதம். எங்கு பார்த்தாலும் மரண ஓலங்கள் காதை பிழந்து கொண்டிருந்தன. சுதந்திரபுரம் சந்தியில் இருந்து கொலணிக்கு செல்லும் கிரவல் பாதை குன்றும் குழியுமாக இருந்தது. அது தம்முள் மனித ரத்தங்களை தேக்கி வைத்துக் கொண்டது; மழைக் கால குழிகளைப் போன்று. ஆனால், நீர் மட்டும் ஏனோ சிவப்பாகவே இருந்தது. கால் எடுத்து வைக்க மிகவும் சிரமப்பட்டு அந்த வீதி வழியால் மக்கள் வெள்ளத்துடன் நானும் ஒருவனாக சென்று கொண்டிருந்தேன். இருட்டு மடுவில் இருந்து கொலணி வரும் பாதையில்தான் அந்தக் கொடூரம் நிகழ்ந்தது. சீறிவரும் ரவைகளுக்கு குனிந்தும் சிதறி விழுந்த எறிகணைகளுக்கு மக்களோடு மக்களாக நானும் தவழ்ந்தும், எழும்பியும் போய்க் கொண்டிருக்கையில் அருகில் இருந்த காணியில் திடீரென புகை மண்டலத்துடன் ஒரு எறிகணை விழுந்து வெடித்தது. அந்த

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

கணமே என்னை விலத்திக் கொண்டு உயிரற்ற உடல்களையும் குற்றுயிர் உடல்களையும் சுமந்தவாறு பல வாகனங்கள் நகர முடியாமல் நகர்ந்து கொண்டிருந்தன. எறிகணை விழுந்த திசையில் ஒரு அம்மா ஏதோ சொல்ல நினைத்து சொல்ல முடியாமல் கையை அசைத்தார். வேலிகளைப் பிரித்துக் கொண்டு நானும் என் பின்னால் இன்னுமொரு இளைஞனும் ஓடிச் சென்றோம். அந்த மூதாட்டி கிடங்காக கிடந்த ஒரு இடத்தைக் காட்டி ஏதோ மீண்டும் சொல்ல நினைத்தார். முடியவில்லை. என் கண்முன்பே நிரந்தரமாக உறங்கிப் போனார். அவர் காட்டிய திசையில் கிடந்த சிதறல்களை ஒதுக்கி விட்டு பார்த்தபோது என்றும் இனி என் கண்கள் இப்படிப் பார்க்கக் கூடாது என தோன்றியது. இரண்டு வயது மதிக்கத்தக்க தன் பிஞ்சுக் குழந்தையை கைகளால் அணைத்தவாறு ஒரு பெண்ணின் உடல் மட்டும் உறங்கிக் கொண்டிருந்தது. தலையை காணவே இல்லை. குழந்தையின் ஒரு காலும் ஒரு கையும் சிதறிக் கிடந்தன. என் கண்கள் என்ன பாவம் செய்தனவோ! என் ரத்த நாளங்கள் வேகம் எடுத்தன. இனியாவது இந்த கொடூரங்களை காணக் கூடாது என அருகில் இருந்த கோயிலில் வேண்டிக் கொண்டேன் தொண்டு நிறுவனங்கள் மூலம் அந்த மூன்று உடல்களும் அடக்கம் செய்யப்பட்டன. அழிந்து கொண்டிருக்கும் எம்மவர்களின் ஒரு பாகத்தை கடந்து என் உயிரும் போகுமுன் என் உறவுகளை பார்த்து விடுவேனா?

# அழுது கொண்டிருக்கும் மனித அவலங்கள்





என்ற ஆதங்கத்தில் வந்து கொண்டிருந்த எனக்கு மீண்டும் மனித அவலமும் மலிந்துப்போன மரணச் செய்திகளும், கழிவாகிப்போன பிணமேட்டுக் காட்சிகளும் காத்திருந்தன. திடீரென சுதந்திரப் புரம் சந்தியில் இருந்த விளையாட்டு மைதானம் நோக்கி, ஒரு சில ஆண்களுடன், சில பெண்களும் அழுது புலம்பிக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தனர். அதில் என் நண்பன் ஒருவனும் ஓடு வதைக் கண்ட நானும் அவர் பின்னால் ஓடினேன். அங்கு சென்று பார்த்த பின் என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. மீண்டும் ஓர் அழிவுகளின் பாகத்தை என் கண்கள் கண்டன. ஆண்டவன் சன்னிதி முன்னால் அப்படி ஒரு பிணக்குவியலா? மனித உயிர்கள் இப்படி மலிந்ததை அங்கு தான் பார்த்தேன். என் உயிர் நண்பனின் அண்ணாவும் அவரது குடும்பமும் சிதறி சின்னா பின்னமாக இறந்து கிடந்தனர். ஒரே குடும்பத்தில் ஐந்து உயிர்களும் அமைதியாய் அடங்கிப் போய் கிடந்த அந்த கோலத்தை எப்படி சொல்லுவது என்றே தெரியவில்லை. அன்று காலை சிரித்துப் பேசிய அண்ணனின் தலை சிதறிக் கிடந்தது. அண்ணியின் மூளை சிதறி அருகில் மடிந்து கிடந்த முதலாவது பிள்ளையின் உடைகளை அலங்கரித்துக் கொண்டிருந்தது. உடல் எங்கும் வெட்டப்பட்ட இறச்சித் துண்டுகளாக ஏனைய இரு பிள்ளைகளும் உறங்கிக் கிடந்தனர். ஐந்து உறவுகளையும் பிரிந்தவனுக்கு அவன் சுய நினைவு கூட அவனுடன் இருக்கவில்லை. நினைவிழந்து விழுந்தான். ரக்டர் பெட்டிகளில் உடல்களை அள்ளி ஏற்றினோம். நாலுபுறமும் எறிகணைகள் விழுந்து கொண்டிருந்தன. தாமதித்தால் ஐந்துடன் இன்னும் எத்தனை ஐந்துகள் பறிபோகுமே? அதனால் சுதந்திரப்புரம் சுடலையில் உடல்களை அடக்கம் செய்தோம். அவர்களின் எதிர்கால கனவுகளையும் சேர்த்து அன்று புதைத்து விட்டு வந்தோம். மீண்டும் எஞ்சிய உடமைகளையும் உயிர்களையும் சுமந்து கொண்டு மாத்தளன் நோக்கி நகர்ந்தோம். அங்கு சென்ற எமக்கு வைத்திய சாலைகள், தேவாலயங்கள் பாதுகாப்பானவை என தென்படவே வைத்தியசாலைகளுக்கு அருகில் தஞ்சமடைந்தோம். தமது உயிர்களை காக்கவென மருத்துவமனைக்கு வந்த எத்தனையோ காயமடைந்தவர்கள் அங்கேயே விழுந்து வெடித்த எறிகணைகளால் பரிதாபகரமாக உயிழந்தனர். ஒரு வயது மகளுக்கு பாலூட்டிக் கொண்டிருந்த அந்த இளம்தாய் ரவை பட்டு இறந்தது தெரியாத அந்த பிஞ்சு நெஞ்சம் தாயின் மூலைகளை இழுத்துக் கொண்டிருந்தது. இந்த கொடூரங்களைப் பார்க்க எம் உயிர்கள் வலிக்காமல் என்ன செய்யும். காலையிலேயே தன் மூன்று குழந்தைகளுடனும் கஞ்சிக் கொட்டிலுக்கு சென்ற தாய் மாலை குழந்தைகளுடன் கஞ்சிக் கோப்பையுடன் இறந்த கிடந்த கொடூரமும் அங்குதான் நடந்தது. தந்தை இன்னும் மனநோயாளியாக வாழ்ந்து வருகின்றார். இன்னும் எத்தனையோ உயிர்களை தேடி அலைந்து கொண்டிருக்கின்றோம். இத்தனை வேதனைகளையும் மனதில் அள்ளிக் கட்டிக் கொண்டு, நெருஞ்சாங் கூட்டின் வலிகளோடு வாழ்ந்து வருகின்றோம். தொடர்ந்து கொண்டிருக்கும் வேதனையின் விளிம்பில்....

**எஸ். எஸ் றேரம் மன்னார்**

# கண்ணாடிக்குப் பின் ஒளிந்திருக்கும் வக்கிரக் கண்கள்!

சமீபகாலமாகவே ரகசிய கமெராக்கள், மொபைல் போன் கமெராக்கள் ஆகியவற்றின் வளர்ச்சியால் ஏற்படும் எதிர்விளைவுகள், அதிர்ச்சி தரும் செய்திகளை அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன. வி.ஐ.பிக்கள் முதல் நடுத்தர வகுப்பு மக்கள் வரை என வேறுபாடு இன்றி விரிக்கப்படும் இந்த மாய வலை, இன்று சுதந்திரம் என்ற வார்த்தைக்கே கொள்ளி வைத்துக் கொண்டிருக்கிறது.



இந்தியாவின் கேரளாவில் நடந்துள்ள சம்பவம் ஒன்று. கேரளாவைச் சேர்ந்த கல்லூரி மாணவிகள் சிலர், தங்களின் ஒப்படைக்காக வெளியூர் செல்ல நேரிட்டபோது, படிப்பு சம்பந்தமான வேலைகளை முடித்துவிட்டு ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கிறார்கள். குளியல் அறை சென்ற ஒரு மாணவி, அங்கு மொபைல் போன் கமெரா ஒன்று பொருத்தப்பட்டிருந்ததை தற்செயலாக பார்த்திருக்கிறார். பதறிப்போய் ஹோட்டல் நிர்வாகத்திடம் முறையிட, அந்த ஹோட்டலின் ஊழியர் ஒருவர்தான் கீழ்த்தரமான இந்தக் காரியத்தை செய்துள்ளார் என்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஹோட்டல் அறைகள், துணிக்கடை 'டிரயல் ரூம்'கள், பொது இடங்களில் உள்ள பாத்ரூம்கள் என்று இந்த 'ஹிடன் கமெராக்கள்' எங்கும் இருக்கலாம் என்பதுதான் இப்போதைய கசக்கும் உண்மை.



அப்படி அந்த கமெராக்களால் விழுங்கப்படும் எமது அந்தரங்கம், பின் எம்.எம்.எஸ்., இணையதளம் என்று பொதுப் பந்தி வைக்கப்படலாம் என்பது உயிர் உறைய வைக்கும் நிதர்சனம். இந்த அந்தரங்க திருட்டில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தருணத்தில் நாம் இருக்கிறோம்.

''விஞ்ஞானம் வளர வளர, சில வக்கிர புத்திக்காரர்களால் அந்தத் தொழில்நுட்பங்கள் இப்படி தவறான செயல்களில் புகுத்தப்படுவது, வேதனைக்குரிய, தண்டனைக்குரிய விஷயம். ஆயினும், இது தொடர்பாக நாம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வதே இதற்கான தீர்வு'' என்று கூறுகிறார் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற துப்பறிவாளர் சந்திரசேகரன்.

''இதுபோன்ற ரகசிய கமெராக்களைப் பயன்படுத்தி தவறுகள் நடக்க அதிக சாத்தியமான இடங்கள், ஹோட்டல்கள்தான். அதிலும் ஹனிமூன் தம்பதிகளைக் குறிவைத்து, அவர்களின் அந்தரங்கங்களை அம்பலப்படுத்தும் வக்கிரங்கள் அதிகம் பெருகிவிட்டன. எனவே, ஹோட்டல் அறையின் மின்விசிறி, அலங்கார விளக்கு, வாட்ரோப், படுக்கை என்று அனைத்து இடங்களையும் டபுள் செக் செய்துகொள்வது அவசியம். ஹோட்டல் பாத்ரூம்களும் இப்போது புதைகுழியாகிப் போய்க்கிடக்கின்றன. எனவே, பாத்ரூம்களில் கமெரா ஏதேனும் இருக்கிறதா என்பதை ஆராய வேண்டும். ஷவர் பைப்பில் பொருத்தக்கூடிய 'மைக்ரோ கமெரா'க்கள் வரை இப்போது புழக்கத்தில் இருப்பதால், வீட்டில் குளிப்பது போல 'சுதந்திர'மாக குளிக்காமல், பாதுகாப்புடன் குளிக்க வேண்டியது அவசியம். பாத்ரூம் லைட்டை அணைத்து விடுவது இன்னும் உத்தமம்'' - என்றும் சந்திரசேகரன் கூறுகிறார்.



1,500 கோடி ரூபாயில் உதயமாகி இருக்கும் கொச்சின் அணிக்கு பிராண்ட் அம்பாஸிடராகத் தேர்வு செய்யப்பட இருக்கிறார் அசின். இந்த ஆண்டு இறுதியில் இருந்தே அணியைப் பிரபலப்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இருக்கிறாராம்.

## புது வாய்ப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் வீரர்களான டோனி, யுவராஜ், ஹர்பஜன் சிங் ஆகிய மூவருக்கும் இந்த ஆண்டு திருமணம் நடைபெற இருக்கிறது. இதில் முதல் ஆளாக பாலிவுட் நடிகை கீதா பஸ்ராவை மணக்க இருக்கிறார் ஹர்பஜன் சிங்.

## ஹர்பஜன்சிங்



# சக்தி சுப்பர் ஸ்டார்

## இறுதிப் போட்டி ஒரு கண்ணோட்டம்

இலங்கையில் சிறந்த தமிழ் பாடகர்களைத் இனங்காணும் போட்டி நிகழ்ச்சியினை கடந்த மூன்று வருடங்களாக சக்தி ரீ.வி. நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2010 சக்தி சுப்பர் ஸ்டாரின் சீசன் - 3 இறுதிப் போட்டி ஏப்ரல் 3 ஆம் திகதி மிகவும் கோலாகலமாக சுகததாஸ உள்ளக அரங்கில் ஆரம்பமானது.

பத்தாயிரத்துக்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்குபற்றிய இந்த இசைக் குரல் தேடல் பயணம் சுமார் 10 மாதங்களாக பயணித்தது. இதிலிருந்து முதல் இறுதிச் சுற்றுக்கு 12 பேர் தெரிவானார்கள். பின்னர் எட்டுப் பேர் தெரிவாகி னார்கள். இறுதியாக ஐந்து பேர் தெரிவாகினார்கள். இதில் இறுதி வரை வந்துகொண்டிருந்த லூசியன் மேசி எஸ்.எம்.எஸ். வாக்குகள் போதாமையால் விலக்கப்பட்டார். இறுதிச் சுற்றுக்கு, கின்னியாவிலிருந்து நசீர், நீர்கொழும்பு மீனா பிரசாந்தினி, மாத்தளை சங்கீதா, மஸ்கெலியா திருச்செல்வம் ஆகிய போட்டியாளர்கள் தெரிவானார்கள்.



இறுதிப் போட்டி நிகழ்வு மாலை 6 மணிக்கு பிரமாண்டமாக அமைக்கப்பட்ட மேடையில் ஆரம்பமானது. முதல் பாடலை மீனா பிரசாந்தினி பாடினார். இவரைப் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். சகோதர மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். தமிழ்ப் பாடல்களை மிகவும் நேர்த்தியாக மனனம் செய்து சிறப்பாகப் பாடி அசத்தினார். இவரை நெறிப்படுத்தியவர்கள் உண்மையில் பாராட்டுக்குரியவர்களே. இசைக்கு மொழி ஒரு தடையில்லை என்பதனை இவர் இந்த சக்தி சுப்பர் ஸ்டார் மூலம் நிரூபித்துள்ளார். இரண்டாவது பாடலை நசீர் பாடினார். இவரின் ரசிகர்களே அரங்கத்தில் அதிகமாக இருந்தமையை அவர் பாட வந்த போது காணக்கூடியதாக இருந்தது. அடுத்த பாடலை சங்கீதா பாடினார். இவர் சங்கீதத்தை முறைப்படி கற்றவர். அதனால்தான் அவர் தெரிவு செய்த பாடல்களும் கர்னாடக சங்கீதத்தில் அமைத்த பாடல்களாகவே அமைந்திருந்தது. இவர் இரண்டாவதாக பாடிய 'வலயப் பட்டித் தவிலே...' என்ற பாடல் அரங்கத்தை அதிர வைத்தது. ரசிகர்களின் அமோக கைதட்டலையும் பெற்றுக் கொண்டது. இப்பாடலே இவருக்கு இப்போட்டியில் அதிக எஸ்.எம்.எஸ். வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தது எனலாம். நான்காவதாக திருச்செல்வம் பாடினார். இயற்கையாகவே இவருக்கு எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தினுடைய குரல் சாயல் அமைந்திருந்தது. எஸ்.பியினுடைய அற்புதமான இடைக்காலப் பாடல்களைத் தெரிவு செய்து பாடி, இந்த சீசனில் தனக்கென ஒரு ரசிகர் கூட்டத்தையே சேர்த்துக் கொண்டார்.

அர்ச்சனா, கஸ்தூரி, கீதன், சந்திரகாந்தன், நிரோஜினி, செங்காதரன், அமான், லூசியன் மேசி ஆகிய எண்வரும் தங்களது திறமைகளை நடனத்தினாலும், நடிப்பினாலும், வித்தியாசமாக குரல் வளத்தாலும் வெளிப்படுத்தி ரசிகர்களை அசரவைத்தார்கள். ஏன் இவர்கள் விலக்கப்பட்டார்கள் என்று ரசிகர்கள், நேயர்கள் அங்கலாய்க்கும் வகையில் பிரமிப்பூட்டினார்கள். இதில் முக்கியமாக 'உன் மேல ஆசை தான்....' என்ற 'ஆயிரத்தில் ஒருவன்' திரைபடத்தின் பாடலை திரைப்படத்தில் வரும் அதே பாடல் காட்சியைப் போலவே இங்கும் காட்சிப்படுத்திப் பாடியமை பாராட்டத்தக்கதாகும். நடனக் குழுவினரின் நடன அமைப்புக்களும் நன்றாகவே அமைந்திருந்தது.

புதுமைகளையும், புதிய தொழில்நுட்ப முறைகளையும் இலங்கையில் தமிழ் ஊடகங்களில் அறிமுகப்படுத்தி வரும் சக்தி ரீ.வி. சக்தி எப். எம். இம்முறையும் பல புதுமைகளை இந்த அரங்கில் அறிமுகப்படுத்தியது.

பிரமாண்டமான முறையில் வித்தியாசமான கலை நயத்துடன் அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பாடகர்களும் பாட வரும்போது அவர்களை அறிமுகப்படுத்தும் காட்சி அகலத்திரையில் காட்சிப்படுத்தப்பட்டமை அற்புதம். அவர்களின் ஊர், குடும்பம், கடந்த நிகழ்ச்சிகளில் அவர்கள் காட்டிய திறமைகள் என்பவற்றை ஒளிப்பதிவின் மூலம் காட்சிப்படுத்தியமை நன்றாக இருந்தது. இலங்கையில் மேடை நிகழ்ச்சி ஒன்றில் முதல்முறையாக நவீன முறையில் சுழலும் தானியங்கிக் கெமரா இந்த மேடையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதிகளாக இந்தியாவிலிருந்து வருகை வந்திருந்த இசையமைப்பாளரும், பாடகருமான ரமேஸ் விநாயகம் மற்றும் பின்னணிப் பாடகர் வென்னி தயாள் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். வென்னி தயாள், 'ஓமணப் பெண்ணே...', 'ரக்ஸி..ரக்ஸி...' ஆகிய இரண்டு பாடல்களைப் அட்டகாசமாகப் பாடி அரங்கத்தில் இருந்த ரசிகர்களை எழுந்து கை தட்ட வைத்தார். இந்தப் போட்டிக்கு நடுவர்களாக இலங்கையில் புகழ் பூத்த மூத்த கலைஞர்களான ரி.எஸ். முருகேஸ், என். ரகுநாதன், அருந்ததி ஆகியோர் வருகை தந்திருந்தார்கள். இவர்களுடன் இலங்கையின் 'பெப்' சக்கரவர்த்திகளான வாத்திய- சந்தோசும் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சக்தி சுப்பர் ஸ்டார் சீஸன் 3 இன் இறுதிக் கட்டத்தை நெருங்கியது. நான்காவது இடத்தை மஸ்கெலியா திருச்செல்வம் பெற்றுக் கொண்டார். இவர் சக்தி சுப்பர் ஸ்டார் நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மூன்றாம் இடத்தை நீர்கொழும்பு மீனா பிரசாந்தினி பெற்றுக் கொள்ள அவருக்கும் நினைவுப் பரிசும், ஒரு லட்சம் ரூபா காசோலையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் இவருக்கு லட்சக்கணக்கான தமிழ் ரசிகர்களின் அன்பும், ஆதரவும் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது கண்கூடே. தொடர்ந்தும் இவர் தமிழில் நல்ல பல பாடல்களைப் பாடி அசத்த வேண்டும். அடுத்து சுப்பர் ஸ்டார் யார் என்பதனை அறிவிப்பாளர் அறிவிக்கும் போதே அரங்கம் நிறைந்த கரகோசம். இரண்டாம் இடத்தை கிண்ணியா நசீர் பெற்றுக் கொண்டார். இவருக்கு சக்தியின் நினைவுப் பரிசும், 3 லட்சம் ரூபா காசோலையும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையின் இளம் பாடகர்களைத் தேடும் சக்தியின் இம்முறைத் தேடலில் மாத்தளை சங்கீதா சக்தியின் சுப்பர் ஸ்டாராகத் தெரிவாகி மகுடம் சூடிக் கொண்டார். இவருக்கு சுப்பர் ஸ்டார் நினைவுக் கேடயமும், 5 லட்சம் ரூபா காசோலையும் பரிசாக வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அரங்கத்தில் நிறைந்திருந்த நசீரின் ரசிகர்கள் சிறு ஏமாற்றத்துக்கு உள்ளானதை அவதானிக்க முடிந்தது. எதுஎவ்வாறாயினும் இறுதி முடிவைத் தெரிவு செய்தது ரசிகர்கள் தானே.

இந்த நிகழ்ச்சியில் ஒரு குறையாக இருந்தது என்னவெனில், ரசிகர்களின் எஸ்.எம்.எஸ். வாக்குகள் ரசிகர்களுக்கு காட்டப்படாமையே. ரசிகர்கள் அனுப்பும் எஸ்.எம்.எஸ். சக்தி தொலைக்காட்சியில் ஒரு வரைபு முறையில் காட்சிப் படுத்தியிருந்தால் இன்னும் சிறப்பாக அமைத்திருக்கும். ரசிகர்களிடத்தில் நம்பகத்தன்மை இன்னும் கூடியிருக்கும். இருப்பினும் இலங்கை இசை ரசிகர்கள் இறுதிப் போட்டியில் சரியான ஒரு முடிவையே தெரிவித்திருந்தார்கள்.

இவ்வாறனதொரு அற்புதமான இசைத் தேடலை ஆரம்பித்து அதனை பிரமாண்டமான அளவுக்கு கொண்டு சென்று, இலங்கையின் இளம் பாடகர்களை உலகிற்கு அறிமுகப்படுத்திய சக்தி ரீ.வி. பாராட்டத்தக்கது. அதேபோல் இதனை வானொலி ஊடாக பட்டி தொட்டி எங்கும் எடுத்துச் சென்ற சக்தி எப்.எம்மும் பாராட்டுக்குரியதாகும். இதனை தயாரித்து நெறிப்படுத்திய சக்தி ரீ.வியின் சியா மற்றும் சக்தி எப்.எம்மில் அறிவிப்பாளர் மயூரன் ஆகியோருக்கும், இதில் பணியாற்றிய தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், இசை கலைஞர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

சக்தி ரீ.வி. சக்தி எப். எம். ஆகிய ஊடகங்கள் இன்னும் பல இது போன்ற அற்புதமான திறமைசாலிகளை வெளிக் கொண்டு வரும் நிகழ்ச்சிகளை படைக்க வேண்டும்.

தொகுப்பு - ப. ஆஸ்வின்

## சிறுகதை

# மனிதர்கள் உணர்ந்து கொள்ள...

ஏகாம்பரம் தினேஸ்



''ஜோன் நில்லு! அவனை ஒன்றும் செய்யாதே...'' யூலி என்னைத் தடுத்தாள். அவளது பேச்சைக் கேட்காது நான் அவனைத் தாக்கிக் கொண்டிருந்தேன்.

''ஜோன், நிறுத்தப்போறியா இல்லையா...? என்மேலே உனக்கு உண்மையான பாசம் இருந்தால், நீ உண்மையாகவே என்னைக் காதலிப்பதாக இருந்தால் அவனை விட்டுடு....''

யூலி தன்மீது நான் வைத்திருந்த காதலைப் பணயமாக வைத்து எனது தாக்குதலைக் கட்டுப்படுத்தினாள். ஆனால் எனக்கோ அவனைக் கடித்துக் குதற வேண்டும் போல் இருந்தது. யூலியின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு அவனை அதற்கு மேலும் ஒன்றும் செய்யாது விட்டுவிட்டேன். அவனும் தப்பினேன் பிழைத்தேன் என ஓடிச்சென்றுவிட்டான்.

அவனது பெயர் என்னவென்று கூடத் தெரியாது. ஆனால் என் யூலி மீது ஆசைப்பட்டு அவளுடன் அங்கசேட்டை விட்ட அவனைக் கொன்றால்தான் எனக்கு ஆத்திரம் அடங்கும் போல் இருந்தது. இருப்பினும் அதை விட எனக்கு என் காதல் முக்கியம், யூலி முக்கியம். அவளது வார்த்தைகள் முக்கியம்.

யூலி சற்றுநேரம் என்னுடன் பேசாது கோபமாக இருந்தாள். நான் அதிர்ந்து போனேன். எனது இதயம் வெடித்து விடும் போல இருந்தது. ''யூலி... யூலி'' என்றேன். திடீரென என்னைப் பார்த்து ஆவேசமாகத் திரும்பினாள். அவளது கண்களில் காதல் தெரிந்தது. அதனுடன் நான் அவனைத் தாக்கிவிட்டேன் என்ற கோபமும் வெளிப்பட்டது. அவள் பேச ஆரம்பித்தாள்.

''ஜோன் அவன் ஒரு தெருப்பொறுக்கி. இன்று நீ அவனை அடிக்க, நாளைக்கு அவன் தெருவில் நிற்கும் நாலுபேரைக் கூட்டி வந்து உன்னைத் தாக்கிவிட்டால் அதனால் மனவேதனைப்படுவது நான் தானே..? நீ ஒன்றுக்கும் பயப்படாதே. நான் உன்னை என்றைக்குமே கைவிடமாட்டேன். உன்னைத் தவிர என் மனதில் வேறு ஒருவருக்கும் இடம் இல்லை. கோபம் வரத்தான் வேண்டும். ஆனால் அது இப்படி எல்லைமீறக் கூடாது...''

யூலியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் எனக்குள் தேனாகப் பாய்ந்தது. நாங்கள் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

யூலி வீட்டுக்கும் என் வீட்டுக்கும் ஒரே வேலிதான் எல்லை. ஆனால் நாங்கள் அடிக்கடி சந்தித்துப் பேசுவது எங்கள் வீட்டுக்கு முன்னால் இருக்கும் சுப்பையாவின் கடைக்கு அருகில். எங்களுக்குள் இப்படி ஓர் உறவு இருக்குதென்று யாருமே இதுவரை சந்தேகப்பட்டதில்லை. யூலி எனக்குரியவள் என்று எனது ஊரிலுள்ள சகநண்பர்கள் சிலருக்கும் தெரியும். அதனால் அவர்கள் எல்லாரும் யூலியைத் தப்பான நோக்கத்தோடு பார்ப்பதில்லை. ஆனால் யூலி மீது அங்க சேட்டைவிட்டு என்னிடம் அடிவாங்கியவன் நிச்சயம் நல்ல குடும்பத்தில் பிறந்தவனாக இருக்கமாட்டான். அவன் ஒரு ஓடுகாலியாகத்தான் இருக்க வேண்டும். இருப்பினும் அவனுக்கு கூட நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருந்தேன். எனெனில் நான் யூலிமீது வைத்திருந்த காதலின் எல்லையை என்னை அறியாமல் எனக்கும், யூலிக்கும் வெளிப்படுத்துவதற்கு காரணமாயிருந்தவன் அவன் தானே..?

***

இந்தச் சம்பவம் நேற்று நடந்தது போல இன்னும் என் மனக்கண்களின் முன்னே வந்து போகிறது. ஆனாலும் ஒரு வருடம் கடந்துவிட்டதென்பனை உணரமுடியாத அளவுக்கு நான் ஒன்றும் உணர்ச்சியற்றுப் போய்விடவில்லை. அன்று என்னோடு அன்பு பாராட்டி எனக்கென்றே வாழ்ந்த யூலி இன்று என்னுடன் இல்லை. ஏன் அவள் என்னைக் காதலித்துவிட்டு வேறொருவனைத் திருமணம் செய்து விட்டாள் என்ற எண்ணம் உங்களுக்குள் எழலாம். அப்படி அவள் செய்திருந்தால் கூட அவளை ஒரு ஓரத்தில் இருந்தேனும் பார்த்து எனது மனதைத்தேற்றியிருப்பேன். அப்படியாயின் எனது யூலி எங்கே என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. யூலி இந்த உலகத்தை விட்டே போய் விட்டாள். மனிதர்கள் உணர்ந்து கொள்ளுவதற்கு எங்கள் காதல் ஒன்றும் மனிதக் காதலாக இருந்ததில்லை. அதையும் தாண்டி தெய்வீகமானது. எப்படியென்று கேட்கிறீர்களா...?

யூலியை எனக்குச் சின்ன வயதிலிருந்தே அறிமுகம். எனது வீட்டாருக்கும் யூலி வீட்டாருக்கும் உறவுகள் அவ்வளவு சுமுகமாக இருந்ததில்லை. ஏனெனில் ஒரே வேலிதானே இரு வீடுகளையும் பிரித்திருந்தது. அவர்கள் வேலிச்சண்டை போடும் போதெல்லாம் நாங்கள் பயந்து போய் எங்களது வீடுகளுக்குள் நின்றே கத்திக் கூச்சல் போடுவோம். சிறிது சிறிதாக ஆரம்பித்த வேலிச்சண்டை காவல்துறை வரைக்கும் போகும் என்று காவல்துறையினர் எங்களது வீட்டுக்கு வரும் வரையிலும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஆனால் எனக்கும் யூலிக்கும் எல்லைகள் மீது நம்பிக்கையில்லை. வீட்டார் காணி எல்லைக்குச் சண்டையிட நானும் யூலியும் எல்லைகளற்ற காதலை எங்களது மனதுக்குள் வளர்த்துக் கொண்டிருந்தோம். நாங்கள் இருவரும் வளரும் போது எங்களது காதலும் கூடவே எங்களுடன் சேர்ந்து வளர்ந்து கொண்டிருந்தது.

எங்கள் இருவரினதும் வீடுகளில் ஆட்கள் இல்லாதிருந்த தினங்கள்தான் எங்களது காதலின் தீபாவளித் திருநாட்கள். வேலிக்கூடாகப் பாய்ந்து நான் யூலி வீட்டுக்குச் சென்று விடுவேன். அதே போலத்தான் யூலியும். நாங்கள் இருவரும் இணைந்து விளையாடிய பொழுதுகள் இன்னும் எனது வாழ்வின் சுகமான வலிகள். ஆனால் நாங்கள் என்றைக்குமே கண்ணியத்தை மீறியதில்லை. காதலுக்கு அப்பால் எதையும் சிந்தித்தது கூட இல்லை.

வேலிச்சண்டையுடன் ஆரம்பித்த சண்டைகள் நாளாக நாளாக எங்களது விடயத்தில் சாதிச் சண்டைகளாகவும் பரிணமித்தன. காதல் வானத்தில் மிதந்து பறந்த எங்களது உணர்வுகளுக்குக் கடிவாளம் இடப்பட்டது. எமது காதல் இலேசாகக் கசிய வந்த நாட்களின் வலிகள் எங்களது இதயத்தை வேருடன் பிடுங்குவதாக அமைந்திருந்தன.

இருப்பினும் நானும் யூலியும் பொறுமையுடன் காலத்தை ஓட்டி வந்தோம். காதலில் எப்படியும் ஜெயிப்போம் என உறுதியாகவே இருந்தோம்.

அன்று ஒரு நாள் ஞாயிறு விடுமுறை. எனது வீட்டில் அன்றைக்கு ஆட்டு இறைச்சிக்கறி சமைத்திருந்தார்கள். எனக்கு ஆட்டு இறைச்சிக்கறி என்றால் மிகுந்தபிரியம். அதிலும் ஆட்டின் விலா எலும்பென்றால் அதை சுவைத்து ருசிப்பதில் எனக்கு நிகர் நான் தான். அதனால் எனது வீட்டில் கறிக்குள் இருக்கும் எலும்புகளை எனக்கே எடுத்துக் கொடுத்துவிடுவார்கள்.

யூலிக்கும் இறைச்சி என்றால் வாயூறும். அதை அவள் எனக்குப் பல முறை வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறாள். அன்றைய மதிய உணவு வேளையில் எனக்குப் பிடித்த எலும்புகளுடன் சோறு இடப்பட்ட உணவுத் தட்டு என் முன்னே இருந்தது. அதைச் சாப்பிட வேண்டும் போன்று ஆசையாகவும் இருந்தது. ஆனால் யூலியை நினைக்கும் போது மிகுந்த சங்கடமாக இருந்தது. அவளுக்கும் அந்த உணவைப் பரிமாறி நானும் உண்ண வேண்டும் என்ற உணர்ச்சி என்னிடத்தில் மேலேழுந்த போதும் அதில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் பற்றியும் ஒருமுறை யோசிக்க வேண்டியே இருந்தது.

ஒரு மணிநேரம் உணவுத் தட்டையே பார்த்துக் கொண்டிருந்தேன். பசியும் வயிற்றைக் கிளறியது. இதற்கு மேலும் பொறுமை காக்க முடியாது என எண்ணியவாறு உணவுத் தட்டைத் தூக்கிக் கொண்டு வேலிப் பக்கமாக ஓடினேன். அங்கிருந்தவாறு யூலியை அன்போடு அழைத் தேன். யூலி ஆவலுடன் ஓடிவந்தாள். இருவரும் இறைச்சியையும் சோற்றையும் ஒன்று சேர்ந்து உண்ண ஆரம்பித்தோம். அந்த உணர்வுகள் அந்த இறைச்சிச் சோற்றை விட இதமாகவும் மகிழ்வாகவும் இருந்தன. ஆனால் அது கணப்பொழுது கூட நீடிக்கவில்லை. அதற்குள் எங்கிருந்தோ ஓடிவந்த ஒருவன் ஒரு பெரிய கட்டையால் என்னைத் தாக்கினான். நிமிர்ந்து பார்த்தேன். அவன் யூலி வீட்டிலிருந்து வந்தவன். என்னைப் பலமுறை தாக்கினான். நான் வலி தாங்கமுடியாமல் கத்திக்குளறினேன். எனது உடலிருந்து குருதி பெருக்கெடுத்துப் பாய்ந்து கொண்டிருந்தது.

எனது நிலைமையைக் கண்டு யூலி வீரிட்டுக் கத்தினாள். அதற்குள் எனது வீட்டுக்காரரும் வந்து விட பெரிய பூகம்பமே வெடித்து விட்டது போன்ற ஒரு சண்டை அங்கே அரங்கேறியது.

யூலியின் வீட்டுக்காரர் எனது சாதியை இழுத்து அடிக்கொரு முறை கேவலமாகப் பேச எனது வீட்டிலிருந்தும் அசிங்கமான வார்த்தைப் பிர்யோகங்கள் பாவிக்கப்பட்டன. எனக்கோ செத்துவிட வேண்டும் போல் இருந்தது. ஆனாலும் யூலி என்னைக் காதலிக்கும் ஒரே காரணத்துக்காகவே உயிர் வாழ வேண்டும் போலவும் இருந்தது.

அன்றைய தினமே என்னை வைத்திய சாலைக்கு கொண்டு சென்றார்கள். எனக்கு மயக்க மருந்து கூட கொடுக்காமல் சிகிச்சை அளித்தார்கள். எனக்கு அடிபடாத இடங்களில் கூட அவசியமற்ற அறுவைச் சிகிச்சையை அவர்கள் மேற்கொண்டார்கள். ஏற்கனவே என்னைப் பற்றியிருந்த மனவலியுடன் உடல்வலியும் இணைந்த போது இந்த மனித சமுதாயத்தையே அழித்துவிட வேண்டும் என்ற எண்ணமே என்னிடம் மேலேழுந்தது.

நான் வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டேன். இரண்டு நாட்கள் யூலியைக் காணாது வேதனைப் பட்டுக் கொண்டிருந்தேன். மூன்றாவது நாள் அதிகாலைப் பொழுது கொடிய குண்டுச் சத்தங்களுடன் விடிய ஆரம்பித்தது. காலை ஏழு மணியளவில் எமது வீட்டுப் பகுதியிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன. நான் பயந்து போய் கட்டிலுக்கடியில் படுத்திருந்தேன். திடீரென்று ஒரு குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்துப் பிளந்தது.

ஒற்றுமையாக வாழத் தெரியாத மனிதர்கள் உருவாக்கியிருந்த யுத்தத்தினால் எமது ஊரே சின்னாபின்னமாகிக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் மனித ஓலமே மலிந்து கொண்டிருந்தது. சுவாச நுகர்வுகளில் மனிதக் குருதியின் மணம் மட்டுமல்லாது வாயில்லாத ஜீவராசிகளான ஆடு, மாடு, நாய்கள், பூனைகள் என்பவற்றின் குருதி வாடையும் கலந்து எங்களது ஊரையே உறைய வைத்துக் கொண்டிருந்தது.

தங்களுக்குள் சாதி, மத, மொழி, கலாசார வேறுபாடுகளைத் தாங்களே உருவாக்கிக் கொண்டு அவற்றின் பேரால் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டு உலகையே மரணப் பாதைக்கு இட்டுச் செல்லும் மனிதர்களின் செயலால் எங்கள் கிராமமே கணப் பொழுதுகளில் சுடுகாடாகியது. உயிருடன் இருந்தவர்கள் இறந்தவர்களைக் கைவிட்டுவிட்டு காயப்பட்டவர்களைக் கூடியளவுக்குத் தங்களுடன் அழைத்துக் கொண்டு, ஊரைவிட்டு ஓடிக் கொண்டிருந்தனர். ஆடுகளும், மாடுகளும் ஆங்காங்கே சிதறிச் சிதறிக் குண்டுகளுக்குப் பலியாகிக் கொண்டிருந்தன.

மதியம் பன்னிரண்டு மணியிருக்கும். சண்டை ஓரளவு குறைந்த போது பயந்து போயிருந்த நான் வெளியே எட்டிப் பார்த்தேன். எனது சிந்தனை முழுக்க யூலியை எண்ணியதாகவே இருந்தது. யூலியின் வீட்டுப் பக்கம் ஓடினேன். யூலி வீட்டையும் எனது வீட்டையும் இணைத்திருந்த சண்டைக்குக் காரணமான வேலியை அங்கே என்னால் காணமுடியவில்லை. ஷெல் விழுந்து சின்னாபின்னமாகியிருந்தது.

யூலியைத் தேடி அவளது வீட்டுக்குள் ஓடினேன். அங்கு நான் கண்ட காட்சிகள் என்னை ஒரு கணம் அதிர்ச்சியில் உறைய வைத்தன. யூலியின் கழுத்தில் காணப்பட்ட வெள்ளிச் சங்கிலியுடன் அவளது தலை மட்டுமே காணப்பட்டது. அவளது அழகிய மேனி ஷெல் வீச்சில் சின்னாபின்னமாகச் சிதறியிருந்தது. அவளது குருதி கொட்டியிருந்த மண்மீது எனது தலையை மோதி மோதி அழுதேன். ஆனாலும் அவள் என்னைப் பார்த்து ஒரு வார்த்தை கூடப் பேசாது இந்த உலகத்தை விட்டே பிரிந்திருந்தாள்.

மனிதர்கள் சுயநலக்காரர்கள். வாயில்லாத ஜீவராசிகளுக்கும் உணர்ச்சிகள் உண்டென்பதை உணர மறுப்பவர்கள். வாயில்லா ஜீவராசிகளும் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றன. அவைகளுக்கும் விருப்பு வெறுப்புகள் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளத் திராணியற்றவர்கள்.

ஓ மனிதர்களே! இனியும் வேண்டாம் சண்டைகள், சாதி, மத, இன, மொழி பாகுபாடுகள். சாதிக்கொடுமையால் இந்த உலகத்தில் பிரிந்து போன இறுதிக் காதல் எனது காதலாக இருந்து விட்டுப் போகட்டும். நான் காதலித்த யூலி உயர்ந்த சாதியாம். அவள் 'பொமெரியன்' சாதியைச் சேர்ந்தவளாம். ஆனால் நானோ சாதாரண 'ஊர் நாயாம்'. அதனால் தான் அவர்கள் எனக்குக் குடும்பக் கட்டுப்பாடும் செய்தார்களாம்.

இன்னும் சில நாட்களில் என்னைத் தேடி மரணமென்னும் தூது வரும். அது என்னையும் யூலியையும் சொர்க்கத்தில் இணைத்து வைக்கும். அதுவரை வேறு வழியில்லை. எனது கடமையைத் தொடரவேண்டியதுதான். சற்றுப் பொறுங்கள் யாரோ வருகிறார்கள்.... ஒரு நிமிடம் குரைத்துவிட்டு வருகிறேன்...

லொள்... லொள்... லொள்...

****

# இடத்துக்கு ஏற்ப ஆடைகளைத் தெரிவது எப்படி?

பெண்கள் வீட்டில் இருக்கும் போது உடை அணியும் விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டியது இல்லை என சில பெண்கள் நினைக்கிறார்கள். இது தவறான மனோபாவ மாகும். வீட்டில் இருப்பவர்கள் நம்மை சார்ந்தவர்களாகவே இருப்பினும் வீட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப உடை அணிவது வீட்டில் உள்ள ஆண்களுக்கு நிறைவாக இருக்கும். வீட்டில் இருக்கும் போது பகட்டாக உடை அணிவது தேவையில்லை என்றாலும் வீட்டிற்கு ஏற்ற மாதிரி பாந்தமாக உடை அணிவது அவசியமே.



**அதிக உடையும் குறைந்த உடையும்:**

பெண்கள் பொதி சுமப்பது போல உடல் முழுவதும் சுற்றிய நிலையில் அதிகமான அளவில் உடை அணிவது அழகைக் கெடுக்கும். அதற்காக அங்கங்கள் தெரியும் அளவுக்கு மிகவும் குறைவான ஆடைகளை அணியக் கூடாது.

**கடைத் தெருவுக்குப் போகும்போது:**

கடைத்தெரு, மார்க்கெட் போன்ற இடங்களுக்குச் செல்லும் போது இலேசான நிறம் அமைந்த புடைவை அல்லது மெல்லிய பூக்கள் போட்ட புடைவை அணிந்து செல்வது சூழ்நிலைக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

**புடைவைக்குப் பொருத்தமான பிளவுஸ்:**

பெண்கள் அணியக் கூடிய சோளிகளின் கைகளிலும், கழுத்திலும் லேஸ்களை வைத்துத் தைத்துக் கொண்டால் அவை என்ன வண்ணத்தில் புடைவை அணிந்தாலும் அதற்கு பொருத்தமாக இருக்கும்.

**அலுவலகம் செல்லும் பெண்களுக்கான ஆடை:**

அலுவலகங்களுக்கு, பாடசாலை, கல்லூரிகளுக்கு செல்லும் ஆசிரியைகள் மிகவும் பகட்டாகவும் கண்களைப் பறிக்கும் விதத்திலும் ஆடை அணிவதை தவிர்க்க வேண்டும். ஆனால் ஒரேடியாக மோசமான ஆடைகளைத்தான் அணிய வேண்டும் என கருதிவிடக்கூடாது. கண்ணியமான தோற்றத்தை அளிக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ற உடையை அணிந்து செல்வது மிகவும் அவசியம்.

**ஒல்லியான பெண்களுக்கான உடைகள்:**

மிகவும் ஒல்லியாக தோற்றமளிக்கும் பெண்கள் இறுக்கமாக உடை அணியக் கூடாது. பிளவுஸின் கைகள் கூட மிகவும் தடிப்பாக இல்லாமல் சற்று தளர்வாக இருப்பது நல்லது.

**புடவையின் அமைப்பும் உருவத்தோற்றமும்:**

பெண்கள் அணியும், அணியக்கூடிய புடவையின் அமைப்பு அவர்களின் தோற்றத்தையே மாற்றியமைக்கூடிய. தன்மையுடன் திகழ்கின்றது. புடவையில் உள்ள டிசைன் வெறும் அழகுக்காக மட்டுமே அமைந்திருப்பதாகக் கருதிவிடக்கூடாது. திட்டமிட்டு புடவையைத் தேர்ந்தெடுத்து உடுத்தினால் பெண்களின் உருவ அமைப்பையும் புரட்சிகரமாக மாற்றிவிடக்கூடும்.

உதாரணமாக பெண்கள் அணியக் கூடிய புடைவையில் அமைந்த கோடுகள் குறுக்குவாட்டில் அமைந்தால் உயரமான பெண்கள் குள்ளமாக இருப்பது போன்ற பிரமை பார்பவர்களுக்கு தோன்றும். புடைவையில் அமைந்த கோடுகள் நேர்வாக்கில் அமைந்தால் குள்ளமான வர்கள் சற்று உயரமாக இருப்பது போல காட்சி தருவார்கள்.



**கடற்கரை போன்ற இடங்களுக்கு சென்றால்:**

கடற்கரை போன்ற பொது இடங்களுக்கு குடும்பத்துடன் செல்லும் போது மிகவும் நெருக்கமாக கட்டம் போடப் பட்ட மிகவும் அழுத்தமான சாயம் கொண்ட கைத்தறி சேலைகளை உடுத்திச் சென்றால் அழகாக இருக்கும்.

பெண்

தொகுப்பு:சாந்தி

# சகோதரிகளின் பார்வைக்கு...

## நம்பிக்கைத் துரோகம்!

நான் 1998 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து அகதியாக வெளியேறி சுவிஸ் நாட்டில் தஞ்சம் அடைந்து என் கணவருடன் இரண்டு பிள்ளைகளுடனும் வாழ்ந்து வருகின்றேன். நானும் எனது கணவரும் கடுமையான குளிரில் இரவு, பகல் பாராது கஷ்டப் பட்டு நேர்மையாகவும், உண்மையாகவும் உழைத்து இலங்கை ரூபாவில் இரண்டு கோடி பெறுமதியான வீடு ஒன்றும், காணி ஒன்றும் மட்டக்களப்பில் வங்கியிருந் தோம். இவற்றைப் பராமரித்துத் தருவதாக எனது சொந்த அக்காவின் கணவர் எம்மிடம் கேட்டிருந்தார். பராமரிப்பதற்கு மட்டும் நாம் சம்மதித்திருந்தோம்.

இது இவ்வாறு இருக்க தான் லண்டனில் மேற்படிப்புக்குச் செல்ல இருப்பதாகவும் அதற்கு பணம் ஒரு தடையாக இருப்பதாகவும் அக்காவின் கணவர் சொன்னார். அத்துடன் எனது அக்காவையும் அவர்களது ஒரே மகளையும் சேர்த்து அழைத்துச் செல்வதற்காக இலங்கை ரூபாவில் 40 லட்சம் தரும் படி கெஞ்சிக் கேட்டார். அப்போது நாம் கஷ்டத்தில் இருந்தமையால் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருந்தோம். எனினும் அவரதும், அக்காவினதும், மகளினதும் எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக மாறவேண்டும் என்ற ஒரே நல்ல எண்ணத்தில் இங்கு வட்டிக்கு கடன் வாங்கி பணம் கொடுத்தோம்.



உதவிகள் அனைத்தையும் பெற்றுக் கொண்ட பின் பல்வேறு விதமான மோசடி வேலைகளைச் செய்து தனது தனிப்பட்ட விருப்பத்தின் பெயரில் எமது பெயரில் இருந்த வீட்டையும், காணியையும் விற்று பணத்தை எடுத்துக் கொண்டார். அதுவும் இல்லாமல் 23.09. 2009 அன்று மட்டக்களப்பில் இருந்த போது கொள்ளையர்கள் சிலரால் ஆயுத முனையில் கடத்தப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு வெலிக்கந்த காட்டினுள் விடப்பட்டதாகவும் எமது உறவினர்கள் சிலரிடம் கூறி நாடகம் ஆடினார். 27.09.2009 அன்று தான் மட்டும் லண்டனுக்கு சென்றுவிட்டு மீண்டும் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி (2009) இலங்கைக்குத் திரும்பிச் வந்துவிட்டார்.

நாம் மானசீகமாக மனிதர்களை நம்புவது தவறா? எமது குடும்பத்தில் ஒருவராக வாழ்ந்து எமது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும், நண்பர்களையும் ஏமாற்றி இந்த மாபெரும் துரோகத்தை செய்த இந்த மனித உருவத்தில் உள்ள மிருகத்துக்கு என்ன தண்டனை கிடைக்கும்? இவர் தெய்வத்தின் நீதியில் இருந்து தப்ப முடியுமா? நாம் இரவு பகல் பாராது கஷ்டப்பட்டு உழைத்ததை இன்னொருவர் அனுபவிக்கிறார். பணத்தை எப்போதாவது திரும்ப உழைத்து சேர்த்துக் கொள்ளலாம். கூடப் பிறந்த அக்காவினுடைய கணவனின் இந்த செயல் எங்களின் முழுக் குடும்பத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறான துரோகிகள் எம் மத்தியில் இருக்கிறார்கள்.

என் நிலை ஏனைய சகோதரிகளுக்கும் ஒரு பாடமாக அமையட்டும். குறிப்பாக வெளிநாட்டில் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து உறவுகளுக்கு பணத்தை அளவு கணக்கு இல்லாமல் வாரி இறைக்கும் இது ஒரு பாடமாக இருக்கட்டும். அவர்கள் கஷ்டப் பட்டு உழைத்து அனுப்பும் பணம் சில ஊதாரிகளினால் வீணடிக்கப்படுகின்றது என்பதை அனைவரும் அறியவேண்டும். எனவே தான் என் போன்ற சகோதரிகளுக்கு இது ஒரு அனுபவ பாடமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இதை எழுதியுள்ளேன்.

சுவிஸில் இருந்து சுடர் ஒளி வாசகி.

## அவியல்

**தேவையான பொருட்கள்:**

கத்தரிக்காய் - 150 கிராம்.
உருளைக்கிழங்கு - 3
வெங்காயம் - 2
தக்காளி - 2
தேங்காய் - 1 பாதி
பச்சைமிளகாய் - 3
பூண்டு - 3 பல்
சோம்பு - 1 தேக்கரண்டி
பொட்டுக்கடலை - 1 தேக்கரண்டி
எண்ணெய் - 3 தேக்கரண்டி
கராம்புப் பட்டை - 1 துண்டு
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, வெங்காயம், தக்காளி ஆகியவற்றை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காயை துருவி, அத்துடன் பச்சை மிளகாய், சோம்பு, பொட்டுக்கடலை, பூண்டு ஆகியவற்றை சேர்த்து இலேசாக அரைத்துக் கொள்ளவும்.

தாச்சியில் எண்ணெய் விட்டு, கராம்புப் பட்டையைத் தாளித்து, நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கவும். பிறகு அதில் நறுக்கிய காய்கறிகள், தக்காளி, தேவையான உப்பு சேர்த்து காய்கறி வேகும்வரை கிளறவும்.

அரைத்து வைத்துள்ள மசாலாவை நன்றாக கரைத்து ஊற்றி, கொதிக்க விட்டு இறக்கவும். இந்த அவியலை மோர் சாதத்துடன் சேர்த்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும் **சகோதரிகளின் பார்வைக்கு** நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம். இச்சமூகத்தில் சகோதரிகள் பட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.

**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**

சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி
மாவத்தை,
கொழும்பு 14.

# அசினின் காவல்கரனாக விஜய்!



நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழுக்கு வந்திருக்கிறார் அசின். சித்திக் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தில் இவர்தான் ஹீரோயின்.

மலையாளத்தில் திலீப், நயன்தாரா நடிப்பில் உருவான 'பொடிகார்ட்' படத்தின் ரீமேக்தான் இந்தப் படம். 'பொடிகார்ட்' படத்தில் பணக்கார வீட்டுப் பெண்ணான நயன்தாராவைப் பாதுகாக்கும் 'பொடிக்கார்ட்' ஆக நடித்திருந்தார் திலீப். தமிழில் அசினின் 'பொடிகார்ட்' விஜய். பொடிகார்டை தமிழில் 'பாதுகாவலன்' என்று மொழிபெயர்க்கலாம். இன்னும் கொஞ்சம் இறங்கி வந்தால் 'காவல்காரன்' என்றும் சொல்லலாம். காவல்காரன் எம்.ஜி ஆர். நடித்த படத்தின் தலைப்பு. விடுவாரா விஜய்? அதையே தனது படத்தின் தலைப்பாக்கியிருக்கிறார். அண்மையில் காவல்காரன் படத்தின் ஷூட்டிங் தொடங்கியது. படுவேகமாக படத்தை முடிக்கத் திட்டமிட்டிருக்கிறார் விஜய்.

# அனுஷ்கா அவுட்; தமன்னா இன்!

'விக்ரமார் குடு' படத்தை தமிழில் 'சிறுத்தை' என்ற பெயரில் ஞானவேல் தயாரிக்கிறார். கார்த்தி ஹீரோ. எப்போது படத்தை அறிவித் தார்களோ... மாற்றத்துக்கு மேல் மாற்றமாக போய்க்கொண்டிருக்கிறது விடயங்கள். முதலில் படத்தின் இயக்குனரை மாற்றினார்கள். பிறகு ஹீரோயின். அனுஷ்கா என்று தீர்மானித்திருந்தவர்கள் தற்போது தமன்னாவை ஒப்பந்தம் செய்துள்ளனர். கார்த்தியின் ரெக்கமன்டேஷனாம். படப்பிடிப்புத் தொடங்கிய நிலையில் இப்போது படத்தின் பெயர் சிறுத்தை யையும் மாற்றத் தீர்மானித்திருக்கிறார்கள். புதிய பெயர் விரைவில் அறிவிக்கப் படும். இந்தப் படத்தை சிவா என்பவர் இயக்கி வருகிறார்.

படம்—கச்சேரி ஆரம்பம்



# ஷாமுக்கு பெண் குழந்தை

*12 பி' படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமானவர் ஷாம். தொடர்ந்து 'ஏய் நீ ரொம்ப அழகா இருக்கே', 'இயற்கை', 'உள்ளம் கேட்குமே' என வித்தியாசமான படங்களில் நடித்தார். சமீபத்தில் அவர் நடிப்பில் வெளிவந்த 'கிக்' என்ற தெலுங்குப் படம் ஆந்திராவில் வசூல் சாதனை புரிந்தது. இப்போது அந்தப் படத்தின் தமிழ் ரீமேக் 'தில்லாலங்கிடி'யில் ஜெயம் ரவியுடன் இணைந்து நடிக்கிறார். 'அகம் புறம்', 'தூசி' என புதிய படங்கள் ரிலீஸாக உள்ளன. இந்நிலையில், ஷாமின் மனைவி காஷிஷுக்கு பெங்களூர் தனியார் வைத்தியசாலையில் பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. குழந்தை பிறந்ததை மகிழ்ச்சியுடன் அனைவருக்கும் தெரிவித்தார் ஷாம்.*

*ஷாமுக்கு ஏற்கெனவே ஸமைரா என்ற பெண் குழந்தையும் உள்ளார்.*

மூன்று மாத திட்டத்தில் 'பார்முலா -2' ரேசுக்குக் கிளம்பிய அஜித், ஒன்றரை மாதத்திலேயே திரும்பும் எண்ணத்தில் இருக்கிறாராம்.இது ஏன்? அவரது மனசுக்குள் அவர் நினைத்தால் நினைத்ததுதான். நல்லவேளையாக இது சலிப்பினால் வந்த பின்வாங்கல் இல்லை என்கிறார்கள் கோடம்பாக்கத்தில். அவரது எளிமைக்கு இன்னும் ஒரு சான்று என்று அஜித் தரப்பில் வைக்கப்படுகிற சங்கதி, ரொம்பவே அழகு. பைவ் ஸ்டார் ஹோட்டல்கள், பளபள தங்கும் விடுதிகள் என்று இவர் போயிருக்கிற ஏரியா பிரபலமாக இருந்தாலும், 3 படுக்கையறை கொண்ட பிளாட் ஒன்றில்தான் தங்கியிருக்கிறாராம் தல. இவருக்கென்று சமைத்துப்போட இந்திய சமையல்காரர் ஒருவரும் அவருடன் இருக்கிறாராம். (குழந்தைக்குப் பனி ஒத்துக் கொள்ளாது என்பதால் கடைசி நேரத்தில் குடும்பத்தை இங்கேயே விட்டுவிட்டு போயிருக்கிறார் தல) முதல்வரைச் சந்தித்து தனது ரேசுக்காக ஸ்பொன்சர் கேட்டிருந்த அஜித், அதன்பின் இந்த விடயத்தைத் திரும்பத் திரும்பக் கேட்டு நச்சரிக்காமல் போனதாலோ என்னவோ, அது பற்றி இவர் கிளம்புகிற வரைக்கும் கூட யாரும் கண்டுகொள்ள வில்லை. ஆனால், கும்பிடப் போனவருக்கு குறுக்கேவே பிள்ளையார் என்பது மாதிரி ஒரு அதிர்ஷ்டம். ஈரநசியா மோட்டார் ஸ்போர்ட்ஸ் மேனேஜ்மென்ட் என்ற நிறுவனம் அஜித்திற்கு ஸ்பொன்சர் செய்திருக்கிறதாம். இது ஒருபக்கம் இருந்தாலும், தனது கைப் பணத்தில் சுமார் ஐந்து கோடி வரை செலவு செய்திருக்கிறாராம் அஜித்.

# அஜித்துக்கு பொன்சர் கிடைச்சாச்சு

தொகுப்பு: எஸ்.ஜெய்



அர்ச்சனா

# யாழ் சர்வதேச வர்த்தகச் சந்தை சிறப்பிதழ்

**2010 ஏப்ரல் 18-20**
**(யாழ் மத்திய கல்லூரி: மு.ப. 10.00 முதல் பி.ப. 7.00 வரை)**



## Message From the High Commissioner of India

I am extremely pleased to hear that Jaffna International Trade Fair is being organized by the Yalparnam Chamber of Commerce and Industry from 18-20 April 2010. I am also happy to learn that a large delegation of Indian businessmen would be participating in the event.

Our ties with Sri Lanka, and in particular, with the people of Jaffna are age-old and time-tested. As the people of Jaffna seek to resurrect their lives after years of armed conflict, the government and the people of India remain deeply committed to contribute in all possible ways for a return to normalcy in the region. We have already taken several steps to contribute to the ongoing reconstruction efforts in northern Sri Lanka and would continue to work towards this very important objective.

The organization of this trade fair is a laudable initiative and I would like to convey my best wishes to the organizers in this regard. I sincerely hope that the trade fair would result in important tie-ups between the business entities of India and Sri Lanka and contribute



## Message From the President of Federation of Chambers of Commerce & Industry of Sri Lanka

The Federation of Chambers of Commerce & Industry of Sri Lanka is indeed privileged to be a part of Jaffna International Trade Fair which will be held from April 18 20, 2010 at the Jaffna Central College which is a joint initiative of FCCISL, Lanka Exhibition and Conference Services (Pvt) Limited together with the assistance of Chamber of Commerce and Industries of Yarlpanam.

The primary aim of FCCISL is to promote and accelerate economic growth, social progress and cultural development of the regions. And I strongly believe that Jaffna International Trade Fair will be one of the principal organs in driving North and East to achieve these objectives. This exercise will undoubtedly create a gateway to re-establish & pursue new links and discuss future business opportunities.

For focusing the attention of Global players towards Jaffna, India will be the partnering country of the Trade Fair aiming at striking new partnerships, exploring virgin business opportunities and sharing best practices across many business entities thereby forging closer economic cooperation between the two countries.

Jaffna International Trade Fair will be characterised by a very peculiar flour: a look to the future, aiming at new products, new materials, new markets, taking into account, at the same time, the traditional refinement and taste that are peculiar to products which are never out-of-date.

This is not only a trade show, with over 150 exhibitors; it is an irrevocable choice, that is well-regarded by Business Community and visitors, both end-consumers and professionals and specialized entrepreneurs.

I wish to thank staff of LECS, FCCISL, both local and



## Message From the Chairman, Chamber of Commerce & Industries of Yarlpanam

I am pleased to send this message to the exhibitor's directory of the Jaffna International Trade Fair, 2010 to be held on 18th to 20th April, 2010 at the Jaffna Central College.

The objective of this International Trade Fair Is to create possible awareness the latest technologies available in our country and abroad in the production and manufacture of various items

With the end of hostilities, massive development projects have begun to roll out and there will be a boom in manufacturing industry in the near future. The International Trade Fair will pave the way for our members and the stake holders to gear themselves to meet the challenges ahead by adopting the latest technologies depicted at the exhibition.

The International Trade Fair will have participation of leading machinery manufacturers and technology providers from all over the India and this will provide an ideal opportunity for our local manufacturers to select their plant and machinery needed for their industrial development.

The trade fair is an ideal platform for our local industrialists to showcase their products and thereby it will create very good market for their products locally as well as for international market.

My special thanks go to the professional exhibition organizer, Lanka Exhibition and Conference Services



## Message From Managing Director, Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

It is with great pleasure that I extend this message on the inauguration of the First ever international trade exhibition in Jaffna. Jaffna has the potential to become a major center for commerce in the country and this should not be left unutilized.' Jaffna International Trade Fair' will create an ideal opportunity for the business community from all over sri lanka as well as overseas to meet the potential entrepreneurs and investors in the north after a lapse of decades. This event will create a gateway to re-establish & peruse new trade links and discuss future business opportunities. As the organizer Lanka Exhibitions and Conference Services is proud to be associated with CCIY, FCCISL & Convention Bureau In this unique event.

We believe that in organizing exhibitions of this nature, we pave the way for many companies and small & medium scale enterprises to have the opportunity to understand the core benefit of exchanging ideas for trade. Buyers and sellers locally as well as foreign to meet under one roof with the prospect of gathering and exchanging information to produce what consumers demand.

The objective of such exhibitions is to create a global market demand for Sri Lanka products and services, especially in the construction industry, processed food and agriculture sector & in many other industries. With the dawn of Peace in Sri Lanka we are extremely grateful



## Message From Director, Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

It is with great pleasure that we bring to you the first Jaffna International Trade Fair organized from the 18th 20th of April 2010 at Jaffna Central College. We are sure that our knowledge & experience in the exhibition industry will enhance the profile of this event.

Jaffna International Trade Fair will be the gateway for many companies to have the opportunity to enter a new market which has been alienated for nearly three decades due to the war. Buyers and sellers locally as well as foreign can meet under one roof with the prospect of gathering and exchanging information to produce what consumers demand.

The objective of this event to connect the Jaffna with the rest of the world and to speed track the industrialization of Jaffna

I take this opportunity to thank our local partners, Chambers of Commerce & Industry in Yarlpanam, Sri Lanka Convention Bureau, Federation of Chambers of Commerce & Industry in Sri Lanka and our country partner India for all their valuable support in making this event a success.



## Message From General Manager, Sri Lanka Convention Bureau ( SLCB)

It was a brave business step on the part of Lanka Exhibition and Conference Service (LECS) to stage ' Jaffna International Trade Fair 2010' in April this year which opens new doors for SLCB in its promotional efforts in MICE Tourism ( Meetings, Incentive Travel, Conferences and Exhibitions).

Apart from the usual economic benefits that an Exhibition generates to all stake holders, this exhibition is open for foreign exhibitors particularly the Business houses in India which is our primary market for MICE tourism.

In the light of the Government's present efforts to develop tourism sector in which MICE industry will play a key role to entice up-scale, high spending visitors into the country, LECS should be congratulated for holding this event, which would be a spring board for greater heights in Tourism for economic benefits that will cascade down to the masses.

Vipula Wanigasekera

Organizers & Sponsors
ORGANISED BY:
LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
SPONSOR
Sri Lanka Telecom Mobitel We Care. Always.
JOINTLY ORGANISED BY
FCCISL Sri Lanka
IN ASSOCIATION WITH:
CCIY
SUPPORTED BY:
SRI LANKA CONVENTION BUREAU
PARTNER COUNTRY
INDIA
OFFICIAL PRINT MEDIA
சுடர் ஒளி
OFFICIAL RADIO


Hants
ஹேன்ட்சில் தரமான பொருட்கள்
STYROFOAM
EXPANDED POLYSTYRENE
ஸ்டைரோபோம்
சீட்ஸ், பெட்டி மற்றும் கேக் வடிவமைப்புகள்
Comfilux
INNERSPRING MATTRESSES
கொம்பிலக்ஸ்
ஸ்பிரிங் மெத்தைகள்
Polyflex
POLYURETHANE FOAM PRODUCTS
பொலிபிலெக்ஸ்
குஷன், மெத்தைகள், தலையணை மற்றும் ஸ்பொன்ஞ்
Wilton
Cake Decorating Equipment
வில்டன்
கேக் அலங்கார சாதனங்கள் மற்றும் அலங்கார பொருட்கள்
விநியோகஸ்தர்கள் தேவை தொடர்புகளுக்கு திருமதி. ரோமா அன்தனி
இல:-191, ஹேகித்த வீதி, வத்தல.
தொ. பே. இல :- 2933461, 2933460, 2932158


DBL
உத்தரவாதத்துடன்
சீனாவில் சிறந்த விருந்து பெற்ற
Dongcheng
Power Tools
டொங்செங் ஒன்றுக்கு ஒன்று
இலவசம்
அல்லது
பாவனை செய்தபழையதைக் கொடுத்து
40% கழிவைப் பெற்றுக் கொள்ளவும்
HOTLINE
077-767693
தவற விடாதீர்கள்
Deen Brothers Imports (Pvt) Ltd.
E:mail: deenimp@sltnet.lk Web: www.dbl.lk


PAPERCOM TRADERS
SHALON MACHINERY & SERVICES (PVT) LTD
(Member Of Papercom Group)


From the House of Rainco
Light & Shade
Window awnings
Blinds
French Canopy
Bamboo blinds
Leisure umbrella
Dome canopy
வீடுகளின், அலுவலகங்களின் சூழலை ரம்மியமான முறையில் வைத்திருக்க வாடிக்கையாளர்களுக்கான மிகச்சிறந்த, தெரிவை வழங்குவதில் முன்னோடிகள்.
5000ற்கும் மேற்பட்ட சாப்பாட்டு விடுதிகள், உல்லாச விடுதிகள் வங்கிகள் வீடுகள் போன்றவற்றிற்கான முன்னணி விநியோகஸ்தர்கள்
யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகச்சந்தை 2010ல் எமது சேவைகளை பெற காட்சி அறை B149ற்கு வருகை தாருங்கள்.
காலம் : 18-20 ஏப்ரல் 2010.
இடம் : யாழ்ப்பாண மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
Telephone: 0773 511 135 Fax: 011 747 0034
www.lightnshade.com

The wind beneath your wings

**MIGRATION**
LAWYERS

DO YOU WANT TO
MAKE THE MOVE OF YOUR LIFE?

ARE YOU THINKING OF MIGRATING,
STUDYING
VISITING FAMILY & FRIENDS ABROAD?

Experienced Foreign Qualified Lawyers
offer a full range of Visa Solutions to;

**UK, AUSTRALIA, CANADA, USA**

Visit us at the
*JAFFNA INTERNATIONAL TRADE FAIR* | Jaffna Central College
Stall No. D 164
18th to 20th April, 2010.

*Contact;*
Ms.Bushra Hashim
Attorney-at-Law, LL.B (Sri Lanka), LL.M (Wales)
Ms. Hamsakanambiha Vamadeva
Attorney-at-Law, LL.B (Colombo), LL.M (Wales)

218, Hulftsdorp Street, Colombo 12, Sri Lanka.
Tel: 0112940336, 0776-159361, Fax: 0112940338
E-mail: migrationlawyers@rocketmail.com




No 1 Bicycles

**டொமோஹோக்**
சைக்கிள்கள்

**யுனிடி டிரேடிங் கம்பனி** இல. 107, ... வீதி கொழும்பு 11. தொலைபேசி : 2434511, 2390372

தேவையான உதிரிப்பாகங்கள் எங்கும்
விற்பனை முகவர்கள் நாடெங்கும்

வெங்கடேசுவரா ஸ்ரோர்ஸ்
125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021-2222905/ 021-2228306

கணேசலிங்கம்
05, ஜும்மா லேன் யாழ்ப்பாணம்
தொ.பே.: 091-2227281

ச.எஸ்.பி. கஜமுகன் ஹாட்வெயார்
50, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021-2222988

யாழ். சர்வதேச 2010 கண்காட்சியின் எங்களது காட்சியறைக்கு விஜயம் செய்யுங்கள்.




ஏப்ரல் 18,20 2010 ல் யாழ்பாண மத்தியக் கல்லூரியில் நடைபெறவுள்ள "யாழ்பாண சர்வதேச வர்த்தகச்சந்தை 2010" இற்கு அன்புடன் வரவேற்கிறோம்.

எமது காட்சி அறைகள் A60 ,B21 Telephone: 0777 890978 /011 7474001 www.erainco.com

# 'டுவெல்கோ' யாழ்ப்பாணத்தில் காலடி பதிக்கின்றது

வீடொன்றைக் கட்டிக்கொள்வதென்பது எந்த ஒரு மனிதனுக்கும் இருக்கக்கூடிய கனவுதான்.

இந்தக் கனவை நிறைவேற்றிக் கொள்ள 'டுவெல்கோ' நிறுவனம் உங்களுக்குச் சேவைப் பொதியொன்றை வழங்கத் தயாராகவுள்ளது. வீடொன்றைக் கட்டுவதானால் பல்வேறு ஆசைகளும் கவலைகளும் மனதில் தலைதூக்கவே செய்யும்.

எவ்வாறு அதனைக் கட்டப் போகிறேன்? ஒப்பந்தக்காரரை நம்பலாமா? அவர் தரமாக அதனைக் கட்டித்தருவாரா? நேரத்துக்கு வேலை முடியுமா? மதிப்பிடப்பட்ட தொகைக்குள் கட்டித்தருவாரா? வீட்டுத் திட்டதை எவ்வாறு அங்கீகரித்து எடுப்பேன்? செலவுகளைச் சரிக்கட்ட

**உங்கள் காணியில் உங்கள் வீட்டை கட்டிட ஒரு புதிய அரிய சந்தர்ப்பம்**

கடனை எவ்வாறு ஏற்பாடுசெய்வேன்? போன்றவை முக்கியமான பிரச்சினைகளாக முகம் கொடுக்கப்படலாம்.

'டுவெல்கோ' (Dwellco) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.தர்ஷன் ஜோன் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டார்.

Dwellco வானது 1980 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வாடிக்கையாளரின் சொந்தக்காணியில் அவர்களுக்கு திருப்தியளிக்கும் விதத்தில் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் நோக்கத்தையே முதன்மையாகக் கொண்டு இது ஆரம்பிக்கப்பட்டது.

தனிப்பட்ட முறையில் சேவைகளை வழங்குவது, வீட்டை வடிவமைத்து கட்டுவது, பிரபல்யமான வங்கிகளிலிருந்து கடன் வசதிகளை ஏற்பாடு செய்து கொடுப்பது முதற் கொண்டு சட்டரீதியான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொடுப்பது வரை இந்நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைப் பொதி அடங்கியிருக்கின்றது. இந்த சேவையானது வாடிக்கையாளருக்குரிய செயற்பாடுகள் அனைத்தையும் இலகுவாக்கி உதவுகின்றது.

வீடு ஒன்றைக் கட்டுவதானது வாழ்க்கை முழுவதுக்கும் ஒரு முதலீடு என்று 'டுவெல்கோ' நிறுவனத்தினர் கருதுவதாக திரு.ஜோன் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் கட்டப்படுகின்ற வீடுகள் சம்மதிக்கப்பட்ட மாதிரிகள் தரங்களுக்கு எந்தவகையிலும் மாறுபடாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் எமது அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கொடுப்பனவு தொடர்பான திட்டமானது, சந்தேகத்துக்கோ தவறான புரிந்து கொள்ளலுக்கோ இடமில்லாத வகையில் மிகத் தெளிவான ஒன்றாகவிருக்கிறது. முன்கூட்டியே அறுதியிடப்பட்ட கொடுப்பனவு அட்டவணையை அடிப்படையாக வைத்தே கட்டடம் முன்னேறுகையில் கொடுப்பனவுகளும் கோரப்படுகின்றன.

வாடிக்கையாளர்கள் தமது அலுவலகத்துக்கு வருகையில் அவர்கள் மரியாதையோடு வரவேற்கப்படுகின்றார்கள். நட்பு முறையிலான வீட்டில் இருப்பது போன்ற சூழ்நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது என்றார்.

வீட்டுக்கான மாதிரி வடிவம் தீர்மானிக்கப்பட்டவுடன் ஒரு தொகை பணம் தொடர்பான உறுதியான 'கோட்டேஷன்' ஒன்று வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். பாவிக்கப்படவேண்டிய பொருள்கள் உட்படச் சகல விவரங்களும் அவருக்கு வழங்கப்படும். அதன் பின் வாடிக்கை

(தொடர்ச்சி 19 ஆம் பக்கத்தில்...)



மின்சார உற்பத்தியிலும், தொழிற்சாலைகளுக்கு குளிரூட்டுவதிலும் முன்னோடிகள்

FG WILSON

GENERATOR SALES | SERVICE | SPARES | SOUND ATTENUATION




AIR CONDITIONERS | BLOCK ICE PLANTS | AMERICAN AIRE




COLD ROOMS

RINAC INDIA LIMITED



BLOCK ICE PLANTS



KOOLAIR (PVT) LIMITED

220, High Level Road, Kirulapone, Colombo-06

Tel : 2811065, 2825661-3, 2819319


Fax : 2817666

E-mail : powereal@isplanka.lk

Website : http://www.koolairgroup.com



உங்கள் கனவு இல்லம் உங்கள் காணியில்.......



Built in style... your style.

20 Dwellco

ESTD: 1989

Years of Solid Construction...

'DWELLCO'வின் உத்தரவாதங்கள்

- உங்கள் பணத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்ற வகையிலான வடிவமைப்பு
- மேலதிக செலவுகளோ கட்டணங்களோ அற்ற நிர்ணயித்த விலை
- குறித்த காலத்தில் வீடுகள் கையளிப்பு
- சிரேஷ்ட முகாமையாளர்களின் தனிப்பட்ட கவனிப்பு
- தரம்மிக்க உதிரிப்பாகங்களும் வேலைப்பாடுகளும்
- ஒருங்கிணைக்கப்பட்ட சகல சட்டரீதியான அங்கீகாரங்கள்
- 20 வருடங்களுக்கு மேலான எமது கட்டுமானத்துறை அனுபவம்
- வங்கிக்கடன் வசதி HNB

Dwellco (Pvt) Ltd

Branch: Point Pedro Road, Kopai South, Kopai.

Hotline: 077 3733345, 077 3733346

No. 1090, Sri Jayawardenapura Road, Rajagiriya, Sri Lanka.

Tel: 11 2873471-3 Fax: 11 2873475

Email: sales@sltnet.lk Website: www.dwellco.com

# பரத் கொடுத்த பிரேக்!



பம்பரமாக சுழன்றுக் கொண்டிருக்க வேண்டிய நேரம், பாஸ்போர்ட்டைஎடுத்துக்கொண்டு ஹொங்கொங் சென்றிருக்கிறார் பரத்.
எதற்கு? கோடை வந்துவிட்டதால் குளுகுளு ஏரியாவுக்கு வண்டியேறுவதை ஒரு பழக்கமாக கொண்டிருக்கிறார் பரத். இந்தமுறை அவர் சென்றிருப்பது ஹொங்காங். இந்தத் திடீர் பயணத்தால் குழப்பத்தில் இருக்கிறாராம் பேரரசு. 'திருத்தணி' படத்தை முடித்து திரைக்குக் கொண்டுவரும் அவரது எண்ணத்துக்கு 'பிரேக்' போட்டிருக்கிறது பரத்தின் ஹொங் கொங் சுற்றுலா. பேரரசு 'திருத்தணி' படத்தை இயக்குவதுடன் இசையமைக்கும் வேலையையும் எடுத்துக் கொண்டிருக்கிறார். இவரது இசையில் விஜய டி.ஆர். பாடியிருக்கும் பாடல் 'திருத்தணி'யின் ஹைலைட்களில் ஒன்று. இன்னும் ஓரிரு மாதங்களில் 'திருத்தணி' திரைக்கு வருகிறது.



படம்—ஆயுதப் போராட்டம்

# பிரபா வழியில் விஜய்!

அரசியலில் குதிக்கவுள்ள விஜய்க்கு சொல்லப்பட்டிருக்கும் ஒரு அட்வைஸ், மிகவும் மரியாதைக்குரியது!
மக்கள் மன்றத்தில் பேசும்போதும், எழுதும்போதும், 'என் உயிரினும் மேலான தமிழ் மக்களே' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்படி சொல்லியிருக்கிறாராம் அவரது அப்பா. இந்த வார்த்தை விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்தி வந்த மந்திர வார்த்தை. இனிமேல் எங்குப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள நேர்ந்தாலும், இந்த வார்த்தை ஞாபகம் இருக்கட்டும். பெரும் போராளி ஒருவர் உபயோகப்படுத்திய இந்த வார்த்தைக்கு ஓர் ஈர்ப்பு உள்ளது என்றெல்லாம் லெக்சர் எடுத்தாராம் அப்பா. இதை யடுத்து எல்லா மேடைகளிலும் இதைப் பயன்படுத்த தொடங்கியிருக்கிறார் விஜய்.

# வில்லன் வேடத்துக்கு கோடிகள் வாங்கும் ஆர்யா

தெலுங்கில் ஆர்யா வில்லனாக நடித்த 'வருடு' என்ற படம் ஆந்திராவில் வெளியாகி நல்ல வசூலுடன் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் தென்னிந்திய நடிகர் சங்கத்தில் புகார் ஒன்றைப் பதிவு செய்தார் ஆர்யா. 'வருடு' படத்தின் தயாரிப்பாளர் பேசிய சம்பளத்தில் சுமார் 17 லட்சம் வரை தரவில்லை, அதை வாங்கித் தாருங்கள் என்பது புகாரின் சாராம்சம்.
'வருடு' தயாரிப்பாளருடன் பேசிய நடிகர் சங்கம் அந்தத் தொகையை ஆர்யாவுக்கு பெற்றுக் கொடுத்துள்ளது. சம்பளப் பாக்கியை ஆர்யா கறாராக வாங்கிய பிறகு அனைவர் மனதிலும் ஒரு கேள்வி. 'வருடு' படத்துக்காக ஆர்யா வாங்கிய சம்பளம் எவ்வளவு?
பலரும் பலவிதமான பதில்களை கூறுகிறார்கள். ஆனால் உண்மை...? சுமார் 3 கோடியைத் தாண்டுகிறது என்கின்றன நம்பத்தகுந்த வட்டாரங்கள். தென்னிந்திய சினிமாவில் எந்தவொரு வில்லனும் இத்தனை பெரிய சம்பளத்தைப் பெற்றதில்லை என்கிறார்கள் தெலுங்குப் படவுலகில்.
'வருடு' படத்தில் ஆர்யா ஒப்பந்தமான போது ஹீரோவாக நடித்துக் கொண்டிருந்தவர் எதற்கு வில்லனாக நடிக்கிறார் என்று சலித்துக் கொண்டார்கள். சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை என்பது இப்போதுதான் அவர்களுக்கு புரிந்திருக்கிறது.



# கோடை ரேஸில் சன் பிக்சர்ஸ் படங்கள்

இந்தக் கோடையில் வெளியாகும் அனைத்துப் பெரிய படங்களையும் கையகப்படுத்தியுள்ளது சன் பிக்ஸர்ஸ் நிறுவனம். விஜய் - தமன்னா நடித்து வெளியாகும் 'சுறா', சூர்யா - அனுஷ்கா நடித்துள்ள 'சிங்கம்' போன்ற படங்களை ஏற்கெனவே சன் வாங்கியுள்ளது தெரிந்திருக்கும். இப்போது ஜெயம் ரவி - தமன்னா நடிப்பில், ஜெயம் ராஜா இயக்கத்தில் உருவாகிவரும் 'தில்லாலங்கிடி' படத்தையும் வாங்கியுள்ளது சன் பிக்சர்ஸ். ஸ்டீட்டர் மோகன் தயாரித்துள்ள இந்தப் படம், தெலுங்கில் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற 'கிக்' படத்தின் ரீமேக் ஆகும். ஷாம் இந்தப் படத்தில் ஹீரோவுக்கு இணையான வேடத்தில் நடிக்கிறார். இதன் மூலம் இந்தக் கோடையில் வெளியாகும் அனைத்துப் பெரிய படங்களுமே சன் பிக்சர்ஸ் வெளியீடாகவே அமைந்துள்ளது. 'பையா' மற்றும் 'இரும்புக் கோட்டை முரட்டு சிங்கம்' மட்டுமே தயாரிப்பாளரின் நேரடி வெளியீடுகள்.
இதில் 'பையா'வை கலைஞர் டிவி (தயாநிதி அழகிரி) வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மாதவனுடன் ஜெனிலியா!

மாதவனுடன் வித்யா பாலன் சினேகம் பேசிய எயார்டெல் விளம்பரம் கடந்த ஆண்டில் ஹிட்டான விளம்பரங்களில் முக்கியமானது. அதேபோல் இந்த ஆண்டிலும் சினேகம் பேச ஆட்களைத் தேடிக் கொண்டிருக்கிறதாம் விளம்பரக் குழு. பலத்த தேர்வுக்குப் பின் மாதவனையே ஓகே செய்ய, இந்த முறை ஜெனிலியாவுக்கு அடித்திருக்கிறதாம் அந்த வாய்ப்பு. விரைவிலே இருவரும் சினேகம் பேசுவார்கள்.

# ரீமேக்காகிறது காக்க காக்க

காக்க காக்க'... சூர்யாவுக்குப் பெயர் வாங்கிக் கொடுத்த படம். கௌதம் இயக்கிய இந்தப் படத்தைத் தயாரித்தவர் தாணு. 'காக்க காக்க' படத்தை ஹிந்தியில் இயக்க வேண்டும் என்பது கௌதமின் விருப்பம். அதை ஹிந்தியில் தயாரிக்க வேண்டும் என்பது தாணுவின் ஆசை. இருவரும் தனித்தனிப் பாதையில் முயன்றதால் 'ரீமேக்' திட்டம் செயல்படுத்தப்படாமல் முடங்கிப் போனது.
சமீபமாக 'காக்க காக்க' ரீமேக் சத்தம் பொலிவூட்டில் கேட்கத் தொடங்கியுள்ளது. இறுதியாகக் கிடைத்த உறுதியான தகவல், ஜோன் ஆபிரஹாம் சூர்யா நடித்த அஷிஸ்டன் கமிஷனர் வேடத்தில் நடிக்கிறார். படத்தை இயக்குகிறவர் 'எவனோ ஒருவன்' பட இயக்குனர் நிஷிகாந்த் காமத். தயாரிப்பவர் விபுல் ஷா. தாணு, கௌதம் இருவருமே ஹிந்தி ரீமேக்கில் இல்லை.

# கவிதைப்புனல்

## சிதைக்காதீர் தமிழ் மொழியை!

தமிழுக்குப் பழுதொன்று மில்லை-அது
தரங்கெட்ட பேர்வாயில் நுழைவதே தொல்லை!
தமிழைத் ''தமிலென்றே'' சொல்வார்-சிலர்
தமிழோடு பிறமொழியைக் கலப்பாக்கிக் கொல்வார்

பெற்றவளைப் புறந்தள்ளி விட்டு-நாம்
போற்றுவதோ மாற்றாளை நெஞ்சாரத் தொட்டு?
உற்றநம் தமிழ்மொழியைப் பேசு-அதன்
ஒய்யாரம் உலகெங்கும் ஒளியாக வீசும்!

நடிகையர் நாவினில் நாடா-அட
நந்தமிழென்ன நாகரிகக் கேடா?
படிதாண்டாப் பத்தினி யாட்டம்-இவர்
பல்லுக்குள் சதிராடும் பிறமொழிக் கூட்டம்!

தமிழ்ச்சேவை தொ(ல்)லைக் காட்சி பாரு-அதில்
தமிழ்படும் பாட்டையும் தப்பாமல் தேரு!
அமிழ்தினும் இனிதான மொழியை-சிலர்
அலங்கோல மாக்குதல் ஆகாத பழியே!

''அதுபோல'' என்றுதான் சொல்வார்-அதன்
அர்த்தங்கள் முரணாக, அணாப்பியே மெல்வார்!
இதுபோல இளவட்டம் வாயில்-தமிழ்
இழுபட்டு, தறிகெட்டுக் கிடப்பாகும் நோயில்!

பிறநாட்டு வீரமா முனிவர்-நம்
பைந்தமிழில் காமுற்றுப் படைத்தாராம் பனுவல்
திறன்காட்டும் தமிழென்றும் சாகா-சிலர்
திரிபாகத் தாலாட்டும் பருப்பொன்றும் வேகா!

தேமதுரத் தமிழோசை இந்நாள்-புவி
திக்கெட்டும் பரவிடப் பாரதி சொன்னான்
நாமந்த நல்வாக்கைக் காக்க-பிற
நாடெங்கும் விதைக்கனும் நற்றமிழே பூக்க!

தாய்மொழியாம் தமிழை நீ ஓது!-அதன்
தகுதிக்கு நிகராகப் பிறதொன்று ஏது?
வாய்கிழிய மேடையிலே முழங்கி-தமிழ்
வழக்கைநீ சிதைக்காதே வளவளப்பாய் விழுங்கி!

-ஏறாவூர் அனலக்தர்-

## சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம்

### நீங்குமா?

கையேற்புக் கடவுச் சீட்டு
காரியம் முடிவு; அன்னார்
தைரியம்; பொதிகள் கட்டல்
தாயக நினைவு நெஞ்சில்
வைப்பிங்கு விருந்து உற்றார்
உறவினர்; ஏற்பு; ஆங்கு
மையில்களைக் கடந்த போதும்
மறவோமா? என்றா ரன்னார்!

மார்கழி பிறப்பு; கோயில்
மண்டபம் சிறப்பு; நாங்கள்
ஆர்வமாய் இரவில் கூடி
அயருவோம்; புலரிக் காலம்
கார்முகில் இராமர் மீது
களித்துளம் பாடல் பாடி
ஊர்வலம் வருவோம்; கம்பம்
உவப்புடன் தூக்கி என்றார்!

பொங்கல்நாள் காலை கோயில்
பொங்கல்தான்; பூசை; பொங்கும்
சங்கொலி; முரசு கொட்டல்
சப்பரப் பவனி; காட்சி
செங்கண்மால்! தோட்ட மக்கள்
சேவிப்பு; கனிவு; நல்ல
அங்கங்கள் ஆடல், பாடல்
அழகொளிர் விழாவில் என்றார்!

வாசியில் அமர்ந்து மாரி
வலமிங்கு வருகை; கைகள்
வீசியாம் பாடி யாடி
விழாவினில் மகிழ்வோம்; ஆமாம்
மாசியில் காமன் கூத்து
மன்மதன் இரதி யாட்டம்
நேசிப்பு மக்க ளெம்மை
நீங்குமா? நினைவு என்றார்!

கவிஞர் ஸி. எஸ்.காந்தி
(தொடரும்)

## நெஞ்சுக் குரைத்தல்

வெற்றியிலே இன்பம் விழுந்துபட்டால் துன்பமென
அற்பர்கள் வாழ்வார் அவனியிலே-முற்றும்
அவன் செயலே என்று அறிதம்பி; சோராய்
கவலை விடு சும்மா கலக்கு!

ஏதோ ஓர் சக்தி இது உந்தன் பாதையென
தீதகற்றி உன்னைத் துரத்திறது வேதனையில்
நேற்று உனைமீட்ட நீதியுனைக் கைவிட்டுத்
தோற்கவைக் காது உ காக்கும் சூழ்ந்து!

எல்லாம் சரியாய் நடக்கும்; உனது கடன்
எல்லாம் முடியுமட்டும் தர்மமுன்னைக்-கொல்லாது
தப்பவைக்கும்; தப்பில் தவறவைத்துக் கற்பித்து
வெற்றிதரும் தெய்வ விதி!

என்றாலும் மானுடனாய் வந்த இராமனையே
தின்றஜயம், சஞ்சலம், தீக்கவலை-உந்தனையா
விட்டுவிடும்? உன்னை விரட்டும்! அதை வீழ்த்த
சக்திவேல் தன்னைத் தழுவு!

-தோழர் சிந்தி-

## மௌன இராகங்கள்

ஆடி வரும் தென்றல் தாளம் இசைக்கையில்
ஆசை நெஞ்சம் உன்னைத் தேடிப் பறக்குது
கோல மிடும் வண்ண எண்ணக் குமிழிகள்
கோதையின் நெஞ்சினில் சித்திரம் தீட்டுது.

வாசமிகு ரோஜா வாவென் றழைக்கையில்
நேசமிகு முகம் நெஞ்சை இழுக்குது
தூயவெண் முல்லையின் சொக்கும் சிரிப்பினில்
நேயமிகு நகை நெஞ்சில் இனிக்குது!

ஓடும் அருவியின் பாடும் இசையினில்
கூடும் குரலிசை நெஞ்சை நிறைக்குது
பேசும் முழுநிலா வானில் உதிக்கையில்
தேடும் மனதினில் ஏக்கம் பிறக்குது!

மின்னும் உடுக்களின் வெட்டும் ஒளியினில்
பின்னும் குறும்புகள் பெண்ணை மயக்குது
எண்ண அலைகளின் சுற்றுச் சுழிப்பினில்
வண்ணக் கனவுகள் வாரி இறைக்குது!

-கௌரி கணேசன்-

## நித்திராதேவிக்கு ஒரு மடல்

நித்திரா தேவியே! நின்னையான் வேண்டுகிறேன்
உன்னை நினைத்துவிட்டால் உள்ளமே உருகுதடி
வெறுத்து மறக்கவென்றால் நெஞ்சு வெந்தணலாய் வேகுதடி
சயனத்து தேவியே நான் வெறும் பாவியே

படிக்கவென்று புத்தகத்தை பக்குவமாய் நானெடுக்க
அடிக்கடி நீ வந்து அன்பைக் காட்டிக் கெடுக்கின்றாய்
எத்தனைக் காலம்தான் இன்னும் எமக்குண்டு
ஏன் அதற்கிடையில் நமக்கிந்த வம்பு?

எத்தனை சோதனைகள் எண்ணியெண்ணி எடுத்துவிட்டேன்
அத்தனையும் ''பெயில் பண்ணி'' ஏங்கியான் உருகுகிறேன்
எட்டுமணி என்றதுமே ஓடோடி வருகிறாய்
எட்டியெனை முத்தமிட்டு படுக்கைக்கு அழைக்கின்றாய்!

தட்டுகிறாய், தடவுகிறாய், தலையைச்சுற்றி வீழ்த்துகிறாய்,
கட்டுகிறாய் எந்தன் கண்ணை காரியத்தைக் கெடுக்கின்றாய்,
எத்தனை பேரையெல்லாம் ஏமாற்றிக் கெடுத்துவிட்டாய்,
சிக்கனமான எம் காலத்தை சீரழிக்கவா பார்க்கின்றாய்?

நானுன்னை மறக்கவில்லை நீ என்னை நம்பு
உன்னாலே கெடுகிறது என் மனத் தெம்பு
பாத்திரமாய் நீயிரு பாவியான் வரும்வரையில்
நித்திரா தேவியே நீயெனக்கு வரம் கொடு,

ஆ. பௌ. நந்தி.

## சூழலுக்காய் ஓர் வீழ்ச்சி

விண்ணிற்குச் சென்றவர்கள் விட்டெறிந்த குப்பையெல்லாம்
மண்ணிற்கு படையெடுத்து மண்டலத்தை சுத்துதடா!
புண்ணுக்கு மருந்தடிக்க புகைபோக்கி இருந்தடிக்க
எண்ணத்து களங்கம்போல் இவ்வுலகில் குப்பையடா!

நகரம் என்றதும் நாறிடுங் கூவங்கள்
தகரம் எங்கணும் பங்கிடுஞ் சாதங்கள்
சிகரம் சிந்திடும் சிகரட்டின் சாரல்கள்
அகரம் என்பதற்குள் ஆர் உயிர் போகுமோ?

மைவிழியாள் ''சென்றடிக்க'' மாப்பிள்ளைமார் காடழிக்க
பைவழியே பாலனுப்ப பாதரசம் சேர்ந்திருக்க
கைநழுவிப் போகுதடா! காடுகளும் வேகுதடா?
தையலவன் வெளிரிடையாய் தாஜ்மகாலும் ஆனதடா!

இன்னொரு உலகம் உண்டோ சொல்
இருப்பதைக் கெடுப்பது முறையோ சொல்
விண்வெளி உனக்கு விருந்தோ சொல்
உன்னிடம் காத்திட உழைத்தே நில்

நிஷா

## தளர்ந்து போகுதம்மா!

புதுமைகள் எல்லாம் புரிகின்றார்-பல
புரளிகளும் சேர்ந்து செய்கின்றார்
புரட்சிகள் எனக் கூறிக்கொண்டே - போலிக்
கிளர்ச்சிகளும் உடன் செய்கின்றார்

ஆராய்ச்சி எனச் சொல்கிறார்- சிலர்
ஆயுத அறுவடையும் செய்கின்றார்
பேசிப் புகழ்ந்து மயக்குகின்றார்- பிறரை
ஏசியும் புலம்பி மிதிக்கின்றார்காணாள்கள்

சிலவற்றை அகற்றுகின்றார்- பல
காடுகளைத் தீயினால் அழிக்கின்றார்
கானோடை நீரோடை தோண்டுகின்றார்- விஷக்
காற்றுப் புகையும் ஊதுகின்றார்

இப்படி எப்படிச் செய்த போதும் -நுளம்பார்
இலேசாக ஊசிகுத்தி மறைகின்றாரே
ஜீவ அணுக்கள் தின்னும் டெங்குக்கிருமியால்- மனித
ஜீவ நிலை தளர்ந்து போகுதம்மா!



ஆரையூர்த் தாமரை

# இல்லற வாழ்க்கை இனிதாய் அமைய

## பக்தியும் பரிவும் பாசமும் பண்பும் முக்கியம்

வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் பக்தியே அடிப்படையாக இருக்க வேண்டும் என்று பெரியவர்கள் விரும்புவர். தம்பதிகள் திருமணத்தின் நிபந்தனைகளை மனப்பூர்வமாக நிறைவேற்றிய பின்னர் வாழ்வை இன்பத்தை நோக்கிப் பயணிப்பர்.

இரக்கம், ஒருவரையொருவர் மதித்து விதத்தில் நடந்து கொள்ளுதல், எல்லா நிலைகளிலும் பொறுமையைக் கடைபிடித்தல் என்பன தம்பதிகளிடம் எதிர்பார்க்கும் அடிப்படைகளாகும்.

இவற்றைத் தம்பதியினர் கடைபிடிக்கும் போது இல்லற வாழ்க்கையிலே பாசம், பரிவு, அனுதாபம் என்பவை ஏற்பட்டு குடும்ப வாழ்க்கை குதூகலமானதாக இருக்கும். தன்மையோடும் கண்ணியத்தோடும் ஒருவரை விட்டு மற்றவர் விலகி விடவேண்டும். எந்தச் சூழ்நிலையிலேனும் கணவன் மனைவியையோ மனைவி கணவனையோ புண்படுத்திவிடக் கூடாது.

**மனைவியின் கடமைகள்**

செய்து கொள்ளப்பட்ட வாழ்க்கை ஒப்பந்தத்தின் ஈடேற்றத்திற்கும் கணவனின் அமைதியைக் குலைப்பவளாக மனைவி இருந்திடக் கூடாது.

இந்த அடிப்படையில் மனைவியின் கடமைகள் பிறக்கின்றன. தனது கடமைகளை நிறைவேற்றுகின்ற விதத்தில் மனைவி நம்பிக்கையுடையவளாகவும் கண்ணியமும் நேர்மையும் நிறைந்தவளாகவும் இருந்திட வேண்டும். இன்னும் குறிப்பாக கூறுவதாக இருந்தால் கணவனுக்குச் சொந்தமானவைகளும் குடும்பச் சொத்துக்களும் கணவன் மனைவியிடத்தில் ஒப்படைத்திருக்கும் அமானிதப் பொருட்களாகும். கணவன் மனைவியிடத்தில் ஒப்படைக்கும் அனைத்தையும் அவள் பொறுப்போடு பேணிக்காத்திட வேண்டும். கணவன் மனைவியிடத்தில் ஒப்படைக்கும் சம்பாத்தியங்களைச் செலவிடுவதில் மனைவி சிக்கனத்தை கையாண்டிட வேண்டும். கணவனின் பொருட்களில் எதனையும் அவள் அவனுடைய அனுமதியின்றிக் கடனாகக்



நடத்தல், ஒருவர் மற்றவரின் சொல்லுக்கும் சிந்தனைக்கும் உயர்ந்தபட்ச கண்ணியத்தை வழங்குதல், ஒருவரிடம் காணும் குறையை மற்றவர் நிறைவு செய்கின்ற




திருமணம் என்கின்ற வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தேறிய முதற்கொண்டு தம்பதிகளின் வாழ்க்கை ஒரு முக்கியத் திருப்பத்தை அடைகின்றது. அவர்கள் புதுமையான பல கடைமைகளை நிறைவேற்ற வேண்டியர்வகளாக இருக்கின்றனர்.

மனைவியை அன்புடனும், அக்கறையுடனும், கண்ணியத்துடனும் நடத்திட வேண்டியது கணவனின் கடமையாகும். இது அவன் இறைவனுக்காக நிறைவேற்றிட வேண்டிய கடமை எனும் ஒழுக்கத்திலிருந்து ஆரம்பமாகின்றது.

குடும்ப வாழ்வின் சுமூக நிலை சீர்குலைந்து ஒருவரையொருவர் பிரிந்திட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அப்போதும் தாராளத்

வெற்றிக்கும் மனையறத்தின் மாட்சிமைக்கும் தன்னால் முடிந்தவைகள் அனைத்தையும் செய்திட வேண்டியது வாழ்க்கை ஒப்பந்தத்தில் தானும் ஒருபகுதி என்ற அளவில் மனைவியின் அடிப்படைக் கடமையாகும்.

கணவனின் வெற்றிதான் மனைவியின் வெற்றி என்கின்ற அடிப்படையில் கணவனின் வெற்றிக்குத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து உறுதுணையாக இருந்திட வேண்டியது மனைவியின் கடமையாகும். கணவனின் தேவைகளைக் கவனிப்பவளாகவும் அதன் மூலம் இருவரது நல்வாழ்வுக்கும் வகை செய்பவளாகவும் மனைவி இருந்திட வேண்டும். மாறாக

கொடுக்கவோ, அல்லது விற்றுவிடவோ கூடாது.

**மனைவி மீது கணவனுக்குள்ள பொறுப்புக்களை வரும் வாரம் காண்போம்.**

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
' A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

# இடர்கள் ஏற்படும் போது அதிகமாக பெண்களே பாதிக்கப்படுவது ஏன் ?

பதில்:

சமுதாயத்தில் பெண்களும் சிறுவர்களும் பலவீனமான அல்லது இலகுவில் பாதிக்கப்படக் கூடிய (VULNERABLE GROUP) சேதப்படக் கூடிய அணியினர் என்ற வகைப்படுத்தலுக்குள் உள்ளடக்கப் பட்டிருக்கிறார்கள். இதற்கு நடைமுறைரீதியான பல காரணங்கள் உண்டு.

இயற்கையாகவோ செயற்கையாகவோ இடர்கள் ஏற்படும்போது பெண்களும் சிறுவர்களும் அதற்குள் அகப்படுவதைப் பார்த்திருக்கிறோம்.

சுனாமி கடற்பேரலைத் தாக்கம் ஏற்பட்டபோது அந்த அழிவில் சிக்குண்டவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் சிறுவர்களும்தான். அதே நேரம் நாட்டில் கொஞ்சக் காலம் இடம்பெற்ற ஆயுத வன்முறைகளின் போதும் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாகிய பெண்களும் சிறுவர்களுமே அதிகளவு சேதங்களுக்கு உள்ளானர்கள்.

இடர்கள் இடம்பெறும் போது சடுதியாகத் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் வழிமுறைக்கு அவர்கள் தயார்படுத்தப்படாமல் போனதுதான் இத்தகைய பாதிப்புக்களை அவர்கள் எதிர்கொள்வதற்குக் காரணம்.

இதனைவிட அவர்களது உடலமைப்பு, உடல் நிலை என்பனவும் சடுதியாக ஆபத்துக்களிலிருந்து தற்காத்துக் கொள்ளுவதற்குத் தோதுப் பட்டு வராத ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

**கேள்வி:**

நான் ஒரு பெண். நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகிறேன். களப்பணிக்கும் செல்லவேண்டியுள்ளது. ஓய்வில்லாத வேலை. வீட்டுக்கு வரும்போது எப்படி முயற்சித்தாலும் மாலை 6 மணியாகிவிடுகிறது. வீட்டுக்கு வந்தால் உடல் சோர்வு வேறு. வீட்டு வேலைகளையும் செய்ய முடியாது. இதனால் அம்மாவுக்கும் ஒரே மனஸ்தாபம். இதே வேளை இந்த வேலையோடே நான் எனது முழுக் கவனத்தையும் செலுத்துவதால் நண்பர்களினதும், உறவினர்களினதும் நட்புகூட இல்லாமல் போய் விடுகின்றது. இவை எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு நான் எவ்வாறு எனது செயற்பாடுகளை திட்டமிட வேண்டும்?

பதில்:


''அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு'' என்று சொல்வார்கள். சமூக சேவையோ, தியானமோ, பிரார்த்தனையோ, உணவோ, களியாட்டமோ, விளையாட்டோ, வேலையோ எல்லாம் ஒரு அளவோடுதான் இருக்க வேண்டும். அன்பு செலுத்துவது கூட எல்லை மீறிப் போய் விடக் கூடாது.

. சாதாரணமாகவே ஒரு நாளில் ஒருவரின் தீர்மானிக்கப்பட்ட வேலை நேரம் எட்டு மணித்தியாலங்கள். இதனை உங்களை பணிக்கமர்த்தியுள்ள நிறுவனமும் நீங்களும் அறிந்திருக்க வேண்டும். நிறுவனம் தொழிலாளர்களின் உரிமைகளை மீறும் வகையில் அதிக நேரம் உங்களை வேலை வாங்கினால் நீங்கள் அவர்களுக்கு நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டும்.

நேரகாலத்தோடு நீங்கள் உங்கள் களப்பணிகளை முடித்துவிட்டு வீட்டுக்கு வருவீர்களாயின் வீட்டை பராமரிக்கவும் உறவினர் நண்பர்களை சந்திக்கவும் நேரமிருக்கும்.

உங்களது நாளாந்தக் கடமைகளை நிகழ்ச்சி நிரலாக தயாரித்து அந்த நேர ஒழுங்கில் வேலைகளை செய்து பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.


புத்திசாலி நரி
இளஞ்சுடர்
1
புத்தாக்கம் : கே.கான்
ஒருமுறை சில போக்கிரிகள் மகிழ்ச்சிகொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.
நடுநிசி நெருங்கும் போது-
எனக்கு இன்னும் கொஞ்சம் இறைச்சி கிடைக்குமா?
விரும்பினால் குடிப்பதற்குத் தேன் இருக்கிறது இறைச்சி கொஞ்சமும் இல்லை.
இறைச்சி முடிந்து விட்டதா? எனக்கு இறைச்சி தான் வேண்டும்.
நான் மயானத்துக்கு அருகிலுள்ள புதர்ப்பகுதிக்குச் சென்று இரண்டொரு நரிகளைக் கொன்று இறைச்சியை எடுத்து வருவேன்.
பெரும் தடியொன்றுடன் அந்தக் கபடன் சென்றான்.
2
அவன் காட்டை அடைந்து
நான் மூச்சைப் பிடித்தபடி படுக்கிறேன். செத்ததாக நினைத்து சிங்கமும் புலியும் நெருங்காது. ஆனால், நரிகள் ஓடி வரும்.
நரி கிட்டே வந்ததும் தடியால் அதற்கு அடிக்கிறேன்.
சிறிது நேரத்தில் நரிக்கூட்டமொன்று அங்கே வந்தது.
பார், ஒரு பிணம்! வா, போவோம்!
நில், முதலில் பரீட்சித்துப் பார்ப்போம்.
இது உயிருள்ள மனிதனுடைய நெடி. நானும் அப்படியேநினைத் தேன். இவன் பாசாங்கு செய்கிறான்.
3
அது தடியைக் கண்டது.
சில சமயம் எங்களில் யாரை யாவது கொல்வதற்காக இருக்கலாம்.
எல்லோரும் இங்கே இருங்கள். இந்தப் போக்கிரிக்கு ஒரு பாடம் கற்பிக்கிறேன்.
அது மெல்ல அவனருகில் சென்றது.
தடியைப் பல்லால் கடித்தது.
அதை மெல்ல இழுத்தது.
பெரிய எலியாக இருக்கலாம். இறுக்கிப் பிடித்துக் கொள்கிறேன்.
4
மறுகணம் நரி திடீரென இழுத்து விட்டுவிட்டது.
போக்கிரி ஆச்சரியப்பட்டான். பதறியடித்தவனாக எழுந்து தடியை நரியின் பக்கமாக எறிந்தான்.
ஆனால், குறி தவறிவிட்டது.
இவ்வளவு பெருமையடித்துவிட்டு நண்பர்களுக்கு முகம் கொடுப்பது எப்படி?
மெல்ல வீட்டுக்கு நழுவி, நித்திரை கொள்வதுதான் சரி.
(முற்றிற்று)

# இரு விஞ்ஞானிகளின் செவ்வாய்க் கிரக அனுபவங்கள்


ஒவ்வொரு நாடும் செவ்வாய்க் கிரகத்துக்குச் செல்லப் போட்டிபோட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலத்தில், நமது நாட்டு விஞ்ஞானிகளும் சளைத்தவர்கள் அல்லர் என்பதைக் காட்டுவதற்காக இரண்டு பேர் இப்பணிக்காக ஆயத்தப்படுத்தப்பட்டனர்.

முஸம்மில், மூஸீன் என்ற விஞ்ஞானிகள் இருவர் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குக் கடுமையான பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. பிரயாண திகதியும் குறிப்பிடப்பட்டது.

உரிய நேரம் வந்தது. ரூபவாஹினி செனல்கள் நேரடி ஒளிபரப்பில் பொறி பறக்க புகழ்பாடிக்கொண்டிருந்தன. ஜனாதிபதி, விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் முதலான பல பிரமுகர்களின் பாராட்டுகளுக்கு மத்தியில், ரொக்கட் தீச் சுவாலைகளைக் கக்கியபடி பேரோசையுடன் மேலெழுந்து விண்ணைத் துளைத்துக்கொண்டு விரிந்த வானவெளியிலே தனது கன்னிப் பயணத்தைத் தொடங்கியது.

நாட்கள் பல கழிந்து, ஒரு வாரத்தையும் தாண்டிய பிறகு தான் விண்கலம் செவ்வாய்த் தரையில் பத்திரமாக இறங்கியது. விண்வெளி உடைகள் தரித்திருந்த இரு விஞ்ஞானிகளும் விண்கலத்தில் இருந்தவாறே செவ்வாய்த் தரையை நோட்டமிட்டனர். அது ஓரளவு பசுமையாக இருந்தது. பிற அபாயங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. செவ்வாய்த் தரையில் இறங்கிய முதல் புலோகவாசிகள் என்ற பெருமையை முதலில் தட்டிக்கொண்டார் முஸம்மில். அதன் பிறகு மூஸீனும் இறங்கினார். வெற்றிக் களிப்பில் இருவரும் ஒருவரையொருவர் கட்டித்தழுவிக் கொண்டனர்.

செவ்வாயின் தரை ஓரளவு பசுமையான தாவரங்களால் நிரம்பியிருந்தது. மழை பெய்துவிட்டு நின்றிருப்பது போல் காட்சியளித்தது நிலம். சிறிது தூரத்தில் நீர் நிரம்பிய சிறு சிறு குளங்கள் தென்பட்டன. செவ்வாய்க் கிரகத்தின் மண் பூமியில் இருந்த மண் போன்று காணப்பட்டாலும், வித்தியாசமான பல்வேறு நிறங்களில் அமைந்திருந்தன. சில இடங்களில் தங்கப் பாறைகள் சர்வ சாதாரணமாகக் காணப்பட்டன.



சூரிய ஒளியில் அவை மின்னிக் கொண்டிருந்தன. தூரத்தில் அழகிய வடிவத்திலான மலைத் தொடர்கள் கடும் கபில நிறத்தில் தோற்றமளித்தன.

இங்கே பிராணிகளினதோ மனிதர்களினதோ நடமாட்டத்தை நிரூபிக்கக்கூடிய தடயங்கள் எதுவும் காணப்படவில்லை. ஆனால், ஏதேனும் உயிரினங்கள் வாழக்கூடும் என்ற நம்பிக்கை இவர்கள் இருவருக்கும் இருக்கத்தான் செய்தது.

**கனேதன்னை காதர்**

இருவரும் அங்குமிங்குமாகச் சென்று சில ஆய்வுகளில் ஈடுபட்டனர். பல மைல் தூரம் நடந்து சென்றனர். புதுப்புது வகையைச் சேர்ந்த மரங்களையும் விந்தையான கனிவர்க்கங்களையும் அவர்கள் கண்டனர். சில பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட நிலங்கள் போன்று காணப்பட்டன. ஆனால், அவை பூமியில் நடைபெறும் பயிர்ச்செய்கையை ஒத்ததாக இருக்க வில்லை.

நீண்ட தூரம் நடந்ததாலும், பல்வேறு பரிசோதனைகளை மேற்கொண்டதாலும் சூரியக் கதிர்களின் வெம்மையாலும் அவர்கள் விரைவிலேயே களைத்துப்போயினர். இப்போது அவர்கள் விண்கலத்துக்குச் சென்று ஓய்வு பெற நாடினர். எனினும் தாகம் அவர்களை வாட்டி வதைக்கலாயிற்று. அருகிலிருந்த குளத்துக்குச் சென்ற இருவரும் தண்ணீரை அவதானித்தனர். ஹைட்ரஜன் இரு பங்குகளும் ஒட்சிசன் ஒரு பங்கும் கொண்டதாகவே இந்த நீர் காணப்பட்டது. இதனால், எந்தப் பயமும் சந்தேகமும் இன்றி, தண்ணீரை அள்ளியள்ளிக் குடித்தனர். சோர்வு அவர்களை விட்டுப் பறந்தோடியது. எனினும், சிறிது நேரத்தில் மயக்கமுற்று விழுந்தனர். மயக்கம் நீங்கி எழுந்தபோது, மூஸீனும் முஸம்மிலும் மூன்றடி உயரமான குள்ளர்களாக மாறிவிட்டனர். அவர்களுக்கு ஒரே அதிர்ச்சி. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

( தொடர்ச்சி அடுத்த வாரம்)





# மம்மிகள் எவ்வாறு தயார் செய்யப்படுகின்றன?

மம்மி என்றால் 'அம்மா என்று நினைத்துவிட வேண்டாம். பல நூறு வருடங்களாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் மனித உடல்களைத் தான் இது குறிக்கும். இவ்வாறான பெருந்தொகையான உடல்களை எகிப்து நாட்டில் காணலாம். இந்த உடல்களை வைத்து பிரமிட்களைக் கட்டுவது பண்டைய எகிப்து நாட்டு மன்னர்களது வழக்கமாக இருந்து வந்தது. இது பற்றிய சில உண்மைகளை அறிந்துகொள்வோமா?

நைல் நதிக் கரையிலே எகிப்திய நாகரிகம் தோன்றியது என்பதை நீங்கள் அறிவீர்கள். அக்கால எகிப்தியர் இறைவனையும், இறந்த பிறகு மற்றொரு வாழ்க்கை உண்டு என்பதையும் நம்பினார்கள். இறந்த ஒருவரின் உயிர் அவருடைய உடலை மீண்டும் கண்டுபிடித்து அதனுள்ளே வாழ்ந்து வரும் என நம்பினார்கள். இதனால் தான் அவர்கள் இறந்த உடல்களைப் பக்குவப்படுத்திப் பாதுகாத்து வந்தனர். எகிப்தியர்கள் மட்டுமன்றி, தென் அமெரிக்க இன்கா வம்சத்தவர்களும் சைபீரியாவின் பாஸிரிக் இனத்தவர்களும் இவ்வாறு இறந்த உடல்களைப் பாதுகாத்து வந்தனர்.

மதகுருமார்கள் தான் இறந்த உடல்களைப் பதப்படுத்துவர். மம்மியாக மாற்றப்பட வேண்டிய சடலம் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு



மேசையின் மீது வைக்கப்படும். பின்னர் தலைமை மதகுரு நரித்தலை போன்ற ஒரு முகமூடியை அணிந்துகொள்வார். மற்றொரு மதகுரு வேகமாக மந்திரங் களைச் சொல்வார். தலைமை மதகுரு இறந்த உடலை நன்கு கழுவுவார். அதன் பின்னர் ஒரு கூர்மையான கத்தியால் சடலத்தின் இடது புறத்தில் நீளமான ஒரு வெட்டு வெட்டி, அதனூடாகக் கையைப் போட்டு நுரையீரல், கல்லீரல், குடல் முதலியவற்றை வெளியே எடுத்து அவற்றைக் கடவுளின் வடிவத்தில் அமைக்கப்பட்ட ஜாடியில் போட்டுச் சேமிப்பார்.

இதற்கு அடுத்ததாக, மூக்கினூடாக ஒரு கொக்கியை உள்ளே செலுத்தி சிறிது சிறிதாக மனித மூளையை வெளியே எடுப்பார். அவை வீசி எறியப்படும். இந்த வேலைகள் முடிந்த பிறகு உடலிலுள்ள நீரை வெளியே எடுப்பதற்காக நாட்ரான் எனப்படும் ஓர் இயற்கை உப்பைத் தூவி, உடலை 40 நாட்கள் காயவிடுவர்.

உடல் காய்ந்த பிறகு இறந்த உடலின் உள்ளே பஞ்சு, மணல், மரத்தூள் போன்றவற்றை வைத்து அடைத்து உடலுக்கு ஒரு வடிவத்தைக் கொடுப்பர். மூக்கின் உள்ளே தேன் மெழுகும் கண்களுக்கு உள்ளே லினனும் வைத்து அடைக்கப்படும். பின்னர் தோல் கழன்றுவிடாமலிருக்க தைலங்களும் வாசனைத் திரவியங்களும் பூசப்படும்.

இனி உடலை லினன் துணியால் மூட வேண்டும். முதலில் லினன் துண்டுகளை உடலின் விரல்களில் மதகுரு சுற்றுவார். பின்னர் கைகள், கால்கள் என்று முழு உடலும் லினன் துணியால் சுற்றப்படும். துணிகள் இடையிடையே பிரிந்துவிடாமலிருக்க பிசின்கள் தடவப்படும். முழு உடம்பிலும் துணி சுற்றி முடிக்கக் குறைந்தது 15 நாட்கள் செல்லும். பின்னர் மம்மியாக்கப்பட்ட உடல் அதற்குரிய பெட்டியில் வைக்கப்படும்.

இந்த வேலைகள் எல்லாம் முடிந்த பிறகு அதைக் கல்லறைக்கு எடுத்துச் செல்வர். மம்மிக்குத் தேவையான உணவுப் பொருட்கள், ஆடை ஆபரணங்கள் விலையுயர்ந்த அணிகலன்கள் போன்றனவும் வைக்கப்பட்டு கல்லறை அடைக்கப்படும்.




என்.இராமசாமி,
வட்டுக்கோட்டை.

**கேள்வி:** கட்சி மாறும் சந்தர்ப்பவாத பச்சோந்தித்தனத்துக்கு ஐ.தே.கட்சி கடிவாளம் இட்டதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** அது நல்லது தான். இதனால், கட்சி குட்டிச்சுவராவதோடு, அவர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பும் வாக்காளர்களும் அல்லவா ஏமாந்து போகிறார்கள். இதன் மூலம் நாடாளுமன்ற ஜனநாயகமே கேலிக் கூத்தாகிவிடும். ஆளும் கட்சியினரைச் சர்வாதிகாரப் போக்கிற்கு இட்டுச் செல்லத் தூண்டுவதும் இந்தக் கோமாளித்தனம் தான்.




ம. பிரியதர்சினி,
பதுளை.

**கேள்வி:** சமீப காலத்தில் இலங்கையில் எத்தனை ஊடகவியலாளர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள்?

**பதில்:** கடந்த மூன்று வருடங்களில் மட்டும் சுமார் இருபது பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாகச் சமீபத்தில் பிரஸல்ஸ் நகரில் நடைபெற்ற நாலாவது அகிலத்தின் 16ஆவது உலக மாநாட்டில் உரையாற்றிய நவ சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வல்லிபுரம் திருநாவுக்கரசு குறிப்பிட்டுள்ளார். இதனைவிட, உயிருக்குப் பயந்து வெளிநாடுகளுக்குத் தப்பியோடிய ஊடகவியலாளர்கள் பலர். அடித்துத் துன்புறுத்தப்பட்டவர்கள் இன்னும் பலர். கடத்திச் சென்று விடுதலையானவர்கள் மிகச் சிலர். கடுமையாக எச்சரிக்கப்பட்டவர்கள் பலர்.

இரா. சிவகுமாரன்,
கண்டி.

**கேள்வி:** தேர்தலில் போட்டியிடும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களிடையே, அதிலும் குறிப்பாக ஐ.ம.சு. கூட்டமைப்புக்குள்ளேயே இவ்வளவு பெருந்தொகையான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறக் காரணம் என்ன பித்தரே?

**பதில்:** மக்களுக்குச் "சேவை" செய்வதற்காக அன்றி வேறெதற்கு?

எம்.எல்.பௌஸியா,
மாவனல்லை.

**கேள்வி:** தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களையும் கிரிக்கெட்டையும் ஒப்பிடலாமா?

**பதில்:** ஆமாம். இரண்டுமே மக்கள் மீது திணிக்கப்பட்ட போதைகள் தான். தமிழ் தொலைக்காட்சித் தொடர்கள் பெண்களுக்குப் பெரும் போதையூட்டிக் கொண்டிருக்கன்றன. பண முதலைகளின் அகோரப் பசிக்குத் தீனி போட இந்த நாடகங்கள் உதவுகின்றன. கிரிக்கெட் வெறி முழு நாட்டையுமே போதைகொள்ள வைத்திருக்கிறது. பார்ப்போரது செயல் திறனை உறிஞ்சி, அவர்களைச் சோம்பேறிகளாக்கி, நோயாளிகளாக்கி விடுவதில் இரண்டுமே ஒற்றுமைப்படுகின்றன.

இ. தனபாலசிங்கம்,
விருதோடை.

**கேள்வி:** கம்பர் இப்போது உயிர்பெற்று எழுந்தால் தனது இராமாயணத்தைப் பற்றி என்ன நினைத்துக்கொள்வார்?

**பதில்:** தன்னுடைய கவிதைகளில் தான் கனவிலும் கருதியிராத இவ்வளவு நயம் இருக்கின்றதா என்பதைக் கண்டு மூர்ச்சையாகி விழுந்திருப்பார்.

எஸ். கனகரத்தினம்,
கேகாலை.

**கேள்வி:** அடைந்த வெற்றியைத் தக்கவைத்துக் கொள்வதெப்படி பித்தரே?

**பதில்:** ஒரு காலத்தில் பயன்பட்ட உத்தி இன்னொரு காலத்துக்குப் பொருந்தாது. காலத்துக்கு ஏற்ப நமது சிந்தனைகளை மாற்றினால் தான் வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். தொழில்துறை, கலைத்துறை, அரசியல் துறை, இலக்கியத் துறை முதலான எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், காலத்திற்கு ஏற்ப புதிய சிந்தனைகளைப் புகுத்தியவர்களே வெற்றியாளர்களாக மிளிர்கிறார்கள் என்பதற்கு உலக வரலாறே சான்று பகர்கின்றது.

மா.புவனேஸ்வரன்,
சாவகச்சேரி.

**கேள்வி:** பிரார்த்தனையின்போது மனம் ஒருமுகப்படுவதற்கு ஒரு வழி கூறுங்களேன் பித்தரே.

**பதில்:** பிரார்த்தனை நேரத்தில் எல்லாம் வல்ல இறைவனின் சன்னிதியில் இருப்பதாக நினைத்துக் கொண்டால் வேறு எண்ணங்கள் எழமாட்டா என்று சுவாமி புருஷோத்தமானந்தா கூறுகிறார். தொழுகையில் மனம் ஈடுபாடுகொள்ளவில்லை என்று மனம் வருந்திய ஒருவருக்கு, நீங்கள் இறைவனைப் பார்க்காவிட்டாலும் இறைவன் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற உணர்வோடு தொழும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பகவத் கீதையில் கண்ணன் கூறுகின்றார்– மனம் அடக்குவதற்கு அரியது தான். நிலையற்றது தான். ஆனால், இது முடியாத காரியம் அல்ல. பயிற்சியாலும் மனோதிடத்தாலும் இது முடியும்." (6:35)

பொ. தங்கராசா,
பொகவந்தலாவை.

**கேள்வி:** வெற்றிலையை இந்நாட்டின் தேசிய கொடி என்று பிரகடனப்படுத்தினால் என்ன?

**பதில்:** அது 'கையை" வெட்டிவிட்டதே. இன்னும் எதையெதையெல்லாம் வெட்டவிருக்கிறதோ யாருக்குத் தெரியும்?

எம்.எஸ்.எம்.கபூர்,
ஓட்டமாவடி.

**கேள்வி:** முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக நாடாளுமன்றம் சென்று, அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்ட பலர் இம்முறை தேர்தலில் கோட்டை விட்டுவிட்டார்களே, இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** ஏற்றிவிட்ட ஏணியை எட்டியுதைத்துவிட்ட அவர்களை முஸ்லிம் சமூகம் இனியும் நம்பத் தயாராக இல்லை என்பதை எடுத்துக்காட்ட, அந்தச் சமூகம் தீர்க்க சிந்தனையோடு செயலாற்றி அவர்களைச் செல்லாக் காசாக்கிவிட்டது.




## சொற்சிலம்பம் போட்டி இல. 414

சொற்சிலம்பம் 414 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திணம் 2010 ஆம் ஆண்டு மே 01 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 02 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 412 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடை களைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.412

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 தி | 3 கா | 4 ர | ம் | ■ | 5 ப | 6 கு |
| 7 க | ர | ண | ம் | ■ | 8 ச | ண் | டை |
| 9 வ | ளி | ■ | 10 மி | 11 தி | ய | டி | ■ |
| ல் | ■ | 12 ப | ய | ன் | ■ | 13 த | 14 கா |
| ■ | 15 க | ட | ம் | ■ | 16 சி | ன் | ன |
| 17 அ | ர | ம் | ■ | 18 க | ன | ■ | ம் |
| 19 தி | ண் | ■ | 20 இ | ரு | ம் | 21 பு | ■ |
| 22 க | டி | கா | ர | ம் | ■ | 23 வி | டை |

## சொற்சிலம்பம் போட்டி இல. 412

### பரிசு பெறுவோர்

1. வே.கார்த்திகேய,
விபுலாநந்தர் வீதி,
வாழைச்சேனை.
2. ரவிராஜ் ராசரத்தினம்
36, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.
3. சந்திராணி தங்கத்துரை
வட்டவிதானை வீதி,
பெரிய நீலாவணை 01ஏ.
கல்முனை.

## சொற்சிலம்பம் போட்டி இல.414

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| | ■ | 10 | | ■ | 11 | | |
| 12 | 13 | | ■ | 14 | | ■ | |
| 15 | | ■ | 16 | | ■ | 17 | |
| ■ | 18 | 19 | | ■ | 20 | | ■ |
| 21 | | | ■ | 22 | | | 23 |
| 24 | | | | | ■ | 25 | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 414

### இடமிருந்து வலம்

1. இந்துத் திருமணத்தில் முக்கியத்துவம் பெறும் ஒரு நட்சத்திரம்
2. திரவத்துக்கும் திண்மத்துக்கும் இடைப்பட்ட நிலை/ குழம்பு
7. போதை தருவது
8. வரும்படி
10. கூட்டு
11. இளைய சகோதரன்
12. அழிப்பு
14. திறப்பு
15. மூன்று/ விளக்கில் எரிவது
16. பல வீடுகளில் இதுதான் காலை உணவு
17. இது போனால் சொல்லுப் போகும்
18. சேறு
20. உயிர்ப்பின் ஆரம்பநிலை
21. இசைப் பாடல்
22. ஒரு திசை
24. விநாயகனுக்கு விசேடமானது
25. சிறையில் இருப்பவன்

### மேலிருந்து கீழ்

1. அம்பிகாபதி மனம் கவர்ந்தவள்
2. பருவ காலம்
3. தன் வாயால் கெடும்/ நுணல்
4. செல்வம்
5. பருகும் திரவம்
6. வணங்குதல்
9. கோவலனை மயக்கியவள்
10. மறைவில் அடிப்பது
13. காட்சிக்கு வருவது
14. கை அளவீடு
16. அரைவாசி
17. சோற்று உருண்டு/ சோற்றில் சிறு திணிசு
19. உலோக இழை
20. தாண்டு
21. செவி
22. விதம்/ ரகம்
23. பாய்

## சொற்சிலம்பம் போட்டி இல. 412

### பாராட்டுப் பெறுவோர்

01. து.திலக்
வவுனியா.
02. அ.குகமூர்த்தி
கொழும்பு- 13.
03. திருமதி.ரி.செல்வதுரை
திருமலை.
04. க.சூரியகுமாரன்
வவுனியா.
05. ஜெ.அபிஜித்தன்
கொழும்பு- 06.
06. ம.கமலநாதன்
மட்டக்களப்பு.
07. எஸ்.ரஞ்சினி
மட்டக்களப்பு.
08. எம்.என்.எம்.அஸ்றி
உறிங்குல.
09. சி.உமாபசிதிசிவம்
வத்தளை.
10. எஸ்.சின்னராசா
பெரி போரதீவு.
11. திருமதி.பி.எஸ்.ராணி
வவுனியா.
12. எஸ்.ரவிசந்திரன்
கல்லாறு.
13. கு.உஷா
யாழ்ப்பாணம்.
14. இ.ஜீவராஜா
வவுனியா

# தண்ணீரில் மூழ்கிய....

(22ஆம் பக்க தொடர்ச்சி)

சொல்லப் போனால் ஆறுதல், பாதுகாப்பு என இந்த இரண்டையும் மையப்படுத்தியே அவர்கள் சேர்ந்திருந்தனர். தேவிபுரத்தில் இருந்து மாறிமாறி இடம்பெயர்ந்து, கடைசியாக நீருஜா காயப்பட்ட பின்னர் அவளை அவன் தூக்கியதும், அணைத்ததும் தாய்மை உணர்வுடன் தான்.

''இஞ்சே மதன் இண்டைக்கு சனம் நந்திக்கடலாலை அங்காலை போகப் போகுது. நாங்கள்தான்மிஞ்சி இருக்கிறம். ஏதாவது ஒரு வழி பார்த்து வெளிக்கிடுவம் மதன்'' அழுதபடியே மதனிடம் கேட்டாள் நீருஜா.

''ஓம் நீருஜா வட்டுவாகல் பக்கத்தாலை கூடுதலா ஷெல்லும், ரவுன்ஸும் வருகுதாம். சனம் நந்திக்கடலை பிடிச்சுப் போகுது. தண்ணிக்குள்ளாலை இந்த காயத்தோட எப்பிடி உங்களைக் கொண்டு போறதெண்டுதான் யோசிக்கிறன்'' என்றான் மதன்.

''நான் உங்கட தோளைப்பிடிச்சுக்கொண்டு மெதுவா நடக்கிறன் மதன்- கொஞ்சத்தூரம் தண்ணி ஆழம் இல்லை. ஆனால் இடையில ஆழமாம். பிறகு ஆழம் இல்லை. இடைத்துண்டை எப்படி கடக்கிறது மதன்'' இளைத்தபடியே கேட்டாள் நீருஜா.

மதன் யோசித்தான் அவனுக்கு ஒரு முடிவும் புலப்படவே இல்லை. ''நீருஜா பங்கருக்குள்ளயே இருங்க. நான் ஒருக்கா வேகமா கடற்கரை பக்கமா போய் என்ன நடக்கிறது எண்டு பார்த்திட்டு வாறன்'' என்று சொன்னான் மதன். அவன் முகத்தை தாய்மை உணர்வோடு பார்த்த நீருஜா அவனின் கைகளை பிடித்த படியே, ''பார்த்து வேகமா போய்ட்டு வாங்க மதன். கடவுள் ஏதோ ஒரு வழிக்காட்டுவான். வேகமா வந்திருங்க. ஷெல் விழப்போகுதெண்டா கீழே விழுந்து, படுத்திருங்க'' கண்ணீரோடு சொன்னாள் நீருஜா. அவளின் தலையை மெதுவாக இறக்கி தரையோடு வைத்த மதன் மெதுவாக பங்கரை விட்டு வெளியே போனான். சற்று தூரத்திலே வீழ்ந்த எறிகணை ஒன்றின் சிதறல் 'விர்...' என கூவியபடி மேலாலே போகிறது. ''படுங்கோ.. படுங்கோ..'' அவசரமாகக் கத்தினாள் நீருஜா.

''அது மேலாலதான் போகுது'' என்றான் மதன். நீண்டகாலம் அந்தத் தாக்கங்களுக்குள் நின்றவன் தானே! கொஞ்சமாவது அனுபவம் இருக்கும் தானே!

மதனும், நீருஜாவும் இருந்த இடமிருந்து இருநூறு மீற்றர் தூரத்தில்தான் நந்திக் கடற்கரையோரம். கடற்கரை நோக்கி வேகமாகப் போகிறான் மதன். அங்கே போனபோதுதான் அவனுக்கு விடயம் தெரிந்தது. மக்கள் பெருந்தொகையானோர் பலவித பாதைகளினூடே நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். காயப்பட்டவர்களின் கதறல் ஒலிகளும், முனங்கல்களும் அதிகமாகவே கேட்டன. இரத்தம் சொட்டச் சொட்ட படாதபாடுபட்ட அவர்கள் உறவினர்களோடு இழுபட்டு போவதை பார்த்தால் கடவுளுக்கே கண்ணீர் வந்து விடும். பலர் நந்திக் கடற்கரையினூடாக, இரட்டை வாய்க்கால் பக்கமாக நடையாக நகர்கிறார்கள். இன்னும் சிலர் தண்ணீரில் இறங்க எந்த வித வசதிகளும் இல்லாமல் நந்திக் கடற்கரை ஓரமாக வட்டுவாகல் பகுதிநோக்கி நகர்கிறார்கள். பலரோ இந்த இரண்டு வழிகளும் சரிவராது என்று எண்ணி நந்திக்கடலினூடாக செல்கிறார்கள். வேறு சிலர் காற்று நிரப்பப்பட்ட உழவு இயந்திரத்தின் நடு ரியூப்பை மிதவையாகப் பயன்படுத்தி செல்கிறார்கள். அந்த காற்று நிரப்பப்பட்ட ரியூப்பின் நடுவாக கயிறு இழுத்து கட்டப்பட்டு இருக்கிறது. நான்கு பேர்வரை ஏறி இருக்கலாம். இருவரோ, ஒருவரோ மெதுவாக தள்ளிக் கொண்டு போக வேண்டியதுதான். இருவராகச் செல்கின்றவர்கள் வேறு சில ரியூப் வகைகளை பயன்படுத்தி போகிறார்கள். மோசமாகக் காயப்பட்ட பலரும் இந்த வழிகளூடாகத்தான் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்களின் காயங்களில் நந்திக் கடலின் நீர் பட்டுவிட 'ஆ.... அம்மா..' என்று கத்துகிறார்கள். மருந்து கட்டப்படாத காயத்திலிருந்து கடல் நீரிலும் குருதி கொட்டுகிறது. ஒரு அம்மா, அவரின் கணவனோடு நிற்கிறார். இருவருமாக காயப்பட்ட தம் எட்டு வயது மகனைத் தூக்கி காற்று நிரப்பப்பட்ட அந்த லொறி ரியூப்பில் ஏற்றினார்கள். அந்தப் பையனுக்கு நெற்றியிலே பலத்த காயம். பையன் ரியூப்பிலே ஏற்றப்பட்ட பின்பு ரியூப் தவறுதலாக சரிந்துவிட்டது. பையன் தண்ணீரில் மூழ்கவே அப்பா அத்தரப்பட்டு அவனை தூக்கினார். அந்த காயத்துடன் தண்ணீருள் மூழ்கினால் மரண வேதனை அல்லவா? கதறியது அந்த எட்டு வயது பிஞ்சு.

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த மதன் இந்த வழியூடே தானும் போவது என்றே தீர்மானித்தான். ஆனால் வசதி இல்லை.. ஏதோ அந்தநேரம் பார்த்து வள்ளுவர்புரம் அம்மன் கோயிலடியை சேர்ந்த சீனி சுப்பிரமணியம் ஐயா குடும்பம் அங்கு நின்றது. ''ஏய் மதன் இஞ்சையா நிக்கிறாய். வாவன் போவம் ரெண்டு ரியூப் இருக்கு. சாப்பிட்டியாடா...'' கேட்டபடியே கிட்ட வந்தார் சீனி சுப்பிரமணியம். மதனுக்கு கடவுளே வந்து காட்சி கொடுத்த திருப்தி. சீனி சுப்பிரமணியத்துக்கு விடயத்தை சொன்னான் மதன். அவரின் மனைவி செய்பிங் பையில் கிடந்த மூன்று அவித்த சிறுமீன்களை மதனிடம் கொடுத்தார். ''நான் உடனே போய் நீருஜாவையும் கூட்டிக்கொண்டு வாறன் சீனி ஐயா'' சொல்லியபடியே வேகமாக ஓடினான் மதன்.

மதனுக்காய் காத்திருந்தாள் நீருஜா. ''இந்தாங்கோ இந்த மீனைச் சாப்பிடுங்கோ. எனக்கு தெரிஞ்சவர் ஒருவர் நந்திக்கடற்கரை ஓரமா இருக்கிறார். ஒரு ரியூப்பும் தாறேன் என்று சொன்னவர். நிறைய சனம் போய்க்கொண்டு இருக்குது. நீங்கள் ரியூப்பில ஏறி இருங்கோ நான் தள்ளிக்கொண்டுவாறன்'' என்று அவசரமாக சொன்னான் மதன். அந்த மூன்று அவித்த மீன்களையும் நீருஜாவிடம் கொடுத்தான் மதன். ''இந்தாங்கோ நீங்க சாப்பிடுங்கோ'' ஒரு மீனை மதனுக்கு நீட்டினாள் நீருஜா. ''நான் ரெண்டு சாப்பிட்டன் நீங்கள் சாப்பிடுங்கோ'' சென்னான் மதன். எத்தனை தாய்மை மனசு. உண்மையில் அவன் சாப்பிட்டிருக்கவில்லை. அவள் காயப்பட்டவள்தானே! அவளின் நிலை புரிந்து அவளுக்கே மீனை கொடுத்தான் மதன்.

சீனி சுப்பிரமணியம் குடும்பம், மதன், நீருஜா ஆகியோர் புறப்படப் போகின்றனர். ''மதன்... அந்த பக்கமா கடலுக்குள்ள ஷெல்லுகள் விழுது ரவுன்ஸுகளும் வருதுபோல, இந்த மூலையைப் பிடிச்சு நகருவம்'' சொன்னார் சுப்பிரமணியம். இடையிடையே கடலுக்குள் ஷெல்லுகள் வீழ்ந்து நீர் பொங்குவது தெரிகிறது. தருணம் தப்பினால் மரணம் என்பதாய் மக்கள் ஊடுகளை பார்த்து நகர்கிறார்கள்.

ஒரு ரியூப்பிலே நீருஜாவை அமர வைப்பதற்காய் அவளை தூக்கினான் மதன், அடுத்து ரியூப்பிலே சுப்பிரமணியத்தின் மனைவியும் பிள்ளைகளும் ஏறி இருக்கின்றனர். மதனும், சுப்பிரமணியம் ஐயாவும் ஆளுக்கு ஒரு ரியூப்பை தள்ளியபடி தண்ணீருக்குள்ளால் நகர்கின்றார்கள். நந்திக்கடலின் மறுபக்கம் கேப்பாப்பிலவு தெரிகிறது. இவ்வாறு போய்கொண்டிருக்கும்போது சிலர் நடுவிலேயே நிற்க வேண்டிய இக்கட்டான நிலை வேறு. நந்திக் கடலிலே மீன் பிடிப்பதற்கு என, முன்பு தடிகள் ஊன்றி வலைகள் கட்டப்பட்டிருந்தன. அவ்வாறான தடிகளில் ரியூப் குத்தி காற்று இல்லாமல் போனதால் பயணம் செய்ய முடியாமல், காயப்பட்டவர்களையும் அந்தரப்பட்டு தூக்கியபடி கரையை நோக்கி செல்பவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். இடையிடையே கடலில் ஷெல் வீழ்ந்தால் சிலர் பயத்திலேயே மேலும் பயணிக்காமல் கரை திரும்பி வட்டுவாகல் பக்கமாக நடக்கின்றார்கள். சுப்பிரமணியம், மதன் ஆட்கள் ஒருவாறு இதோ நடுப்பகுதிக்கு வந்து விட்டார்கள்.

''சுப்பிரமணியம் அண்ணை அந்தப் பக்கம் ஷெல் விழுது கொஞ்சம் வளைஞ்சு இதால போவமா?'' ரியூப்பை தள்ளியபடியே கேட்டான் மதன். ''ஓம் மதன் அந்த சனமும் திரும்பி இந்தப் பக்கம்தான் வருது நாங்களும் அப்படியே போவம்'' சுப்பிரமணியமும் சம்மதிக்க இரண்டு ரியூப்புகளும் வட்டுவாகல் பக்கமாக திரும்பியது. நேரம் பிற்பகல் இரண்டு மணி இருக்கும்.

''அப்பா ஷெல்விழுமா அப்பா பயமா இருக்கு...'' அழுதது சுப்பிரமணியத்தின் பன்னிரண்டு வயதுப் பிள்ளை. ''ஷெல் வராது பிள்ளை இருங்கோ...'' ஆறுதல்படுத்தினார் சீனி சுப்பிரமணியம். இப்போது அவர்கள் ஆழமான பகுதிக்கு வந்துவிட்டனர். நீரில் நடக்கக்கூடிய ஆழம் இல்லை. ஆழம் அதிகம். சுப்பிரமணியமும், மதனும் நீந்தியபடியே ரியூப்பை தள்ளினார்கள். அது மிகவும் சிரமமாக இருந்தது. இருப்பினும் ரியூப்பை பிடித்தபடி நீந்தியபடி உந்தித் தள்ளினார்கள் ''கஷ்டமா இருக்கா மதன்?'' மதனை பார்த்து நீருஜா கேட்டார். அப்போது தான் அது நடந்தது. நான்கைந்து எறிகணைகள் திடீர் திடீரென அங்கு விழுந்தன. துப்பாக்கி ரவைகளும் வலம் வந்தன. ''மதன் இங்காலை தள்ளு... இங்காலை தள்ளு'' சுப்பிரமணியம் ஐயா கத்தினார். அவன் தள்ளிக்கொண்டிருக்கும் போது அந்த ரியூப்போடு விழுந்தது ஒரு எறிகணை. எதுவும் அறியாத நிலை. இன்னுமொரு ஆட்லெறி எறிகணையும் வேகமாய் வீழ்ந்தது. தண்ணீர் மேலெழும்பியது. மதன் மூழ்கினான். ரியூப்பிலே காற்று இல்லாமல் போனது. சுப்பிரமணியம் தவிர அவரின் குடும்பத்து ஏனையவர்கள் தாக்குதலில் சிக்குண்டு மூழ்குகின்றனர். இதோ நீருஜா தன்னை மறந்து அந்த ரியூப்பை அணைத்தபடி மூழ்குகிறாள். அவளின் நெஞ்சை ஊடறுத்து ஓர் எறிகணைச் சிதறல் போயிருக்கிறது. நந்திக் கடலிலே அந்த ரியூபின் மேலால் அவளின் குருதி சிவப்பாக தெரிகிறது.

மதனுக்கு துளியளவு சுயநினைவு இருக்கிறது போல. கண்களில் நூலளவு பார்வை இருக்கிறது போல. ரியூப்போடு மூழ்கிக்கொண்டிருக்கும் நீருஜா அவன் கண்களுக்கு மங்கலாகத் தெரிகிறாள். அவனின் உயிரும் பிரியப்போகிறது. கழுத்தோடும், நெற்றியிலும் அவனுக்கு எறிகணைச் சிதறல் பட்டிருக்கிறது. வாயிலே வார்த்தைகள் வரவில்லை. மனது நீருஜா என அவளை அழைக்கிறது. மதனின், நீருஜாவின் சடலங்கள் அந்த ரியூப்போடு சேர்ந்து நந்திக்கடலில் மூழ்கின்றன.

***

அந்தப் பொழுதுகளை நினைத்து படி தனியே அழுதுகொண்டிருந்த சுப்பிரமணியம் ஐயா, தன்னை சந்திக்க யாரோ வந்திருப்பதாக நலன்புரி நிலைய ஒலிபெருக்கி அழைத்ததும் விழித்துக்கொள்கிறார்.

# 'டுவெல்கோ' யாழ்ப்பாணத்தில்....

(12D பக்கத் தொடர்ச்சி)

யாளர் தமது காணியில் வீடு ஒன்றைக் கட்டிக்கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை நிறுவனத்துடன் செய்து கொள்வர். ஒப்பந்தத்தின் பெறுமதி மற்றும் கட்டி முடிப்பதற்கான கால அளவு முதலிய விவரங்களும் அதில் தரப்பட்டிருக்கும்.

பின்னர் உள்ளூர் அதிகாரிகளின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிப்பதற்கான திட்டங்களை நிறுவனம் தயாரிக்கத் தொடங்கும். மேலும் வாடிக்கையாளருக்குத் தேவைப்படின் வங்கிக் கடன்களுக்கு அவசியமான ஆவணங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபடும்.

இங்கே குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஓர் அம்சம் என்னவென்றால் யாழ்ப்பாணத்திலுள்ள 'டுவெல்கோ' வாடிக்கையாளர்கள் விடயத்தில் அவர்கள் தமது வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு இந் நிறுவனத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களாகிய ஹற்றன் நெஷனல் வங்கி விசேட வீடமைப்புக் கடன் பொதியொன்றை வழங்க ஆயத்தமாக இருக்கின்றது என்பதாகும்.

'வுட் பீல்ட்' பிரைவேற் நிறுவனமானது 'டுவெல்கோ' வின் ஓர் இணைந்த நிறுவனமாகும். டுவெல்கோவுக்கு சகலவித இணைப்பு தேவைகளையும் - உதாரணமாகக் கதவு மற்றும் ஜன்னல் சட்டங்கள் மற்றும் அதன் கட்டுமாணப் பணிகளுக்குத் தேவையான வேறு எந்த மரவேலைகளையும் வழங்குகின்றது.

மேலும் தமது வீடுகளில் தரமான மரவேலைகளைச் செய்யவிரும்பும் 'டுவெல்கோ' தவிர்ந்த வாடிக்கையாளர்களுக்கும் 'வுட்பீல்ட்' தன் சேவைகளை வழங்கத் தயாராய் இருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமது வாடிக்கையாளர்களுக்கு, கொழும்பில் மேற்கொள்ளப்படும் அதே கட்டட தராதரம் மற்றும் தகுதிகள் வழங்கப் படும் என்பதை தாங்கள் உறுதிசெய்வதாக திரு.ஜோன் தெரிவித்தார்.

Dwellco வின் கிளை அலுவலகம், **'பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்'** என்ற முகவரியில் அமைந்துள்ளது.


அங்கு அதிகாரிகளைச் சந்தித்து அல்லது தொலைபேசியில் விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

திரு.ஜோனும் அவரது அலுவலர்களும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் வர்த்தக சந்தையில் வரும் 18 ஆம் திகதியிலிருந்தும் 20ஆம் திகதிவரை இருப்பார்கள். அவர்களை சந்தித்து உங்கள் காணியில் உங்கள் வீட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பாக ஆலோசியுங்கள்.

***



# இளவயதில் சொட்டை விழ காரணம் என்ன?



**கேள்வி:** வயது 27. பெண். திருமணமாகி ஒரு வயதுக் குழந்தை உள்ளது. எனது பிரச்சினை என்னவென்றால்- நான் என்னை எதிலும், எவருக்கும் குறைந்தவள் -குறைவான தகுதி உள்ளவள் என்று எண்ணுவது தான். இப்படி தன்னைத் தாழ்வாக எண்ணுவதன் காரணமாக-மற்றவர்களோடு சுமுகமாக பழகவோ, பேசவோ முடியாது. சதா 'சோக' மனோ நிலையில் இருக்கின்றேன். இப்படியான மனோநிலையில் எனது குழந்தையையோ-கணவரையோ நேசிக்க முடியவில்லை. சிலவேளைகளில் அழுகை அழுகையாக வருகிறது. உறவுகள் எல்லாம் பொய், இப்படி பொய்யான வாழ்க்கை வாழ்ந்து பிரயோசனமில்லை என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது. எனது திருமணத்தின் பின்னர் என் பெற்றோரும் என்னுடன் அதிகம் உறவு கொண்டாடுவதில்லை. எனது கணவரின் சகோதரிகள் சிறிய விஷயத்துக்கும் எனக்கு அறிவுரை கூறுவது என்னால் பொறுக்க முடியாது. கோபம் வருகிறது. எனது கோபத்தை அவர்கள் மீது காட்ட முடியாமல் எனது குழந்தையை அடிப்பேன். எனது கணவரோடு மனம் விட்டு பேசமுடியாமல் தவிக்கின்றேன். அவர் நன்றாக படித்தவர், அழகானவர். சில வேளைகளில் அவருக்கு நான் பொருத்தமானவள் இல்லை என்று தோன்றுகின்றது. ஆனால், என் கணவரும் சரி அவரது சகோதரிகளும் சரி என்னை நன்றாக கவனிக்கின்றார்கள். திருமணத்துக்கு முன்னர் நல்ல வேலையிலிருந்து-திருமணமாகிய பின்னர் வேலையை விட்டு விட்டேன். நான் கற்ற கல்வி வீணாகி விட்டது என்று சில வேளைகளில் எண்ணத் தோன்றுகிறது. தேவையில்லாமல் சிறு விஷயத்துக்கும் கணவரோடு சண்டை பிடிப்பேன். எனக்கு என்ன நடந்து விட்டது? இது நோயா? உங்கள் ஆலோசனை வேண்டுகின்றேன்.

**பதில்:** உங்களது பிரச்சினை எவ்வளவு காலமாக இருக்கின்றது என்று நீங்கள் சொல்லவில்லை. உங்களுக்கு ஒருவயதில் குழந்தை இருப்பதால் - உங்கள் பிரச்சினை உங்கள் கர்ப்ப காலத்தில் மற்றும் பிரசவத்தின் பின்னர் ஏற்பட்ட ஹோர்மோன் மாற்றங்களால் ஏற்பட்டிருக்கலாம் என்று அனுமானிக்கத் தோன்றுகிறது. மேலும் குழந்தை ஒன்றைப் பெறுவது, அதனைப் பராமரிப்பது என்பவை ஒரு தாய்க்கு நிறைய வேலைப்பளுவையும், மனச்சுமையையும் பொதுவில் தருகின்றது. இவற்றுக்கு நாளாந்த வாழ்க்கையில் ஈடு கொடுக்க முடியாமல் நீங்கள் மனம் உடைந்து போயிருக்கின்றீர்கள். உங்கள் மனோநிலை மாற்றங்கள் (MOODS) ஏற்படுத்திய பிரச்சினைதான் இது.

உங்களைச் சுற்றி நீங்கள் போட்டுக் கொண்ட வட்டத்திலிருந்து வெளியே வாருங்கள். மற்றவர்களோடு மனம் விட்டுப் பேசுங்கள். இறுக்கத்தை தளர்த்துங்கள். உங்கள் மனதில் உள்ளவற்றை- மனம் திறந்து பேசக் கூடிய நம்பிக்கையான ஒருவருடன் அளவளாவுங்கள். உங்கள் எண்ணங்களை கணவரோடு பகிர்ந்து கொள்ளுங்கள். இது உங்களது மன இறுக்கத்தை தளர்த்தும். இப்படி மனம் விட்டுப் பேசுவதால் - நீங்கள் தீர்க்க முடியாத பிரச்சினைகள் என்று எண்ணுகின்ற பல விஷயங்களுக்கு முடிவு காண முடியும். உங்கள் மனதுக்கு பிடித்த காரியங்கள், பொழுதுபோக்குகளில் ஈடுபடுங்கள். இது உங்கள் மனநிலையை உயர்த்தும். மனதில் ஏற்படும் உணர்ச்சிகளை (MOODS) மாற்றும். இப்படி ஒரு சில வாரங்கள் முயன்று பாருங்கள். அப்படி எது வித பலனும் கிடையாவிடில் நிச்சயம் ஒரு உளவள ஆலோசனையை பெறுவது நல்லது.

**கேள்வி:** வயது 27 எழு மாத கர்ப்பமாக இருக்கின்றேன். எனக்கு 'தலசீமியா' THALASSAEMIA என்ற இரத்த குறைவு நோய் இருக்கிறது. எனது கணவருக்கு எதுவித குறைபாடும் இல்லை. கர்ப்ப காலத்தில் என்போன்றோர் எத்தகைய உணவுகளை உட்கொள்ள வேண்டும்? இந்த இரத்த குறைபாடு எனது குழந்தைக்கும் பரவக் கூடுமா?

**பதில்:** தலசீமியா (THALASSAEMIA) என்கின்ற இரத்தக் குறைபாட்டு நோய் (ANAEMIA) பரம்பரை பரம்பரையாக பரவக் கூடியது. இந்த நோயில் இரத்தச் சத்து HAEMOGLOBIN - தனது அமைப்பில் குறைபாடு கொண்டிருப்பதால்-இலகுவில் கரைந்து விடுகிறது. இதனால்தான் இரத்த குறைபாடு ஏற்படுகிறது. இரத்த குறைபாடு அதிகமாகும் போது இரத்தத்தை ஏற்றி-பிரச்சினையை தீர்க்கலாமே ஒழிய-நோயை முற்றாக குணமாக்க முடியாது. பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் வழக்கத்திலேயே ஓரளவு இரத்த குறைபாடு ஏற்படுவதுண்டு. மேலும் கர்ப்பகாலத்தில் ஏற்படும் STRESS னால் - எலும்பு மச்சையில் இரத்தகரைவு(HAEMOLYSIS) ஏற்படலாம். எனவே கர்ப்பகாலத்தில் வழக்கமாக உபயோகிக்கும் இரும்புச் சத்து மாத்திரைகளோடு போலிக் அசிட் (FOLIC ACID) மாத்திரைகளையும் சேர்த்து உபயோகிப்பது அவசியம். அடுத்ததாக இந்த நோய் தொற்றுநோயோ, உணவுக் குறைப்பாட்டால் ஏற்படும் நோயோ அல்ல. எனவே உணவு முறைகளில் மாற்றம் ஏற்படுத்துவதால் இந்த நோயினின்று குணமடைய முடியாது. உங்களைப் பொறுத்தவரையில் உங்களுக்கு தலசீமியா நோயிருந்தாலும் உங்கள் கணவர் குறைபாடு எதுவும் இல்லாதிருப்பதால்-உங்கள் குழந்தைக்கு இந்தநோய் ஏற்படக்கூடிய சாத்தியம் 50 வீதமே. அப்படி ஏற்பட்டாலும் தலசீமியா நோயின் உக்கிரம் குறைந்த THALASSEEMIA CARRIER ரககோளாறுதான் ஏற்படுவதற்கு சாத்தியமுண்டு.

இந்த நோய் பற்றிய ஒரு சிறுகுறிப்பையும் இங்கு தா விரும்புகின்றேன். அதாவது இந்த நோய் உலகில் மத்தியதரைக் கடல் சேர்ந்த நாடுகளில் தான் அதிகளவில் காணப்படுகிறது. இலங்கையில் குருநாகல் மாவட்ட பகுதியில் அதிகம் காணப்படுகிறது.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.

இந்த நோயுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்வதால் - அதுவும் தங்கள் சொந்த உறவுக்குள் திருமணம் முடிப்பதால்- பரம்பரை பரம்பரையாக இந்த நோய் காவி செல்ல உதவுகின்றனர். GENETIC COUNSELLING என்ற வைத்திய ஆலோசனையை திருமணத்திற்கு முன்னர் மணமகன் மணமகள் பெறுவதன் மூலம் - இந்நோய் பரம்பரை வழியில் பெருகுவதை கட்டுப்படுத்தலாம்.

**கேள்வி:** வயது 24 ஆண் எனக்கு தலையில் மயிர் குறைவு. பார்த்தால் மயிர் ஐதாக இருக்கிறது. டாக்டரிடம் சென்றபோது அவர் MINOXDIL பூச்சு மருந்தும், FINCAR மாத்திரைகளும் உபயோகிக்க தந்தார். ஒருமாதம் உபயோகித்த போது தலையில் மயிர் புதிதாக வளர்ந்திருந்தது தெரிந்தது. தொடர்ந்து உபயோகிக்கும் படி மருத்துவர் கூறினார். எனது மருத்துவ நண்பரோ- எனக்கு தரப்படும் மாத்திரை அபாயகரமானது என்று பயமுறுத்துகின்றார். உங்கள் அபிப்பிராயம் வேண்டுகின்றேன்.

**பதில்:** பொதுவாகவே தலைமயிருக்கு இரண்டு தொடக்கம் மூன்று வரை வருட வாழ்க்கை வட்டம் உண்டு. ஒவ்வொரு தலைமயிருக்கும் மாதம் சராசரி ஒரு சென்றிமீற்றர் வளர்ச்சி உள்ளது. எந்தக் கணத்திலும் 90 வீதமான தலைமயிர் வளர்ந்துகொண்டேயிருக்கி றது. மற்ற 10 வீதம் RESTING PHASE என்கின்ற ஓய்வு நிலையில் உள்ளது. இவை 3-4 மாத காலத்தில் உதிர்ந்து விடுகின்றது. இந்த உதிர்ந்த இடத்தில் புதிதாக மயிர்கள் முளைக்கின்றன. பொதுவாக கூறினால் தினமும் தலைமயிர்கள் உதிர்ந்து கொண்டுதான் உள்ளன. இந்த தலைமயிர் வாழ்க்கை வட்டம் ஆண், பெண், சிறுவர் எல்லோருக்கும் பொதுவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது ஆனால், சிலருக்கு இந்த பத்து வீதத்தைவிட -அதிகமான அளவில் உறங்கு நிலையிலிருக்கும் தலைமயிர்கள் உதிரத் தொடங்கினால் தட்டை, மொட்டை, சொட்டை ஏற்படுகின்றது. இதனை BALONESS என்றும் ALOEPECIA என்றும் கூறுவர். தலைமயிர் அதிகமாக உதிர்வதற்கு பல காரணங்கள் உள்ளன. கடுமையாக நோய் வாய்ப்பட்டால், அல்லது பாரிய சத்திரசிகிச்சை நடைபெற்றிருந்ததால்-3-4 மாதம் கழித்து அதிகளவில் மயிர் உதிரும்- இந்த நோய், சிகிச்சையால் ஏற்பட்ட STRESS என்ற அழுத்தம் காரணமாகவே இப்படி நடைபெறுகிறது. ஆனால், இந்த உதிர்வு தற்காலிகமானது. சிலருக்கு ஹார்மோன் பிரச்சினையால் மயிர் அதிகளவில் உதிர நேரிடலாம். தைராய் ஹார்மோன் கோளாறு பெண், ஆண் ஹார்மோன் கோளாறு என்பவை இதற்கு காரணமாகின்றன. ஹார்மோன் பிரச்சினைக்கு சிகிச்சை பெற்று இதனை தவிர்க்கலாம்.

பிரசவத்தின் பின்னர் மூன்று மாதத்தின் பின்னர் -மயிர் உதிர்வு தெரிவதுண்டு. உண்மையில் -கர்ப்பகாலத்தில் -உள்ள ஹார்மோன் மாற்றத்தில் பிரசவத்திற்குமுன்னர் வழக்கமானமயிரின் வாழ்க்கை வட்டத்தில் உதிரவேண்டிய அந்த 10 வீதமான மயிர்கள்-உதிராமல் இருந்து பிரசவத்தின் பின்னர் உதிர்கின்றன. ஒருசில மருந்துகள் நீரிழிவு, அதி உயர் அழுத்தம், சிகிச்சையில் உபயோகமாகும் மாத்திரைகள், கருத்தடை மாத்திரைகள், அதிகளவில் விட்டமின் 'A' மாத்திரைகள் உட்கொள்ளுதல் என்பவற்றால் கூட மயிர் அதிகளவில் உதிர்கின்றன.

தலையில் ஏற்படும் பங்கசு தொற்றுகள் கூட மயிர்களை உதிர்க்கும்

இதுதவிர-நாகரிக மோகத்தில் தலைமயிர்களை இழுத்து வாரி இழுத்து கட்டுவதால், மற்றும் PERMS எனப்படும் தலைமயிர் உறுதியாக்கும் சிகிச்சை முறைகள் கூட அதிகளவு மயிர் உதிரலுக்கு காரணமாகின்றன.

இன்னொரு வகையான மயிர் உதிர்தல் ஆண்களுக்கு, அவர்களின் ஹோர்மோன்களின் காரணத்தால் ஏற்படும். அநேகமாக இந்த வகை உதிரல் பரம்பரையானது. HAIR LINES எனப்படும் முன்நெற்றி மயிர் கோட்டில் அல்லது நடுத்தலையில் இந்த உதிர்தல் நடைபெறுகிறது. இதனை MALE PATTERN BALDNESS என்பார்கள். இதேபோல் சில பெண்களுக்கு பரவலாக தலைமயிர் உதிர்ந்து ஐதாக இருக்கும்.

மயிர் உதிர்தல் சிகிச்சையில் வைத்தியர் முதலில் மேற்கூறிய காரணங்களை ஆராய்ந்து அதற்குரிய சிகிச்சையை செய்யவேண்டும். இந்த சிகிச்சையில் நோயாளியின் வயது முக்கியமாக உங்கள் விஷயத்தில் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். உங்களுக்குத் தரப்பட்ட FINCAR என்ற மருந்து பெண் ஹோர்மோன் சம்பந்தப்பட்டது. ஆண் ஹோர்மோன் உடலில் அதிகமாக இருக்கும் போது ஆண்மைக்குரிய ஒரு விஷயம் மயிர் உதிர்தலாகும். எனவே பெண் ஹார்மோன் மாத்திரைகளை உபயோகித்து-ஆண் ஹார்மோனின் பாதிப்பை குறைப்பதால் தலைமயிர் உதிர்தல் குறைவாகும் என்ற அடிப்படையில் உங்களுக்கு இந்த மாத்திரை தரப்பட்டுள்ளது. ஆனால், இந்த மாத்திரையை தொடர்ந்து எடுத்தால் தான் பயன்பெறுவீர்கள். நிறுத்திவிட்டீர்கள் என்றால் திரும்பவும் மயிர் உதிரத் தொடங்கிவிடும். அப்படி தொடர்ந்து எடுத்தால் அடுத்த பிரச்சினை ஆரம்பமாகின்றது. உங்கள் ஆண்மைக் குணம் மறைந்து போகும். மார்பகம் பெரிதாகும். விதை (TESTIS) தனது விந்து உற்பத்தியாக்கும் தொழிலை மறந்து -மலட்டுத் தன்மையடைய ஏதுவாகும். HAIR என்கின்ற மயிரை காப்பாற்ற போய் HEIR என்கின்ற பரம்பரையையே இல்லாமலாக்கிவிடும். அதனால் தான் உங்கள் மருத்துவ நண்பர் உங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். அதுபோல் உங்களுக்கு பூசத்தந்த MINOXIDIL திரவமும் -தொடர்ந்து உபயோகிக்கும் வரைதான் பலனளிக்கும். நிறுத்திவிட்டீர்கள் என்றால் திரும்பவும் மயிர் உதிரத் தொடங்கிவிடும். இது மாத்திரைபோல் பக்கவிளைவுகளைத் தராவிடினும் பயனற்றதென்பது என் கருத்து. *

முத்துக்கண்ணு- முகம் முழுக்க வியர்வை முத்துக்கள் பூத்திருக்க தன்னுடைய அலுவலக சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்தார். எதிரே அவரின் கட்சியில் முக்கியஸ்தர்கள் பலர்

## குறுங்கதை

இருண்டுப்போன முகங்களுடன் எதுவும் பேச முடியாமல் அமர்ந்திருந்தனர். கட்சியின் பிரதான அங்கத்தவர்களால் மு. க. என அன்போடு அழைக்கப்படும் முத்துக்கண்ணு தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு அவர்களைப் பார்த்தார்.

''நம்மோட கட்சியில ஒரு சாதாரண பதவியிலயிருந்த கல்யாணகுமார் இப்போ வேறொரு கட்சியில சேர்ந்து வேட்பாளராகி இந்தத் தேர்தல்ல வாக்கு கேட்கிறது ஒண்ணும் அதிசயமில்லை. ஆனா என்னை விட அவனுக்கு மட்டும் எப்புடி இவ்வளவு செல்வாக்கு வந்திச்சி... போற போக்கபார்த்த அவன் முதலாவதும் நான் ரெண்டாவதுமா வந்திடுவேன் போல இருக்கு... தயவு செஞ்சி உள்ளதை உள்ளபடி சொல்லுங்க இது எப்புடி நடந்திச்சி...''

மு. க. வின் வலது கையும் நாட்டு நடப்புகளை விரல் நுனியில் வைத்திருப்பவருமான கண்ணுசாமி மெதுவாக வாய் திறந்தார்.

''கல்யாணம் லயத்துலயிருந்து வந்தவன். அவனுக்கு ஆளுங்களோட கஷ்ட நஷ்டமெல்லாம் தெரியும். நீங்க தோட்டத்துல டீ மேக்கராயிருந்து அரசியலுக்கு வந்தீங்க. நீங்களும் எல்லாம் தெரிஞ்சவர்தான். ஆனா நம்ம ஆளுங்களை சரியான முறையில

# மக்கள் என் பக்கம்



கவருவது எப்புடின்னு அவன் கிட்ட நாம பாடம் கத்துக்கணும். நீங்க... முதல்ல மாகாண உறுப்பினரா தெரிவானப்போ உருப்படியா வாக்களிச்சவங்களுக்கு எதுவும் செய்யலை. அப்புறம் போனா போகட்டும், நம்மாளுதானேன்னு உங்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பினா நீங்க புதுஷா பங்களா கட்டினீங்களே தவிர உங்களுக்கு ஓட்டுப் போட்டவங்களுக்கு எதுவுமே செய்யலை. அதை செய்யறேன், இதை செய்யிறேன்னு பத்திரிக்கையில அறிக்கை விட்டீங்க. விளம்பரத்துல பெரிசா சிரிச்சிக்கிட்டு கைக் காட்டுனீங்க... லயன் காம்பறாக்கள் தீப்பிடிச்சி தொழிலாளிங்க 'ஐயோ...' ஐயோன்னு கத்திக்கிட்டிருந்தப்போ நீங்க ஐரோப்பாவில

சுத்திக்கிட்டிருந்தீங்க. மலையகத்தை அபிவிருத்தி செய்யப் போறதா விளம்பரத்துல சொல்லிட்டு அமெரிக்கவுல உங்க மகனோட கல்யாணத்தை அமோகமா செஞ்சிக.... ஆனா அவன் கல்யாணம் தோட்டத் தொழிலாளிங்களோடேயே இருந்தான். அவங்களுக்கு ஒண்ணுன்னா ஓடோடிப் போனான். தன் கைகாசைப் போட்டு அவங்க கண்ணீரை துடைச்சான்... இப்போ... தேர்தல்களத்துல இருக்கான்.... இதுதான் உண்மை... சொத்து, சுகம் உங்கபக்கமிருக்கு. ஆனா மக்கள் அவன் பக்கம் இருக்கங்க...''

அப்போது- மு. க. வின் மனைவி வீட்டிலிருந்து அவர் கைபேசிக்கு பேசினாள்.

''ஹலோ நான்தான் பேசுறேன். இப்போ எங்க இருக்கீங்க...''

''கட்சி கூட்டத்துல இருக்கேன்.. ஏன் கரைச்சல் பண்ணுறே...?

''ஆமா கட்சி கூட்டத்தில இருக்கீங்களோ இல்ல எவள் மடியில இருக்கீங்களோ? எப்புடியாவது போங்க. இவ உங்க சின்ன மகள் வரவர என் பேச்சை கேட்கவே மாட்டேன்னுறா...?''

''ஆமா அவ உன் பேச்சை கேட்க மாட்டேன்னுற, எனக்கு ஓட்டுப் போட்டவனுங்க என் பேச்சை கேட்க மாட்டேன்னுறாங்க.!

''என்ன உளர்றீங்க. இவ டியூஷன் போறேன், பிரண்டைப் பார்க்கப் போறேன்னு வெளியில போனா நேரத்துக்கு வர மாட்டேன்னுற... ரூம் கதவை மூடிக்கிட்டடு என்ன செய்யிறான்னு ஒண்ணுமே புறியமாட்டேன்னுது...''

''எனக்கே இந்த வீணாப் போன அரசியல் பத்தி எதுவும் விளங்கமாட்டேன்னுது.... இவ்வளவு நாளும் நிம்மதியா பதவியில இருந்தேன். மறுபடியும் வாக்குப் போடுங்கன்னு எப்புடி உதவி கேட்கிறதுன்னு தெரியாம குழம்பி போயிருக்கேன். நீ வேற கால நேரம் தெரியாம போன் போட்டு கரைச்சல் குடுக்குறே...''

பட்டென தொலைப்பேசி தொடர்பை துண்டித்து விட்டு மறுபடியும் அவர்களை நோக்கினார் மு. க. ''பழைய கதையெல்லாம் பேசி காலத்தை ஓட்டவேணாம். என்னால பதவியில்லாம ஒரு நிமிஷம் கூட உயிர் வாழ முடியாது. அதுக்காக என்ன விலைன்னாலும் நான் தர தயாராயிருக்கேன்....''

அப்போது- அவரின் மற்றொரு வலது கையான காத்தமுத்துவாய் திறந்தார்.

''கல்யாணம் இந்த தேர்தல்ல நிற்காட்டி வேற வழியில்லாம சரி போனால் போகட்டும்னு மறுப்படியும் உங்களுக்கே ஓட்டு போடலாம்.. ஆனா.. அது சாத்தியாமுன்னு தெரியலை...''

''சாத்தியமாக்கணும்... அவனுக்கு எவ்வளவு பணம் குடுத்தா... ஒதுங்குவான்....''

''பணம் குடுத்தாலும் இல்ல அவன் கால்ல விழுந்தாலும் அவன் அசரமாட்டான். இதுக்கு ஒரேயொரு வழிதான் இருக்கு...''

''என்ன... சீக்கிரமா சொல்லு.....''

''அவனை போட்டுட வேண்டியதுதான்....''

''என்னது கொலையா.....?

''கொலைன்னு யார் சொன்னது. ஒரு விபத்து.. அரசியல்ல இதெல்லாம் சகஜம்....''

''சரி... எவ்வளவு செலவானலும் பரவாயில்லை. உடனடியா விபத்து ஏற்படட்டும். என்னோட பதவிக்காக எத்தனை விபத்து நடந்தாலும்பரவாயில்லை....''

பாலா சங்குபிள்ளை

அந்த ரூங்கில் தோப்பினருகே அவர்கள் சந்தித்தார்கள்.

''இங்கப்பாரு மஞ்சுளா அது தேர்தல் நேரம் இந்த நேரத்துல நான் என்னதான் செயிறது....''

''அதெல்லாம் உங்க பாடு. எனக்கு இன்னைக்கே பதில் சொல்லுங்க எனக்கு பணம், அந்தஸ்து, கெளரவ மெல்லாம் வேணாம். இதெல்லாம் எனக்கு அலுத்துப் போச்சி குடிசையாயிருந்தாலும், அக்பா கஞ்சி குடிச்சிக்கிட்டிருந்தா போதும்.''

''அப்படின்னா நான் என்ன சொன்னலும் கேட்பியா...''

''உங்களோட உத்தரவுக்காக காத்திருக்கேன்....''

அவன் அவளருகில் வந்து அவள் காதில் கிசுகிசுத்தான்.

மு. க. தன்னுடைய கட்சி அலுவலகத்தை அடைந்தார். கடந்த ஒருவாரமாக அவர் கொழும்பில் தேர்தல் சம்பந்தமான பேச்சு வார்த்தை, கொடுக்கல் வாங்கலில் மிகவும் பிஸியாக இருந்தார். கொடுக்க வேண்டியது, பெற வேண்டிய தெல்லாம் முடியவே மூன்று நாட்கள் ஆகிவிட்டன. அங்கேயும் கல்யாணகுமார் பற்றிதான் பேச்சு வந்தது. அவனுக்கு நாளுக்கு நாள் தோட்டத் தொழிலாளர்களின் செல்வாக்கு கூடுவது பற்றி மு. க. விடமே விசாரித்ததால் அவர் தர்மசங்கத்துடன் நெளிந்தார். உடனடியாக 'விபத்து' நடக்காவிட்டால் அவர் பதவிக்கே 'ஆபத்து' என்பதை நன்கு விளக்கிக்கொண்டார்.

மு. க. அலுவலகத்தை அடைந்த போது கண்ணுசாமி மட்டும் இறுகிய முகத்துடன் இருந்தார்.

''என்ன கண்ணுசாமி.... மற்றவங்க எல்லாரும் எங்க? ஏன் தலையில இடி விழுந்தமாதிரி உட்காந்திருக்கீர்....?''

''என் தலையில இடி விழலை. நீங்கதான் உங்க தலையில் நீங்களே மண்ணை அள்ளி போட்டுக்கிட்டீங்க. நாங்க 'விபத்தை' ஏற்பாடு செய்யிற நேரம் பார்த்து கல்யாணகுமாரை மாப்பிள்ளையாக்கிட்டிங்க. இனி மாமன் ஜெயிச்சா என்ன மாப்பிள்ளை ஜெயிச்சா என்ன எல்லாம் ஒரே குடும்பம்தானே. கடைசியில நாங்கதான் வேற எங்கேயாவது காவடி தூக்கணும்...''

மு. க. அதிர்ச்சியுடன் கண்ணுசாமியைப் பார்த்தார்.

''என்ன சொல்லுறீர்... என் மகளுக்கா கல்யாணம்....?''

''என்னங்க விளையாடுறீங்களா, உங்க மகள் மஞ்சுளாவுக்கும் கல்யாணகுமாருக்கும்தான் டவுன் கோயில்ல கல்யாணம். உங்க முதலாவது, ரெண்டாவது சம்சாரமெல்லாம் அங்தான் இருக்கங்க. இங்க என்ன நடக்குன்னு நோட்டம் பார்க்கவா நீங்க வந்தீங்க. நல்ல அரசியல் நாடகம் தான் ஆடுறீங்க. நடக்கட்டும் நான் வாரேன்!''

கண்ணுசாமி வேகமாக வெளியேற மு. க. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க தீடிரென ஏற்பட்ட அதிர்ச்சி விபத்தால் அப்படியே சிலையேன வெகுநேரம் அமர்ந்திருந்தார்.

- யாவும் கற்பனை

★★★★

---

## இந்தியாவின் இதயம்.....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடையாக அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். அவர்களை அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் பார்க்கிறது. இப்போது அரசாங்கத் துக்கும் மாவோயிஸ்ட்டுகளுக்கும் நடக்கும் சண்டை, வள வளங்களைத் தனியாருக்குக் கொடுக்கலாமா? வேண்டாமா? என்பதற்குத்தானே தவிர, இன்றைய அரசாங்கத்தை, ஆயுதப் போராட்டத்தின் மூலம் கவிழ்ப்பதற்கான முயற்சி அல்ல'' என்று மனித உரிமையாளர்கள் சொல்கிறார்கள்.

இதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளாவிட்டாலும் நாடாளுமன்றத் தில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், 'இயற்கைத் தாது வளம் மிக்க பகுதிக ளில் இடதுசாரித் தீவிரவாதம் தொடர்ந்து வளருமானால், முதலீடுக ளுக்கான சூழ்நிலை நிச்சயம் பாதிக்கப் படும்' என்கிறார்.

பழங்குடியின மக்கள் வாழும் மலைப் பகுதியில் உள்ள தாது வளங் களை கம்பெனிகள் எடுத்துக்கொள்ள காண்ட்ராக்ட் கொடுக்கும்போதுதான் மாவோயிஸ்ட்டுகள் மல்லுக்கு வருகி றார்கள். அப்பகுதி மக்கள் தங்களது நிலங்களை கொடுக்க மறுக்கிறார்கள். அதை மாவோயிஸ்ட்டுகள் ஆதரிக்கி றார்கள். எனவேதான் ஊரே சேர்ந்து எதிர்ப்பைக் காட்டுகிறது!

இன்னொரு பக்கத்தில்...

மாவோயிஸ்ட்டுகளின் செயல்பாடு கள் அவர்களுக்கு மிகப் பெரிய கெட்ட பெயரைத்தான் அதிகம் விதைத்து வருகின்றன. ஆட்குமுறைக்கு எதிராகப் பழங்குடி மக்கள் வில், அம்பு, வாள் ஏந்திப் போராடுவது காலங்கால மாக நடந்து வருகிறது. மேற்கு வங்க நக்சல்பாரி எழுச்சிக்கு முன்னதாகவே பழங்குடியினர் இப்படித்தான் தங்களது எதிர்ப்பைக் காட்டி வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கான கோரிக் கையை ஜனநாயகப்படுத்தி அனைத்து மக்களது பிரச்சினையாக மாற்ற முயற்சிக்காமல் 'அழித்தொழிப்பில்' இறங்கியதால், பழங்குடியினரது நோக்கம் சிதைக்கப்பட்டுவிட்டது. சாகச வாதம், கொரில்லாப் போர் முறை, மக்கள் யுத்தம் ஆகிய எந்த வார்த்தை யைச் சொல்லிப் போராடினாலும், தங்களது லட்சியத்தை வெகுஜன மக்களுக்கு உணர்த்தாதவரை அனைத் துமே 'வெறும் வன்முறை' யாகத்தான் பார்க்கப்படும். கண்ணி வெடிகள் மூலமாக பொலீஸாரை வரிசையாக மாவோயிஸ்ட்டுகள் கொல்வது மக்களிடம் இருந்து அவர்களை இன்னும் அந்நியப்படுத்தும்.

'அரசாங்கம் தவிர, வேறுயாரும் ஆயுதம் வைத்திருக்கக் கூடாது, அது நியாயமான நோக்கமாக இருந்தாலும்' என்பதே இன்றைய உலகநியதியாக ஆகிவிட்டது. ஆயுதங்களைக் கையில் வைத்திருந்தாலே நீங்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்பதுதான் இதன் உண்மையான அர்த்தம். இந்த நிலையில் மாவோயிஸ்ட்டுகள் தங்களது வழிமுறைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டம் இது. 'மலை உச்சி மீது ஜாக்கிரதையாக அமர்ந்துகொண்டு யானைச் சண்டையைப் பார்ப்பதுபோல' மாவோயிஸ்ட்டுகளைத் தூண்டிவிடாமல் ஒருமுகப்படுத்த வேண்டிய கடமை மனித உரிமையாளர்களுக்கு இருக்கிறது.

மேற்கு வங்கம், சத்தீஸ்கர், ஒரிஸ்ஸா, பீகார், மகாராஷ்ரா, ஆந்திரா, ஜார்கண்ட் ஆகிய ஏழு மாநிலங்களும் 'நக்சலைட் ஸ்டேட்ஸ்' என்று அழைக்கப்படுகின்றன!

'சிதம்பரத்துக்குத் துணிச்சல் இருந்தால் ஜார்கண்ட் மாநிலத்துக்குள் எப்போதும் வரலாம்' என்று அந்த மாநில மாவோயிஸ்ட்டுகள் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள்.

மாவோயிஸ்ட்டுகளின் செயல்பாடு கள் குறித்து, இந்திய உள்துறைச் செயலாளர் ஜி.கே.பிள்ளை சொல்லியி ருக்கும் கருத்து, ''இன்றைக்கோ அல்லது நாளைக்கோ இந்தியாவைக் கைப்பற்ற வேண்டும் என்று மாவோயிஸ்ட்டுகள் நினைக்கவில்லை. 2050இல் அதை அவர்கள் செயல்படுத்தி விடுவார்கள். ஒரு நாட்டின் ராணுவப் படையைப்போன்றே அவர்கள் பயிற்சி எடுத்துள்ளனர். எந்தத் தாக்குதல் நடத்தினாலும் அது குறித்து முழுமையாக விவாதிக்கின்றனர். அவர்களது இந்துப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு ஒரு நாட்டின் ராணுவம் மேற்கொள்வதைப்போன்று உள்ளது.''

மாவோயிஸ்ட்களின் சமீபத்திய தாக்குதல்கள்...

2007 மார்ச் 15 - சத்தீஸ்கரில் 54 பொலீஸார் மரணம்.

2008 ஜூன் 29 - ஒரிஸ்ஸாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 38 பொலீஸார் மரணம்.

2009 ஜூலை 12 - சத்தீஸ்கர் மாநிலத்தில் 29 பொலீஸ் அதிகாரிகள் கொலை.

2010 பெப்ரவரி 15 - மேற்கு வங்க ராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 24 ராணுவ வீரர்கள் பலி.

ஏப்ரல் 4 - 11 பொலீஸார் மீது ஒரிஸ்ஸாவில் தாக்குதல் நடத்திக் கொலை.

ஏப்ரல் 6 - சி.ஆர்.பி.எப். வீரர்கள் 77 பேர் சத்தீஸ்கரில் கொலை.

நன்றி: இணையம்

# தண்ணீரில் மூழ்கிய கண்ணீர்

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள் ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம் பெற்ற சம்பவங்களை பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்த தொடரில் யோ. புரட்சி எழுதிய 'தண்ணீரில் மூழ்கிய கண்ணீர்' என்ற உண்மைக் கதை இவ்வாரம் பிரசுரமாகிறது. அடுத்த வாரம் 'கச்சேரி சடையன்' என்ற புனை பெயரில் வெளிவருகிறது 'புதிய உறவு' என்ற உண்மைக்கதை.



-யோ. புரட்சி

“என்னாலை தாங்க ஏலாம இருக்கு மதன். கொஞ்சம் தண்ணி தாங்க. உங்களைக் கும்பிட்டுக் கேட்கிறன்.'' கெஞ்சினாள் நீருஜா. அவனால் என்ன சொல்ல முடியும். காயப்பட்டுக் கிடக்கும் அவளுக்கு எப்படித்தான் தண்ணீர் குடிக்க கொடுக்க முடியும். மருத்துவம் தெரிந்த ஒருவர் சொல்லியிருந்தார்; அவளுக்கு ஒரு மணிநேரம் கழித்துத்தான் தண்ணீர் கொடுக்கும்படி. நீருஜா, மதனின் மடியில் தலை வைத்து முனங்கியபடி படுத்து இருக்கிறாள். அவளின் தலையை தடவியபடியே மதன் சொன்னான் ''என்ர செல்லம் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளம்மா. நான் தண்ணி தாறன் கொஞ்சம் பொறுங்க செல்லம்'' என்று அவளின் முகத்தை சிறுபிள்ளை பார்ப்பதுபோல பார்த்தபடி முனங்கினாள் நீருஜா.

அவர்கள் இப்போது இருப்பது நந்திக்கடற்ரை ஓரத்தை அண்டிய ஒரு வெட்டை வெளி. ஒன்றரை முழ ஆழமான மூடப்படாத பதுங்கு குழிக்குள் தான் இருவரும் இருக்கிறார்கள். மேலே ஐ.சி.ஆர்.சி தறப்பாள் இருந்தபோதும் அந்த மதியநேர வெயிலுக்கு சூடு நன்றாகவே தாக்கியது. அதுவும் காயத்தோடு கிடக்கும் நீருஜாவினால் அதை தாங்கவே முடியவில்லை. காயத்தின் வேதனை ஒருபுறம், சூடு மறுபுறம். தாகம் வேறு. எல்லாமாய் சேர்ந்து அவளை துன்புறுத்தின. அவள் காயப்பட்டு இப்பொது ஒரு மணித்தியாலம் கடந்துவிட்டது. ஆனால், அவளின் காயத்துக்கு இதுவரை எந்தவித மருந்தும் கட்டப்பட்டு இருக்கவில்லை. ஒரு சாரத்துணித்துண்டினால் காயம் சுற்றப்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. நேற்று இரவுவரை நந்திக் கடலுக்கு அப்பாலுள்ள முள்ளிவாய்க்கால் பிரதான வீதியருகோடு இருந்தார்கள். இரவுவேளை அங்கே பாரிய அளவில் எறிகணைகளும், துப்பாக்கி ரவைகளும் சூழ்ந்து கொண்டன. அந்த இடமிருந்து எல்லோரும் நான் முந்தி, நீ முந்தி என உடுத்தியிருந்த உடைகளோடு நந்திக் கடற்கரை ஓரமாக தஞ்சம் அடைந்தனர். இரவு வந்த களைப்பினால் எல்லோரும் வெறும் பற்றைகளுக்குள் படுத்து விட்டனர். பாயோ, தறப்பாளோ, உணவோ எதுவும் அவர்களுக்கு இல்லை.

அவ்விடத்திலிருந்தபடியே ஏது செய்யலாம் என காலை வேளை யோசித்துக்கொண்டு இருந்தபோதுதான் அவர்கள் எதிர்பாராத விதமாக அந்தப் பனைமரத்தின் மேலே ஓர் ஆட்லெறி எறிகணை திடீரென மோதி வெடித்தது. அவர்களும் சில குடும்பங்களும் எந்தவித பாதுகாப்பும் இன்றி பனைக்கு கீழேதான் இருந்தார்கள். பனையிலே மோதிய ஆட்லெறி எறிகணையில் சிதறல்கள் பூமிநோக்கி வேகமாய் பாய்ந்ததில் அவ்விடத்திலேயே மூவர் கொல்லப்பட்டனர். அதில்தான் நீருஜாவின் முழங்கையில் ஒரு சிறுதுண்டு பட்டு அவள் காயமடைந்தாள். அவ்விடத்திலேயே நிறைய குருதி போய்விட்டது. கையை அசைக்கவே முடியவில்லை. எல்லோரும் சடலங்களையும் காயப்பட்டவர்களையும் தூக்கிக்கொண்டு அறிந்தவர் தெரிந்தவர்களின் சிறு பதுங்கு குழிகளுக்குள் தஞ்சமடைந்தனர். மதனும் நீருஜாவை ஒரு பிள்ளையை தூக்குவது போல தூக்கிக்கொண்டு ஏதாவது இடம் இருக்கின்றதா என்று தேடினான். ஓர் இடமும் தென்படவில்லை. அவளைத் தூக்கிக்கொண்டு இடம் தேடுவதற்கு உண்மையிலேயே அவன் உடலில் சக்தி போதாமல்தான் இருந்தது. நேற்று மதியம் குடித்த கஞ்சிக்கு பிறகு எதுவுமே வயிற்றுக்குப் போகவில்லை. நீருஜாவை ஆறுதல்படுத்தி ஒரு பணங்கூடல் நிழலில் படுக்க வைத்தான். அதுகூட முள்ளும், சருகும் நிறைந்த இடம். காயப்பட்ட அவளை எப்படி அதிலே படுக்க வைப்பது. அவன் ஜம்பர் எனப்படும் காற்சட்டை அணிந்து அதன் மேலே சாரத்தை கட்டி இருந்தான். இந்த சாரத்தை கழற்றி அதை விரிப்பாக விரித்து அவளை மெதுவாக படுக்க வைத்தான்.

''நீருஜா செல்லம் எழும்பி இருக்காதேங்கோ. ரவுண்ஸ்கள் கண்டபாட்டில வருகுது. நான் உடனே ஒரு பங்கர் உள்ள இடமாய் பார்த்து வந்து உங்களை தூக்கிக்கொண்டு போறேன்'' அவளின் கன்னத்தைத் தடவி சொல்லியபடியே பதுங்குகுழி உள்ள இடம் தேடிப் புறப்பட்டான். பல இடங்களில் தேடினான். அப்போது தான் இந்த கொட்டகை கண்ணில் தென்பட்டது. இந்த கொட்டகையில் இருந்த குடும்பம் நேற்று இரவு அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு போய்விட்டது. இடம் வெறுமையாக இருந்தது. ஐ.சி.ஆர்.சி. தறப்பாள் கொட்டகை. ஐந்து அடி நீளமும், ஒன்றறை அடி முழு ஆழமுமான மூடப்படாத பங்கரும் இருந்தது. அதற்கு பக்கத்திலே இரத்த வாடையும் வீசியது. நிலத்திலே உறைந்து போயிருந்த குருதியை இலையான்கள் மொய்ப்பது தெரிந்தது. இந்த இடத்திலே எறிகணை வீழ்ந்து யாரோ இறந்தோ, காயப்பட்டோ இருக்க வேண்டும் என்பது மதனுக்குத் தெரிந்தது. இருப்பினும் அந்த இடத்தைவிட வேறு இடமும் அவனுக்கு தென்படவில்லை. விரைந்து நீருஜாவிடம் போனான். அவளை மெதுவாகத் தூக்கினான். இடையிடையே வந்துகொண்டிருந்த ரவைகளுக்கு சின்னச் சின்ன மரங்களில் பாதுகாப்பு எடுத்தபடியே அந்தக் கொட்டகைக்கு வந்து சேர்ந்து விட்டான். அவளை அந்த பதுங்கு குழிக்குள் படுக்க வைத்தான். உண்மையிலேயே அதற்குள் நீட்டி நிமிர்ந்து படுக்க முடியாது. அவள் தன் காலை முழங்காலுடன் மடித்தபடியே மதனின் மடியில் படுத்துவிட்டாள். கையிலிருந்து குருதி வாடை வீசுகிறது. இந்த நேரத்தில்தான் விசுவமடுவில் கண்ணகி வைத்தியசாலை என்ற ஒன்றை நடத்தி வந்த பத்மநாதன் எனும் டாக்டர் தன் குடும்பத்துடன் அந்த இடத்துக்கு இடம்பெயர்ந்து வந்தார். அவரும் இடம்தேடி அலைந்தபோது இவர்களை கண்டுவிட்டார். அவர் டாக்டரே தவிர, அவரிடம் ஒரு பன்டேஜ் துண்டுகூட அப்போது இருக்கவில்லை. மனைவி, பிள்ளைகளோடு உடுத்த உடையோடு ஓடிவந்திருக்கிறார். மனிதாபிமானமுள்ள டாக்டர் போல, தன் கைக்குட்டையை எடுத்து, கொட்டகைக்குள் குறையாக இருந்த ஓடிக்கலோன் போத்தலில் இருந்து கொஞ்சம் ஓடிக்கலோனை நனைத்து காயத்தைத் துடைத்தார். பின்பு மதனின் சாரத்தை கிழித்து ஒரு கட்டுப்போட்டு விட்டு, ஒரு மணி நேரம் கழித்து தண்ணீர் கொடுக்குமாறு கூறிச் சென்றார். அவர் சொன்னபடி நீருஜாவின் கை காயத்துள் ஓர் எறிகணை சிதறல் துண்டு இருக்கிறதாம். அதற்கு உடனே சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். ஆனால் முள்ளிவாய்க்கால் பகுதியிலே எந்த வைத்தியசாலைகளும் இயங்கவில்லை. ஏற்கனவே நெருக்கடிகளுக்குள் இயங்கிய அரச வைத்தியசாலையிலே இருந்த காயப்பட்டவர்களை உறவினர்கள் அழைத்து சென்றுவிட்டனர். இது இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி. காயப்பட்டவர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற நிலை. எவ்வித மருந்தும் இல்லாமல் பலர் அங்கும் இங்கும் செத்து சடலங்களாக கிடக்கின்ற நிலை.

மதனும் நீருஜாவும் யார்? இந்த நிமிடம் வரை புனிதமான காதலர்கள் அவர்கள். உண்மையிலேயே எந்தவித களங்கத்தையும் அவர்களின் காதலிலே கடவுள்கூட கண்டுவிட முடியாது. மதனின் ஊர் றெட்பானா வள்ளுவர் புரம். நீருஜா தொட்டியடி விசுவமடுவை சேர்ந்தவள். இருவரும் ஒரு தனியார் நிறுவனத்திலே வேலை செய்தபோது காதல் கொண்டவர்கள். புனிதமான காதல்; ஒழுக்கமான காதலும்கூட. எத்தனையோ இடங்களில், தனியே எவரும் காணாத சந்தர்ப்பங்களில் சந்தித்த போதும் ஒரு முத்தம்கூட இட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். எல்லாம் திருமணத்தின் பின்தான் என்பது அவர்கள் தீர்மானிப்பு. ஏதோ ஒரு நிம்மதியாக அங்கே வாழ்ந்து வந்த போதுதான் அவர்கள் இருந்த ஊர் மீது யுத்தமழை பொழிய ஆரம்பித்தது. ஊரோடு சேர்ந்து ஓடினார்கள். நீருஜாவின் அம்மா அப்பா எல்லாம் சிறு வயதிலேயே இறந்துவிட்டார்கள். அவள் தன் சித்தப்பா குடும்பத்துடன் வாழ்ந்தவள். இடம்பெயர்ந்து சுதந்திரபுரம் பகுதிக்கு கூட்டமாக போனார்கள்.

அப்படி போனபின்பு உடையார்கட்டில் இருந்த சில சாமான்களை எடுத்துவர தனது சைக்கிளில் நீருஜா வந்தாள். வந்து பொருட்களை எடுத்துக்கொண்டு போனபோது சித்தப்பா குடும்பம் அங்கு இல்லை. அந்தப் பகுதியை அண்டி எறிகணைகள் வீழ்ந்திருந்தன. அந்த இடமிருந்த குடும்பங்கள் எல்லாம் அங்கும் இங்குமாக சிதறி ஓடிவிட்டன. ஆயிரமாயிரமாய் செறித்திருந்த மக்கள் கூட்டத்துள், அந்த அவசர பொழுதிலே சித்தப்பா குடும்பத்தை கண்டுப்பிடிக்கும் முயற்சியில் தோல்வியுற்றாள் நீருஜா. மக்கள் பொருத்தொகையாக தேவிபுரம் நோக்கி ஓடிக்கொண்டிருக்கவே இவளும் தன் சைக்கிளை உருட்டியபடியே தேவிபுரம் நோக்கி நகர்ந்தாள். மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் இடம்மாறும் நிலைமையும் அப்போது இருந்தது. தேவிபுரம் போனபோது தான் அங்கே அவளுக்கு ஓர் ஆறுதல். அவளின் காதலன் மதனை ஏதோ கடவுள் காட்டினமாதிரி கண்டுவிட்டாள். அன்றைய நிலைமையில் அவளின் பாதுகாப்புக்கு அவனைவிட வேறுவழி இல்லை. அவனுக்கும் வேறு ஆறுதல் இல்லை. ஏனெனில் அவனின் அம்மா, அப்பா, தங்கைகள் சுதந்திரபுரம் ஊடாக அரச பகுதிக்கு சென்று விட இவன் மட்டுமே தனித்திருந்தான். இருவரும் ஒன்றாய் இருக்க தீர்மானித்தனர். ஆனால் ஒரு கெட்ட எண்ணமும் அவர்களுக்குள் உருவாகியதில்லை.

(19ஆம் பக்கம் பார்க்க)

# விக்ருதி வருட பலன்

# ராசி பலன்




அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்

பொதுவுடைமை மற்றும் திடீர் புரட்சிக்கெல்லாம் சொந்தக்காரரான நீங்கள் அன்புக்கு கட்டுப்பட்டவர்கள். பொதுவாக சட்ட திட்டங்களை மதிக்கும் நீங்கள் நியாயவாதிகளை காப்பாற்ற சில மாற்று வழிகளையும் கையாளுவீர்கள். உங்களின் பாக்யாதிபதியும் பிரபல யோகாதிபதியுமான குருபகவான் தன் நட்சத்திரத்தில் வலுவடைந்திருக்கும் நேரத்தில் விக்ருதி ஆண்டு பிறப்பதால் எதையும் சாதித்துக் காட்டுவீர்கள். பணம் வரும். வீட்டில் நிலவி வந்த வாக்கு வாதங்கள், திருப்தியற்ற சூழ்நிலை மாறும். கன்னிப் பெண்களே! உங்களின் கவனம் உயர்கல்வி மீது திரும்பும். தள்ளிப்போன கல்யாணம் நல்ல விதத்தில் முடியும். மாணவர்களே! நீங்கள் ஆசைப்பட்ட கல்லூரியில் உயர்கல்வியை தொடருவீர்கள். சிலருக்கு அயல்நாடு சென்று படிக்கும் வாய்ப்பும் கிட்டும். உத்யோகஸ்தர்களே! சூழ்ச்சியாலும் மறைமுக எதிரிகளாலும் அவமானத்தை சந்தித்தீர்களே, இனி உங்கள் கை ஓங்கும். இழந்த சலுகைகள், பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். கலைஞர்களே, புது வாய்ப்பு கிடைத்து அதிகம் சம்பாதிப்பீர்கள். இந்த விக்ருதி வருடம் உங்களின் சாதனைப் பட்டியலை நீட்டிக்கும்; பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும்.




கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2

அறிவுப்பூர்வமாக எதையும் யோசிக்கும் நீங்கள் அவ்வப்போது உணர்ச்சிவசப்படுவதும் உண்டு. தலைவிதி அவ்வளவு தான் என்றிருக்காமல் அதை வென்று புதுயுகம் படைக்க ஓயாமல் போராடுவீர்கள். உங்கள் ராசிக்கு 11ம் வீடான லாப வீட்டில் இந்த விக்ருதி ஆண்டு பிறப்பதால் தடைகள் யாவும் நீங்கும். கொடுத்த இடத்திலிருந்து பணம் வரும். தன, பூர்வ புண்யாதிபதியான புதனின் நட்சத்திரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் திருமணம், சீமந்தம், காதுகுத்து என வீடு களைகட்டும். கன்னிப் பெண்களே! நிஜம் எது? நிழல் எது? என்பதை உணர்வீர்கள். நீங்கள் நினைத்தது நிறைவேறும். மாணவர்களே! இனி புத்தகத்தை தொட்டால் தூக்கம் வராது. மதிப்பெண் உயரும். வியாபாரிகளே! இதுவரை அடைந்த நஷ்டங்கள், அவமானங்கள் யாவும் நீங்கும். விளம்பர யுக்திகளை கையாண்டு லாபத்தை இரட்டிப்பாக்குவீர்கள். கடையை நவீன மயமாக்குவீர்கள். தை மாதத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். கொடுக்கல்-வாங்கலில் நிம்மதி ஏற்படும். கலைத்துறையினரே, மூத்த கலைஞர்களால் ஆதாயமடைவீர்கள்.




மிருக சீரிடம் 3, 4-ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம்பாதங்கள்

விழுவதெல்லாம் எழுவதற்கே என்பதை அறிந்த நீங்கள் இலக்கை எட்டும் வரை ஓய மாட்டீர்கள். சொல்லாலோ, செயலாலோ மற்றவர்களை காயப்படுத்தாத நீங்கள் பாசத்திற்கு கட்டுப்பட்டவர்கள். உங்கள் ராசிநாதன் புதனின் நட்சத்திரத்தில் விக்ருதி ஆண்டு பிறப்பதால் பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். யோகாதிபதி சுக்கிரனுடன் புதனும் லாபவீட்டில் வலுவடைந்து இருக்கும் போது இந்த ஆண்டு பிறப்பதால் பணவரவு அதிகரிக்கும். உங்களின் எண்ணங்கள் நிறைவேறும். பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிவீர்கள். உங்கள் ராசிக்கு 10வது வீட்டில் இந்த விக்ருதி ஆண்டு பிறப்பதால் உங்கள் அந்தஸ்து உயரும். இதுநாள் வரை நீங்கள் உழைத்த உழைப்பு, சிந்திய வியர்வைக்கெல்லாம் நல்ல பலன் கிடைக்கும். குடும்பத்தில் கடந்த வருடத்தில் ஏற்பட்ட பிரிவுகள், கருத்து வேறுபாடுகள் விலகும். கன்னிப் பெண்களே! புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். வேலையிலிருந்து விலகி சிலர் உயர் கல்வியில் சேர்வீர்கள். வருடப் பிற்பகுதியில் திருமணம் கூடி வரும். மாணவர்களே! விரும்பிய கல்வி நிறுவனத்தில் சேர்வீர்கள். சிலருக்கு வெளிநாட்டில் படிக்க அழைப்பு வரும். வியாபாரிகளே! சந்தை நிலவரத்தை அறிந்து முதலீடு செய்யுங்கள்.




புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் அஞ்சாத நீங்கள், என் கடன் பணி செய்து கிடப்பதே என்றிருப்பீர்கள். மண் மணம் மாறாதவர்களான நீங்கள் கண்டம் தாண்டிப் போனாலும் கலாசாரத்தை மறக்க மாட்டீர்கள். உங்கள் ராசிநாதன் சந்திரன் 9ம் வீட்டில் வலுவாக நிற்கும் நேரத்தில் இந்த விக்ருதி ஆண்டு பிறப்பதால் விரக்தியிலிருந்து விடுபடுவீர்கள். விலகியிருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். பணப்பிரச்சினை மற்றும் சொன்னதை செய்து முடிக்க முடியாத தர்ம சங்கடமான சூழ்நிலையால் சிரமப்பட்டிருப்பீர்கள். வருடம் பிறக்கும்போது உங்கள் யோகாதிபதியான குரு 8ல் மறைந்திருந்தாலும் 2.5.10 முதல் ராசிக்கு 9ம் வீட்டில் ஆட்சிபெற்று அமர்வதால் தள்ளிப்போன காரியங்கள் உடனே முடியும். எதிர்பாராத பணவரவு உண்டு. இழுபறியாக இருந்த அரசு விஷயங்களை வி.ஐ.பிகள் மூலமாக முடிப்பீர்கள். வழக்குகளில் வெற்றியுண்டு. கன்னிப் பெண்களே! வாடி வதங்கியிருந்த உங்கள் உடலும் முகமும் இனி மலரும். திருமணம் உடனே முடியும். அதிக சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கும். வெளிநாடு செல்வீர்கள். மாணவர்களே! ஞாபகசக்தி அதிகரிக்கும். ஆசிரியர்கள் பாராட்டுவார்கள். அரசால் கௌரவிக்கப்படுவீர்கள். வியாபாரிகளே! பரபரப்பாக வியாபாரம் சூடுபிடிக்கும்.




மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்

மற்றவர்களின் குற்றம் குறைகளை முகத்துக்கு நேரே சுட்டிக்காட்டும் நீங்கள், தன்னைச் சுற்றி இருப்பவர்களை வழி நடத்திச் செல்வதிலும் கெட்டிக்காரர்கள். உங்களின் பூர்வ புண்யாதிபதியான குருபகவான் உங்கள் ராசியைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் துவண்டு கிடந்த நீங்கள் சுறுசுறுப்பாவீர்கள். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் எப்போது பார்த்தாலும் சண்டை சச்சரவு என்றிருந்ததே! நிம்மதியாக சாப்பிடக் கூட முடியவில்லையே! இனி உங்கள் பேச்சுக்கு மதிப்பு கூடும். கன்னிப் பெண்களே! நீங்கள் ஆசைப் பட்டபடி நல்ல மணமகன் வந்தமைவார். மாணவர்களே! விளையாட்டால் படிப்பில் நாட்டமில்லாமல் போனதே! இனி படிப்பில் ஆர்வம் பிறக்கும். வியாபாரிகளே! மாறிவரும் நவீன சந்தை நிலவரத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திகைத்து நின்றீர்களே! உத்யோகஸ்தர்களே! மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். கலைத்துறையினரே! வருமானம் உயர வழி பிறக்கும். பெரிய நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும்.




உத்திரம் 2,3,4-ம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்

கனிவான விசாரிப்பால் மற்றவர்களை கவர்ந்திழுக்கும் நீங்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேச மாட்டீர்கள். யோகாதிபதி சுக்கிரனுடன் உங்கள் ராசிநாதனான புதனும் சேர்ந்திருக்கும் நேரத்தில் இந்த விக்ருதி ஆண்டு பிறப்பதால் இனி வெற்றிப் பாதையில் பயணிப்பீர்கள். உங்கள் ராசியை சந்திரன் பார்த்துக் கொண்டிருப்பதால் சோம்பல் நீங்கி, சுறுசுறுப்பாவீர்கள். எந்த காரியத்தையும் இனி தள்ளிப்போட மாட்டீர்கள். தற்சமயம் குரு 6ம் வீட்டில் மறைந்திருப்பதால் செலவு, அலைச்சல், டென்ஷன் அதிகரிக்கும். ஆனால் 2.5.10 முதல் குருபகவான் 7ம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியை பார்க்க இருப்பதால் நேர்மறை எண்ணங்கள் உதிக்கும். குடும்பத்தில் குதூகலம் பிறக்கும். கன்னிப் பெண்களே! அலட்சியத்தால் பாதியிலேயே படிப்பை விட்டீர்களே; இனி முழுமையாக முடித்து நல்ல நிறுவனத்தில் வேலைக்கும் சேர்வீர்கள். திருமணம் முடியும். மாணவர்களே! உயர் கல்வியில் அதிக மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெறுவீர்கள். வியாபாரிகளே! அனுபவமில்லாதவர்களின் ஆலோசனையைக் கேட்டு நஷ்டப்பட்டீர்களே! இனி உங்களின் அனுபவ அறிவால் தொழிலை விரிவுபடுத்துவீர்கள். உத்யோகஸ்தர்களே! 10ம் வீட்டில் கேது தொடர்வதால் பதவி உயர்வு, சம்பள உயர்வு தடைபட்டாலும் போராடி பெறுவீர்கள். கலைஞர்களே! உங்களின் திறமைக்கு வெற்றி உண்டாகும் ஆண்டு.




சித்திரை 3, 4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்

யதார்த்தமான பேச்சால் எல்லோரையும் ஈர்க்கும் நீங்கள் இன, பேதம் பார்க்காமல் எளிமையாகப் பழகுவீர்கள். குரு பகவான் 5ம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியை பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் இந்த விக்ருதி ஆண்டு பிறப்பதால் பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். உங்கள் பாக்யாதிபதி புதன் 7ம் வீட்டில் வலுவாக நிற்கும் நேரத்தில் வருடம் பிறப்பதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். எடுத்த காரியங்களில் வெற்றியுண்டு. பழைய கடன் தீரும். வருமானம் உயரும். இழந்த புகழ், செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். கன்னிப் பெண்களே! ஏழரைச்சனி நடைபெறுவதால் காதல் விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாதீர்கள். பெற்றோரின் ஆலோசனையின்றி எந்த முடிவும் எடுக்காதீர்கள். தள்ளிப் போய்க் கொண்டிருந்த கல்யாணம் நல்லபடியாக முடியும். மாணவர்களே! அதிகாலையில் எழுந்து படிக்கத் தவறாதீர்கள். வியாபாரிகளே! உத்யோகஸ்தர்களே! நேரங்காலம் பார்க்காமல் உழைத்தும் எந்த பயனும் இல்லையே என்று அவ்வப்போது ஆதங்கப் படுவீர்கள். கலைத்துறையினரே! கிடைக்கின்ற வாய்ப்பை தக்கவைத்துக் கொள்ளுங்கள்.




விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

எதிரிக்கும் உதவும் நல்லெண்ணம் கொண்ட நீங்கள், போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும் என எதற்கும் அஞ்சாமல் சமூக அவலங்களைத் தட்டிக் கேட்பீர்கள். உங்கள் சுகாதிபதி சனி பகவான் லாப வீட்டில் நிற்கும் போது விக்ருதி ஆண்டு பிறப்பதால் சவால்களில் வெற்றி பெறுவீர்கள். உங்களின் பூர்வபுண்ணிய ஸ்தானமான 5ம் வீட்டில் இந்த ஆண்டு பிறப்பதால் உங்களின் எதிர்பார்ப்புகள் எல்லாம் பூர்த்தியாகும். 4ல் அமர்ந்து கொண்டு உங்களை புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கும் குருபகவான், 2.5.10 முதல் 5ம் வீட்டில் அமர்வதால் உங்களின் நீண்டகால ஆசைகள் நிறைவேறும். குழந்தை பாக்யம் கிடைக்கும். கன்னிப் பெண்களே! காதலில் குழப்பம், கல்வியில் தோல்வி, கல்யாணத்தில் தடை என அடுக்கடுக்கான பிரச்சினைகளால் நிலைகுலைந்து போனீர்களே! இனி நல்லதே நடக்கும். வீட்டில் பார்க்கும் வரனே முடியும். மாணவர்களே! படிப்பின் மீதிருந்த வெறுப்பு நீங்கும். உயர்கல்வியில் அதிக மதிப்பெண் பெற்று பெற்றோரை தலைநிமிரச் செய்வீர்கள். வியாபாரிகளே! தொட்டதெல்லாம் துலங்கும். உத்யோகஸ்தர்களே! சம்பளம் உயரும்.




மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

உலகம் ஒரு சந்தை மடம் என்பதை உணர்ந்த நீங்கள், அதிகம் ஆசைப்பட மாட்டீர்கள். யாருக்காகவும் அஞ்சவும் மாட்டீர்கள். அதிர்ஷ்டத்தை நம்பாமல், உழைப்பால் உயர்வீர்கள். உங்கள் ராசிக்கு சுக வீடான 4ம் வீட்டில் சந்திரன் நிற்கும்போது இந்த விக்ருதி வருடம் பிறப்பதால் உங்களின் அணுகுமுறையை இனி மாற்றிக் கொள்வீர்கள். 5ம் வீட்டில் சுக்கிரனும், புதனும் வலுவடைந்திருக்கும் போது இந்த ஆண்டு பிறப்பதால் விலையுயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். பணத்தட்டுப்பாடு குறையும். குடும்பத்தினரை கலந்தாலோசித்து எந்த முடிவையும் எடுங்கள். 8.5.10 முதல் உங்கள் தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றாற்போல நல்ல வரன் அமையும். சகோதர, சகோதரிகளிடம் நிலவி வந்த கருத்து வேறுபாடுகள் மாறும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பொருளுதவி கிடைக்கும். கன்னிப்பெண்களே! சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். மாணவர்களே! கடைசி நேரத்தில் படிக்கும் பழக்கத்தைக் கைவிடுங்கள். வியாபாரிகளே, கடையை வேறு இடத்திற்கு மாற்றுவீர்கள். வேலைச்சுமை அதிகமாகும். கலைஞர்களே, கிடைக்கிற வாய்ப்பு சின்னதாக இருந்தாலும் தக்க வைத்துக் கொள்ளுங்கள்.




உத்திராடம் 2,3,4-ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதங்கள்

சுற்றி வளைக்காமல் எடுத்த எடுப்பிலேயே எண்ணங்களை வெளிப்படுத்தும் நீங்கள், சுற்றி இருப்பவர்களை வழிநடத்திச் செல்வதிலும் வல்லவர்கள். உங்களின் பிரபல யோகாதிபதிகளான சுக்கிரனும் புதனும் சுகஸ்தானமான 4ம் வீட்டில் கேந்திரபலம் பெற்றிருக்கும் நேரத்தில் இந்த விக்ருதி ஆண்டு பிறப்பதால் திடீர் யோகம் உண்டாகும். வசதி, வாய்ப்புகள் பெருகும். மறைந்திருந்த நீங்கள் இனி பிரகாசிப்பீர்கள். எவ்வளவு சம்பாதித்தும் கைக்கும், வாய்க்குமே சரியாகப் போனதே, இனி கொஞ்சம் எடுத்து வைக்கும் அளவிற்கு வருமானம் கூடும். கன்னிப்பெண்களே! நிரந்தர வேலை கிடைக்கும். மாதவிடாய்க் கோளாறு, ஒற்றைத் தலைவலி நீங்கும். கண்ணுக்கு அழகான கணவர் வந்தமைவார். மாணவர்களே, உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். நினைவாற்றல் பெருகும். சோம்பல் நீங்கும். வியாபாரிகளே! குறைவான வாடகையில் பெரிய கடை அமையும். உத்யோகஸ்தர்களே! மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். கலைஞர்களே! கற்பனைத் திறன் அதிகரிக்கும். அயல்நாட்டு நிறுவனங்கள் வாய்ப்பளிக்கும்.




அவிட்டம் 3,4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதங்கள்

ஈரப் பார்வையால் எல்லோரையும் தன்வசம் ஈர்க்கும் ஆற்றல் கொண்ட நீங்கள், எப்போதும் இதயத்திலிருந்து பேசுவீர்கள். சோதனைகள் பல வந்தாலும் அஞ்சாமல் அதை எதிர்கொள்வீர்கள். உங்கள் பூர்வபுண்யாதிபதியின் நட்சத்திரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் அடிமனதிலிருந்த பயம் நீங்கும். சோம்பல், விரக்தி விலகும். வாழ்ந்து காட்ட வேண்டுமென்ற எண்ணம் வரும். ராசிக்கு 2ம் வீட்டில் சந்திரன் நிற்கும்போது வருடம் பிறப்பதால் உங்கள் பேச்சிலிருந்த முரட்டுத்தனம் நீங்கி இனி கனிவாகப் பேசுவீர்கள். முடங்கிக் கிடந்த நீங்கள் இனி நிமிர்வீர்கள். உங்களின் பலம், பலவீனத்தை உணர்ந்து அதற்கேற்ப புதுத் திட்டங்கள் தீட்டுவீர்கள். சந்தேகத்தாலும், ஈகோ பிரச்சினையாலும் கருத்து மோதல்களாலும் பிரிந்திருந்த கணவன்மனைவி இனி சேர்வீர்கள். கன்னிப்பெண்களே! கசந்த காதல் இனிக்கும். நினைத்தபடி கல்யாணம் முடியும். வியாபாரிகளே! மற்றவர்களை நம்பி ஏமாந்தீர்களே. கடை வாடகையைக் கூட தரமுடியாதபடி தொழில் முடங்கியதே, இனி அவற்றிலிருந்து மீள்வீர்கள். உத்யோகஸ்தர்களே, உங்களை ஓரங்கட்ட நினைத்த உயரதிகாரியின் தந்திரத்தை முறியடிப்பீர்கள். கலைஞர்களே; வசதி, வாய்ப்புகள் உயரும்.




பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

வெற்றி உதிக்கும் போது விதித்ததை உணரும் ஆற்றல் கொண்ட நீங்கள், தடை வந்த போதும் தளர மாட்டீர்கள். சுக்கிரனும், புதனும் உங்கள் ராசிக்கு 2ம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த விக்ருதி ஆண்டு பிறப்பதால் சமயோசித புத்தியுடன் இனி நடந்து கொள்வீர்கள். உங்கள் ராசிநாதன் குருபகவான் 12ல் மறைந்திருக்கும் நேரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் அநாவசிய செலவுகளை தவிர்க்கப் பாருங்கள். 2.5.10 முதல் உங்கள் ராசிநாதனான குருபகவான் ஜென்ம குருவாக உங்கள் ராசிக்குள்ளேயே வந்து அமர்வதால் மனதில் பயம், சின்ன சின்ன போராட்டம் என்று வந்துபோகும். 28.5.10 முதல் உங்கள் யோகாதிபதி செவ்வாய் வலுவடைவதால் தந்தை மற்றும் சகோதரரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மகனுக்கு இருந்த நோய் விலகும். கன்னிப்பெண்களே! காதல் விவகாரங்களில் கவனம் தேவை. படிப்பில் தடை வரக்கூடும். மாணவர்களே! உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். வியாபாரிகளே! ஆர்வக் கோளாறால் முதலீடு செய்து சிக்கிக் கொள்ள வேண்டாம். இருப்பதை வைத்து சமாளிக்கப் பாருங்கள். கூட்டுத் தொழில் வேண்டாம். வைகாசி, ஆவணி, தை மாதங்களில் லாபம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக அயல்நாடு சென்று வருவீர்கள்.

# சுடுகாட்டில் மேடை...
# அழகிகளின் ஆட்டம்

வாழ்கிற காலத்தில் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என அதகளப்படுத்தும் மனிதர்களுக்கு, ஆவி பிரிந்துபோனால் அப்புறம்



அழகிகளின் ஆட்டம்

எந்த குஷியும் கிடையாது என்பது தெரியும்..! ஆனால், இந்தக் கூற்றைப் பொய்யாக்கும் விதத்தில் ஆவிகளைக் குஷிப்படுத்த என்றே ஒரு 'ஸ்பெஷல் குத்தாட்ட நிகழ்ச்சி' சுடுகாட்டில் நடைபெறுகிறது. சமீபத்தில், உத்தரப் பிரதேசத்தில் நடந்த இந்தக் கூத்து, வட இந்தியாவையே கலகலக்க வைத்துவிட்டது! உத்தரப்பிரதேசத்தின் தெய்வீக நகரங்களில் முக்கியமானது காசி எனப்படும் வாரணாசி. பனாரஸ் எனவும் அழைக்கப்படும் இங்கு கங்கை நதி ஓடுகிறது. இதன் கரைகளில் ஒன்றாக அமைந்திருப்பது 'மணிகர்னிகா காட்' எனப்படும் சுடுகாடு. சமீபத்தில், இயக்குநர் பாலாவுக்கு தேசியவிருது பெற்றுத்தந்த 'நான் கடவுள்' திரைப் படம், மணிகர்னிகாவில்தான் படமாக்கப்பட்டது. வட இந்தியாவின் புகழ்பெற்ற சுடுகாடான இங்கு, 24 மணி நேரமும் பிணங்கள் எரிந்துகொண்டே இருக்கும். இந்த எரியும் சிதைகளுக்கு இடையில் நடந்த சுடுகாட்டுத் திருவிழாவில்தான் (மார்ச் 21, 22ஆம் திகதி) நாம் சொன்ன செம கலக்கல்! மணிகர்னிகா காட் முழுவதும் சீரியல் லைட் மற்றும் டிஸ்கோ லைட்டுகளால் அலங்கரிக்கப்பட்ட சுடுகாட்டின் உள்ளே, ஆங்காங்கே எரியும் சிதைகளுக்கு நடுவே ஒரு மேடை அமைத்து, ஸ்பீக்கர்கள் அலறின. அதில் வெளியாகிக் கொண்டிருந்த இந்தி மற்றும் போஜ்புரி படப் பாடல்களின் இசைக்கேற்ப, வளைந்து நெளிந்து மேடையில் குத்தாட்டம் போட்டபடி கிளாமர் உடைகளுடன் பல அழகிகள். சுடுகாட்டில் சுமார் 600 பேர் இதை கூடி ரசித்தபடி இருக்க, பிணத்தை எரிக்கும் வெட்டியான்களுக்கும் அன்று, ஒரு ஜாலியான நாள்தான். ஆனால், அவர்கள் அனைவரின் ரசனைகளுக்கும் மேடையில் விருந்தளித்து கொண்டிருந்தவர்கள், 20 வயது முதல் 40 வயதுக்குட்பட்ட செக்ஸ் தொழிலாளிகள்.

''இந்தச் சுடுகாட்டில் இறந்தவர்களைக் கொண்டுவந்து எரித்தால், முக்தி கிடைத்து, அவர்கள் உயிருடன் இருந்தபோது செய்த பாவங்கள் நீங்கி விடும். அப்படிப்பட்ட இடத்தில் நடக்கும் இந்தத் திருவிழாவில் பாவப்பட்டவர்களாகிய நாங்கள் வந்து ஆடினால், எங்களுக்கும் முக்தி நிச்சயம். அடுத்த ஜென்மத்தில் பாலியல் தொழிலாளியாக அல்லாமல், நல்ல பிறவியாக வாழும் பலன் எங்களுக்குக் கிடைக்கும். இதற்காகவே, நான் அலகாபாத்திலிருந்து வந்து கடந்த ஐந்து வருடமாக இந்த திருவிழாவில் ஆட்டம் போடுகிறேன்...'' என சொன்னார் 30 வயதான சப்னா.

''இதில் கலந்துகொண்டால், எங்கள் தொழிலும் அமோகமாக இருக்கும். நான் கடந்த 6 வருடங்களாக இதில் ஆட்டம் போட ஆரம்பித்ததில் இருந்து, என்னிடம் சுகம் அனுபவித்துவிட்டு எவரும் காசு கொடுக்காமல் ஏமாற்றிச் சென்றதில்லை. பொலீஸ் தொல்லைகளும் இல்லை.இனியும் வருடம் தவறாமல் இந்த திருவிழாவில் கண்டிப்பாக ஆட்டம் போடுவேன்...'' - இது மிர்சா பூரில் தொழில் செய்துவரும் 28 வயதான முஸ்கான்.

இப்படி ஆட்டம் போட வந்தவர்களுடன் விழாவை வேடிக்கை பார்க்க மட்டுமே வந்த செக்ஸ் தொழிலாளிகளும் உண்டு. அதுபோல் வந்த 40 வயது



எரியும் பிணங்கள்

நீத்து, ''இங்கு நான் 10 வருடங்கள் தொடர்ந்து ஆடி விட்டேன். எனவே, இந்த முறை நான் வேறு ஒரு காரணத்துக்காக எனது மகள்களுடன் வந்தேன். சில மாதங்களுக்கு முன் எனது ஒரே மகனை பாம்பு கடித்துவிட்டது. எமனின் வாசல் வரை சென்று திரும்பிவந்தான் என் மகன். அப்போது இந்த நிகழ்ச்சிக்கு வருவதாக நேர்த்திக்கடன் செய்துகொண்டேன். அந்த வேண்டுதலை தீர்க்கவே இங்கே வந்தோம்'' என உணர்சிவசப்பட்டார். இந்த விழா தொடங்குவதற்கு முன், 'மணிகர்னிகா காட்டின் நுழைவு வாயிலில் அமைந்துள்ள ஸமஷானேஷ்வர் மஹாதேவ் சிவன் கோயிலில் சிறப்பு பூ[ஜை] நடைபெறும். அதில் கலந்து கொள்ளும் விலை மகளிர்கள், தாங்கள் கொண்டு வந்த இனிப்பு, கஞ்சா, மதுபான போத்தல்களை சிவனுக்குப் படைத்து வழிபடுவார்கள். பின்னர்தான் ஆர[ம்பமாகும்] அது ஆட்டம்.''பலநூறு ஆண்டுகளாக நடந்து வரு[ம்] திருவிழா இது. அந்தக் கா[லத்தில்] இந்தப் பகுதியை ஆண்ட



பாபா நாக்[நாத்]

எனும் சமூகத்து அரசர் இந்த விழாவை தொடங்கிவைத்[தார்]. இன்னும் தொடர்ந்து விழா வருகிறது.இங்கு வாழ்ந்து வ[ந்த] டோம் ராஜாவின் சந்ததியர் வருடம் தவறாமல் இதை ந[டத்தி] வருகின்றனர். தம் பாவங்க[ளைப்] போக்க இங்கு ஆட்டம்போ[டும்] அழகிகள், அதற்காக காசு வாங்குவதில்லை. அவர்கள[ைத்] தேடியும் நாம் போவதில்லை[" என] விழா குறித்து விளக்கம் அ[ளித்தார்] ஸமஷானேஷ்வர் மஹாதே[வ்] கோயிலின் தலைமை பூசா[ரி] பாபாநாக்நாத்.

ஆவிகள் எந்தளவுக்கு குஷியாச்சோ யார் கண்டார்[?] ஜனத்துக்கு குஷியோ குஷி


TAG DER OFFENEN TÜR

Samstag 24 April

Sonntag 25 April

MIT TIEFSTEN PREISEN!!

Samstag: 09:00-17:00 Uhr
Sonntag: 11:00-17:00 Uhr

Gratis Wurst und Getränke für die ganze Familie

Möbel Ferrar
Grosse Auswa
www.moebel-ferra
HINWIL Wässeristr
Tel. 044 93
Täglich offen von 9.00 bis 2
Direkt-Kedit - 6 Monate ohn